விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்சினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை.
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-3550)

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 11 திங்கட்கிழமை (27.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 251

# வீடுகளை கூட்டமைப்பின் தலைவர்களிடம் கேளுங்கள்

## செல்வம் எம்.பி முன் அமைச்சர் மனோ சீற்றம்




**(முல்லைத்தீவு) வீடு கட்டும் பொறுப்பை அமைச்சர் மனோ கணேசனிடம் இருந்து பறித்து மூன்று வருடங்களாக வீடு கட்டிக் கொண்டிருக்கும் அமைச்சர் சுவாமிநாதனிடம் வழங்குங்கள் என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு கோரிக்கையை கடிதம் மூலம் பிரதமரிடம் முன்வைத்தனர் என அமைச்சர் மனோ கணேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.**

வீடுகளைக்கட்டித்தாருங்கள் என்று என்னிடம் கேட்பதை விட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பேச்சாளர் சுமந்திரன் ஆகியோரிடம் தான் கேட்கவேண்டும் என தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வட மாகாண விவசாய அமைச்சர் 23☛

## ஜனாதிபதி செயலணி கூட்டத்தை மீண்டும் நிராகரித்த முதல்வர்

### சம்பந்தனுடன் விரைவில் சந்திப்பு



(கொழும்பு)

வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளவுள்ள நிலையில் கூட்டத்தில் பங்கேற்பதை வடமாகாண முதலமைச்சர் நிராகரித்துள்ளார். 24☛

## முல்லைத்தீவு மீட்பு போராட்டம் அனைவரையும் அணிதிரள அழைப்பு

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு தமிழ் மக்கள், பொது அமைப்புக்கள் அணிதிரண்டு நாளை முல்லை நிலங்கள் மற்றும் கடல் வளங்கள் காலா காலமாக ஆக்கிரமிக்கப்பட்டும் சூறையாடப்பட்டும் வரும் கொடுமைகளுக்கெதிராக முல்லை மாவட்ட செயலகத்தின் முன்றலில் கவனஈர்ப்புப் போராட்டம் நடத்துவதற்கு அறிவித்துள்ளன.

போர்க்காலத்திலும் போரின் பின்னரும் இலங்கை இராணுவம் தமிழ் மக்களின் வேளாண்மை நிலங்களையும் ஆக்கிரமித்துள்ளது. மறுபுறம் அரசின் இராணுவத்தின் அனுசரணையுடன் தென்னிலங்கைச் சிங்கள 23☛

## துப்பாக்கிச் சூட்டில் பெண் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு, மாளிகாவத்தை - ஜும்மா சந்தியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதே சிகிச்சை பலனி 24☛

## மகாவலி அபிவிருத்தி என்னும் போர்வையில் தமிழர் தாயகப்பகுதிகள் ஆக்கிரமிப்பு!

எதிர்ப்பு போராட்டத்தில் அணிதிரள தமிம் மக்கள் பேரவை வேண்டுகோள்

03ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரி - ரணில் - மகிந்தவை வடக்கு அடியோடு நிராகரிக்க வேண்டும்

### ரில்வின் சில்வா வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கட்சியையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியையும் அடுத்த தேர்தலில் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரில்வின் சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.பொது நூலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற கருத்தரங்கில் பங்கு கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் 23☛

## எரிவாயுவின் விலை அதிகரிக்கவில்லை

### அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படுவதாக வெளியான செய்தி உண்மைக்கு மாறானது என வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

12.5 கிலோ கிராம் எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 158 ரூபாயால் அதிகரிக்கப்படுவதாக கடந்த வெள்ளிக்கிழமை செய்தி 24☛

## தொடர்ந்தும் தேசிய அரசே ஐ.தே.கவின் நிலைப்பாடு!

(கொழும்பு)

இரண்டு பிரதான கட்சிகள் இணைந்து ஆட்சி நடத்தி வரும் தேசிய அரசாங்கத்தில் எந்த மாற்றங்களும் ஏற்படாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளு 23☛

## நாளை மாபெரும் போராட்டம்

## மகாவலி அபிவிருத்தி திட்டத்தை முழுமையாக நிராகரிக்கிறோம்!

### மகாவலி எதிர்ப்பு பேரவை அறிவிப்பு

(முல்லைத்தீவு)

தமிழ் மக்களிற்கு மகாவலி அபிவிருத்தி எந்தப்பயனையும் பெற்றுத்தரவில்லை.

மகாவலி அபிவிருத்தி ஆக்கிரமிப்பின் குறியீடாக கருதப்படுகின்றது. அதனால் மகாவலி அபிவிருத்தி திட்டத்தை வடமாகாணத்தில் நாங்கள் முற்றுமுழுதாக நிராகரிக்கின்றோம் என்று மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை பேரவை இணைத்தலைவர்கள் தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு நகர் பொது நோக்கு மண்டபம் ஒன்றில் 23☛

## டிசம்பருக்குள் பலாலியிலிருந்து தமிழகத்துக்கு விமான சேவை

(கொழும்பு)

பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக தரமுயர்த்துவதில் அரசு கவனம் செலுத்தி வருகின்றது. இந்த ஆண்டு இறுதிக்குள் தமிழகத்துக்கான விமான சேவைகளை ஆரம்பிக்கும் வகையில் மூன்று அமைச்சுக்கள் ஊடாக அமைச்சரவை அனுமதி பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.


போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு ஆகியன இணைந்து இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை, சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளன என்று போக்குவரத்து 24☛

## விபத்துக்களால் 24 மணி நேரத்தில் 12 பேர் பலி

(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். 10☛

# உயரமான முன்னாள் போராளிக்கு புதுக்குடியிருப்பில் பதிவுத்திருமணம்



(பனிக்கன்குளம்)

புனர்வாழ்வளிக்கப்பட்ட உயரமான முன்னாள் போராளி ஒருவருக்கு அமைச்சர் மனோகணேசன் இன்று புதுக்குடியிருப்பு பகுதியில் பதிவுத்திருமணம் செய்து வைத்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் மகா வித்தியாலயத்தில் மக்களுக்கான நடமாடும் சேவை ஒன்றும் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசனின் எண்ணத்தில் பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது.

புதுக்குடியிருப்பை சேர்ந்த குணசிங்கம் கஜேந்திரன் என்ற 39 வயதான இந்த முன்னாள் போராளியின் உயரம் 7 அடி 3 அங்குலமாகும் கடந்த பத்து வருடமாக சட்டபூர்வ திருமணப்பதிவு செய்யாமல் தனது மனைவியுடன் இவர்வாழ்ந்து வந்த நிலையில், பதிவுத்திருமணம் செய்து வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் குறித்த முன்னாள் போராளியுடன் அமைச்சர் மனோகணேசன் உள்ளிட்ட அரசியல்தலைவர்கள் புகைப்படம் எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (மு-281)

# சங்குப்பிட்டியில் விபத்து குடும்பப் பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி-யாழ்ப்பாணம் பிரதான தரை வழிப் பாதையான சங்குப்பிட்டி பாலத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் கனரக வாகனம் ஏறியதில் இளம் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரது சகோதரன் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்றது. சகோதரனும் சகோதரியும் பூநகரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நேற்றிரவு மாற்றப்பட்டனர்.

சம்பவத்தில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த குயின்ஸ்சாளினி (வயது- 23) என்ற இளம் குடும்பப் பெண்ணே படுகாயமடைந்தார்.

பாலத்தில் ஏறிய கனரக வாகனம், இயந்திரக் கோளாறு காரணமாக பாலத்திலிருந்து பின் நோக்கி வந்துள்ளது. அதன் பின்னால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்ப பெண்ணும் அவரது சகோதரனும் நிலை தடுமாறி வீதியில் வீழ்ந்துள்ளனர்.

சகோதரன் உடனடியாக எழுந்த போதும், சகோதரி தாமதித்ததால், வாகனத்தின் சில்லு அவர் மீது ஏறியுள்ளது. அந்த இடத்திலிருந்தவர்களால் அந்தப் பெண் மீட்கப்பட்டு பூநகரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பூநகரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(மு)

# சம்பள முரண்பாட்டு ஆணைக்குழு இன்று முதல்தடவை கூடுகிறது

(கொழும்பு)

அரச சேவை ஊழியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் இனங்கண்டு தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட சம்பள முரண்பாட்டு ஆணைக்குழு இன்று முதல் தடவையாக கூடுகின்றது.

இருப்பினும், இந்த ஆணைக்குழு தொடர்பில் அரசு ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் சார்பான கருத்தைக் கொள்ளாத நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழுவொன்று ஏற்கெனவே உள்ள நிலையில், அரசாங்கம் ஏன் புதிதாக பிரத்தியேக ஆணைக்குழுவொன்றை அமைத்தது என்பது குறித்து சந்தேகமாகவே உள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். (மு)

# புதிய முறையில் மாகாணத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்-துமிந்த

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை புதிய முறையின் கீழ் நடத்த வேண்டும் என்பதே தமது கட்சியின் நோக்கம் என ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தெதுருஓயா ஆற்றை மறித்து ஆராச்சிக்கட்டு பிரதேசத்தில் உள்ள 5 குளங்களுக்கு தண்ணீரை பெற்றுக்கொள்ளும் செங்கல்ஓயா திட்டத்தின் நடவடிக்கைகளை பார்வையிட்ட பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவுடன் ராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அமைச்சர் துமிந்த திஸாநாயக்க.

நாடாளுமன்றத்தில் அண்மையில் கொண்டு வரப்பட்ட அறிக்கையானது, தேர்தலை பழைய முறையில் நடத்துவதா? இல்லை புதிய முறையில் நடத்துவதா என்ற யோசனை அல்ல. அது மாகாண சபைகளின் தேர்தல் தொகு திகள் தொடர்பான அறிக்கை. எனினும் அதனை தவறாக அர்த்தப்படுத்தி வருகின்ற னர்.

தொகுதி எல்லை நிர்ணய முறையில் காணப்பட்ட தவறு காரணமாகவே அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த துறைக்கு பொறுப்பான அமைச்சரும் அதனை எதிர்த்து வாக்களித்தார்.

எப்படி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை எனவும் துமிந்த திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (மு)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

அராலி வீதி புதிய சோனகத்தெரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுல்தான் காதர் ஹபீபுள்ளா என்பவரது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன கண்டெடுக்கப்பட்டு வலம்புரிப் பத்திரிகை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். (மு)

## ஜனாதிபதி நாளை நேபாளம் விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை செவ்வாய்க்கிழமை நேபாளத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு பற்றிய நான்காவது பிம் டெக்ஸ் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே ஜனாதிபதி அங்கு செல்லவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது நேபாள பிரதமர், ஜனாதிபதி ஆகியோருடன் சந்திப்பொன்றையும் மேற்கொள்ளவுள்ளார். அத்துடன், லும்பினி நகரையும் ஜனாதிபதி பார்வையிடவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (மு)

# காணாமல்போனோர் தினத்தில் யாழில் கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச காணாமல் போனோர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் பாரிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் மேற்கொள்ளப்படும் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களையும் சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி ஒரு வருடங்களை கடந்து அவர்களின் உறவுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடர்ச்சியான போராட்டம் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

சர்வதேசம் நீதியை பெற்று தர வேண்டும் என கோரி தமது போராட்டத்தை பல்வேறு விதத்தில் தொடர்கிறார்கள்.

அந்தவகையில் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக முன்றலில் முன்னெடுக்கவுள்ளனர்.

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் அனைத்து தரப்பினரையும் கலந்து கொண்டு ஆதரவு தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (மு-9)

# உலகின் மிகப் பழமையான மொழி தமிழ்-மோடி புகழாரம்

(புதுடில்லி)

உலகின் மிகப் பழமையான மொழி தமிழ். அதனை எண்ணி இந்திய மக்கள் அனைவரும் பெருமிதம் கொள்ள வேண்டும் என பிரதமர் மோடி கூறியுள்ளார்.

இந்திய பிரதமர் மோடி ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை இந்திய வானொலியில் மனதில் இருந்து பேசுகிறேன் என்ற நிகழ்ச்சியின் மூலம் மக்களுக்கு உரையாற்றி வருகிறார். அதில் நேற்று அவர பேசியதாவது.

இந்திய நாட்டின் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பாதுகாப்பவர்களை வாழ்த்துகிறேன். இந்த மகத்தான பணியின் மூலம் பெரும் சமூகத்தின் வரலாற்றுக்கு தொண்டாற்ற முடியும்.

ஒவ்வொரு மொழியும் தனித்தன்மை வாய்ந்தது. அதன் பழமையால் தனிச்சிறப்புடன் திகழ்கிறது. உலகின் மிக பழமையான மொழி தமிழ். இதை எண்ணி ஒட்டுமொத்த இந்தியாவே பெருமை கொள்கிறது. (மு)


## முதலாம் ஆண்டு நினைவாக

மண்ணில் 1991 - 10 - 07

விண்ணில் 2017 - 09 - 07



## ஆரபி ஆறுமுகம் (அபி)

அன்பு எனும் மூன்றெழுத்தின்
அர்த்தம் சொல்லி
அன்னையின் மறுவுருவாய்
ஆருயிர் தோழியான ஆரபியே...
நீ நடந்த பாதைகள் எம்
பல்கலைக்கழக வளாகமதில்
கண் கலங்க வைக்குதம்மா...
கனவுகள் பல சுமந்து
பொறியியல் பீடமதில்
கை கோர்த்தோமே... இன்று
எமை எல்லாம் விட்டுச் செல்ல
உன் மனம் கல்லானதேனோ!!
பத்து மாதம் கருவறையில்
பக்குவமாய் உனை சுமந்த
அன்னையையும்
தோளில் சுமந்த தந்தையையும்
பாசக்கயிற்றில் இணைந்த
சகோதரிகளையும்
பிரிந்திட உன்னால் முடிந்ததேனோ!!

பொறியியலாளர் எனும் பட்டம் பெறும்
நாளுக்காய் பல காலம்
காத்திருந்தோமே-ஆனால்
பகல் கனவாய் போனதேனோ?
தோழியே எமை விட்டு
தொலை தூரம் சென்றதேனோ?
காலனவன் காத்திருந்து
கவர்ந்து விட்டான் இன்னுயிரை
நேற்றுப் போல் இருக்கிறதே!
ஆண்டு ஒன்றாகியும்
ஆறாத்துயரில் அழுது கொண்டே
அவனியிலே உனை தேடுகின்றோம்.
அத்தனையும் பொய் எனவே
உணர மனம் மறுக்கிறதே!
பாசத்தின் உறைவிடமே
எம் வாசல் வர மாட்டாயோ விடை
தெரியா புதிரான உன் பிரிவை
எம்மால் தாங்கிக் கொள்ள
முடியவில்லையம்மா...

(C-3649)

**பல்கலை நண்பர்கள்,**
**மின்பொறியியலும் தொடர்பாடலும், பொறியியல் பீடம்,**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

# மகாவலி அபிவிருத்தி என்னும் போர்வையில் தமிழர் தாயகப்பகுதிகள் ஆக்கிரமிப்பு!

## எதிர்ப்புப் போராட்டத்தில் அணிதிரள தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரம்பரிய தமிழ்க் கிராமங்களில் மகாவலி அபிவிருத்தி என்னும் போர்வையில் நடைபெறும் நில அபகரிப்பையும் அங்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்களையும் எதிர்த்து மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமைப் பேரவையினால் நாளை செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்திற்கு தமிழ் மக்கள் பேரவை தனது ஆதரவைத் தெரிவித்துள்ளதுடன், தமிழர் தாயகத்தின் இதயபூமியைப் பாதுகாக்கும் வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற அணிதிரளுமாறு அனைத்துத் தமிழ் மக்களுக்கும் தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழ் மக்கள் பேரவை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மகாவலி அதிகார சபையினால் தற்போது வடபுலத்தைக் குறிவைத்து முன்னெடுக்கப்படும் முக்கியமான திட்டங்கள் தமிழர் தாயகப் பகுதிகளை ஊடறுத்தும் தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களுக்கு வழிதருவதாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தவகையில் புளியங்குளம்-முல்லைத்தீவு பிரதான வீதியை வடக்கு எல்லையாகக் கொண்டு 1988 ஆம் ஆண்டளவில் வர்த்தமானிமூலம் பிரகடனப்படுத்தப்பட்ட மகாவலி "எல்" வலயத்தின் கீழ் வரக்கூடியதாக அநுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களை மையப்படுத்திய "வெலிஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம் (Welioya Integrated Development Project), கிவுல் ஓயா நீர்த்தேக்க அபிவிருத்தித் திட்டம் (Kivul Oya Reservoir Development Project)" ஆகிய இரண்டு திட்டங்களும் மகாவலி அதிகார சபையினால் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகார சபையின் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றில் வெலிஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம்- வெளிப்படையாகவே அடாத்தான குடியேற்றத்தையும் அங்கு குடியேற்றப்படும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளையும் தனது பிரதான இலக்குகளாகக் கொண்டுள்ளது. இதற்காக குடியேற்றப்படும் சுமார் 6 ஆயிரத்து 788 குடும்பங்களுக்கு தலா 2.5 ஏக்கர் காணிகளை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 2012 இல் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்த வகையில் மிக நுட்பமாகவும் தந்திரோபாயமாகவும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இந்த நில அபகரிப்பு தமிழர் தயாகப் பகுதியை சிங்களமயமாக்கும் திட்டம் மாத்திரமல்லாது தமிழர் தயாகத்தின் இதய பூமியைத் துண்டாடி வடக்கு- கிழக்கு இணைப்பின் உயிர்ப்புள்ளியையே சிதைத்து விடும் அரசியல் கபடத்தனத்தின் பேரங்கமாகவும் அமைந்துள்ளது.

மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் மகாவலி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் மேலும் சில தமிழ் மாவட்டங்களை வடக்கிலும் கிழக்கிலும் குறிவைத்துள்ள நிலையிலும் இந்தத் திட்டங்கள் யாவுமே சிங்கள எதேச்சதிகாரக் குடியேற்றங்களையே முதன்மைப்படுத்துவதன் பேரிலும் தமிழர் தாயகத்தின் மீதான திட்டமிட்ட அடையாள அழிப்பின் அபிவிருத்தி என்ற கபடத்தனத்தின் பேரில் தமிழர் தாயகப் பகுதிகளைச் சிதைக்கும் ஒடுக்கு முறையின் தோற்றமாகவே இந்த நடவடிக்கைகள் அமைகின்றன.

தமிழ் அரசியல் தலைமைகளுடனான எவ்விதமான கலந்தாலோசிப்புகளும் இன்றி மாகாண சபைக்கோ உள்ளூர் அதிகார சபைகளுக்கோ எவ்விதமான தகவல்களையும் வழங்காது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் இந்த ஆக்கிரமிப்புக்களுக்கு மகாவலி அதிகார சபையையும் அமைச்சையும் தனது அதிகாரத்தின் கீழ் வைத்திருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே நேரடிப் பொறுப்புடையவராயிருப்பது இந்த அத்துமீறல்களுக்கும் திட்டமிட்ட வகையில் தமிழர் இனப்பரம்பலைப் பலவீனப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கும் அவரின் ஆசீர்வாதமும் இருப்பதாகவே சந்தேகப்பட வைக்கின்றது.

அவ்வாறான சூழலில் தமிழ் மக்கள் எதிர்பார்த்து நிற்கும் அரசியல் தீர்வைத் தராது பொருளாதார அபிவிருத்தியைப் பேசுபொருளாக்கும் ஜனாதிபதியின் முயற்சிகள் தமிழர்களைக் கபடத்தனமாக ஏமாற்றும் இன்னுமொரு நடவடிக்கையாகவே அமையும் என அச்சமடைவதில் வியப்பென்ன இருக்கப் போகிறது? என தமிழ் மக்கள் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## வடக்கில் 40 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் சீனாவின் திட்டம் இதுவரை நிறுத்தப்படவில்லை

### அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

(கொழும்பு)

சீனாவால் வடக்கில் 40 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டம் இதுவரை நிறுத்தப்படவில்லை என மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

சீனாவின் இந்தத் திட்டத்திற்கு இந்தியத் தரப்பில் எதிர்ப்பு வெளியிடப்பட்டதாக இலங்கை அரசாங்கத்தரப்பினர் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், குறித்த திட்டம் நிறுத்தப்பட்டதாக தகவல் வெளியாகியிருந்தது.

இது குறித்து அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிக்கையில், அவ்வாறான தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அந்தத் திட்டம் நிறுத்தப்படவில்லை என்றும் கூறினார். பிரதமரால்தான் இது குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

குறித்த வீட்டுத் திட்டம் தொடர்பில் இந்தியத் தரப்பிலிருந்து தற்போதுவரை எவ்வித முன்மொழிவுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்த நிலையில், இந்தியத் தரப்பில் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டால், இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளின், முன்மொழிவுகளும் பரிசீலனைக்குட்படுத்தப்படும் என்று அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார்.

இதேவேளை, உள்நாட்டு முகவர்களும் இந்தத் திட்டம் தொடர்பில் தமது முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளதாகவும், அந்த விடயமும் பரிசீலனையில் உள்ளதாகவும் அமைச்சர் சுவாமிநாதன் மேலும் தெரிவித்தார். (இ-7)



## சட்டவிரோத மின்சாரம் 11 கோடி ரூபா அபராதம்

(கொழும்பு)

கடந்த வருடத்தில் சட்டவிரோதமாக மின்சார இணைப்பை பெற்றுக்கொண்ட நபர்களிடமிருந்து அபராதத் தொகையாக 11 கோடிக்கும் அதிகமான பணம் அறவிடப்பட்டுள்ளதாக மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

சட்டவிரோத மின் இணைப்பு தொடர்பில் 2 ஆயிரத்திற்கும் அதிகமானோருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக அந்த அமைச்சின் ஊடகப்பேச்சாளர் சுலக்ஷன ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத மின்சார இணைப்பு தொடர்பில் தகவல் அறிந்தால் மின்சார சபையின் விசேட விசாரணை பிரிவின் 011 242 2259 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## ம.ம.முவை விட்டு விலகவும் மாட்டேன் இ.தொ.காவுடன் இணையவும் மாட்டேன்

(ஹற்றன்)

மலையக மக்கள் முன்னணியை விட்டு நான் விலகப் போவதுமில்லை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உடன் இணையப் போவதும் இல்லை என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்ட ணியின் பிரதித் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான வேலுசாமி இராத கிருஷ்ணன் தெரிவித்



துள்ளார். ஹற்றனில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நான் மலையக மக்கள் முன்னணியில் இருந்து விலகி இலங்கை தொழிலாளர் காங்கிரஸோடு இணையப் போவதாக வெளியான தகவல் வெறும் வதந்தியே. ஆகையால் இதனை மக்களுக்கு தெளிவுபடுத்தவே தான் இந்த ஊடகவியலாளர் சந்திப்பினை ஏற்பாடு செய்ததாகவும் தெரிவித்தார். (இ-7)

## கூட்டு எதிரணியின் ஆர்ப்பாட்டத்தால் அரசிற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது

### அமைச்சர் அமரவீர உறுதி

(கொழும்பு)

அரசாங்கம் ஊழல் மோசடிகளை மேற்கொள்வதாக குற்றஞ்சாட்டும் எதிர்த்தரப்பினரது பல நிதி மோசடிகள் இன்றும் நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வண்ணமே காணப்படுகின்ற நிலையில், இவர்கள் இன்று தேசிய நிதி காப்பாளர்கள் போன்று கருத்துக்களை குறிப்பிடுவது வேடிக்கையாகக் காணப்படுகின்றது என விவசாயத் துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கூட்டு எதிர்த்தரப்பினர் அடுத்த மாதம் 5 ஆம் திகதி முன்னெடுக்கவுள்ள ஆர்ப்பாட்டத்தினால் அரசாங்கத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. ஜனாபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் பதவி என அனைத்து பதவிகளுக்கும் தமக்கு வேண்டும் என முயற்சித்து, அவற்றில் பாரிய தோல்வியையே சந்தித்துள்ள கூட்டு எதிரணி தற்போது வேறு வேலைகள் எதுவும் இல்லாத காரணத்தினால் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு அரசாங்கத்தை கலைக்க திட்டமிடுகின்றனர். ஆனால் என்ன செய்தாலும் அரசாங்கத்தை அவர்களால் கலைக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### கரிபியன் பிரிமியர் லீக்

# இர்பான் சாதனை: பார்படோஸ் வேதனை



கரிபியன் பிரீமியர் லீக் ரி20 தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியொன்றில், மொஹமட் இர்பானின் அசுரத்தனமான பந்துவீச்சின் மத்தியிலும் செயின்ட் கிட்ஸ் அண்டு நேவிஸ் பேட்ரியாட்ஸ் அணி பார்படோஸ் அணியை வீழ்த்தியது.

நாணயச்சுழற்சியில் வென்ற செயின்ட் கிட்ஸ் அண்டு நேவிஸ் பேட்ரியாட்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பார்படோஸ் ட்ரிடென்ட்ஸ் அணிக்கு அணித் தலைவர் ஜேசன் ஹோல்டர் 35 பந்துகளில் 54 ஓட்டங்கள் அடித்து கைகொடுக்க,

20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களை எடுத்தது.

148 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் செயின்ட் கிட்ஸ் அண்ட் நேவிஸ் பேட்ரியாட்ஸ் அணி களம் இறங்கியது.

கிறிஸ் கெய்ல் (0), எவின் லெவிஸ் (1) ஏமாற்றியபோதிலும் பிரண்டன் கிங் 60, டேவன் தோமஸ் 32, பென் கட்டிங் 29 ஓட்டங்கள் எடுக்க,

செயின்ட் கிட்ஸ் 18.5 ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

பார்படோஸின் பந்துவீச்சில் மொஹ்மட் இர்பான் 4 ஓவர்களில் ஒரு ஓட்டத்தை மட்டும் கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றியபோதிலும் பார்படோஸ் அணியால் வெற்றி பெற முடியவில்லை.

### இர்பான் சாதனை

பார்ப்டோஸ் அணி வீரர் மொஹமட் இர்பான் இப்போட்டியில் 4 ஓவர்கள் பந்துவீசி 3 மெய்டன் ஓவர்கள் அடங்கலாக ஒரு ஓட்டத்தை மட்டும் கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இதன்மூலம் ரி20 வரலாற்றில் மிகக் குறைந்த ஓட்டங்கள் கொடுத்த பந்து வீச்சாளர் எனும் புதிய சாதனையைப் படைத்தார்.

இது குறித்து மொஹமட் இர்பான் கூறுகையில்," நான் எனது பந்துவீச்சு குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். என்னுடைய அணி இந்தப் போட்டியில் வெற்றி பெற்றிருந்தால், இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

ரி20 வரலாற்றிலேயே மிகக் குறைந்த ஓட்டங்களைக் கொடுத்ததாக எனது பந்துவீச்சு அமைந்தது இன்னும் மகிழ்ச்சி அளிக்கிறது.

பந்துகள் நன்றாக எழும்பும், தரமான ஆடுகளங்களில் பந்துவீச எனக்கு மிகவும் பிடிக்கும், நான் வழக்கமான பந்துவீச்சாளர்களைக் காட்டிலும் உயரம் அதிகம் என்பதால், பந்துவீசும்போது பவுன்ஸ் ஆவது அதிகரிக்கும், இதனால் துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி ஏற்படும். இந்தப் போட்டியில் எனது பந்துவீச்சு மன நிறைவு அளிக்கிறது" எனத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் வீரரான மொஹமட் இர்பான் இதுவரை 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 10 விக்கெட்டுகளையும் 60 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்று 83 விக்கெட்டுக்களையும் சாய்த்துள்ளார். 20 ரி20 போட்டிகளில் 15 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.



# ஜமைக்கா தல்லாவாஸ் வெற்றி

நேற்று முன்தினம் நடந்த மற்றொரு ஆட்டத்தில் செயின்ட் லூசியா ஸ்டார்ஸ் - ஜமைக்கா தல்லாவாஸ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜமைக்கா தல்லாவ்ஸ் ரோவ்மன் பவேல் (64), டேவிட் மில்லர் (13 பந்துகளில் 32 ஓட்.) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழப்பிற்கு 204 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 205 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் செயின்ட் லூசியா ஸ்டார்ஸ் அணி களம் இறங்கியது.

வோர்னர் 42, பொல்லார்ட் 46, லென்டில் சிம்மன்ஸ் 45 ஓட்டங்கள் எடுத்து துடுப்பாட்டத்தில் பிரகாசித்த போதிலும்,

செயின்ட் லூசியாவால் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழப்பிற்கு 183 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.

இதனால் ஜமைக்கா தல்லாவாஸ் 21 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக ஜமைக்காவின் பவல் தெரிவானார்.

# சாய்னா, சிந்து அரையிறுதியில்

## ஆசிய விளையாட்டில் அசத்தல்



ஆசிய விளையாட்டு பட்மிண்டன் அரையிறுதிக்கு இந்தியாவின் செய்னா நேவல், சிந்து முன்னேறினர்.

இதன்மூலம் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவுக்கு முதல் முறையாக பதக்கம் உறுதியாகி உள்ளது.

இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவில் 18ஆவது ஆசிய விளையாட்டு நடக்கிறது.

இதன் பெண்களுக்கான பட்மிண்டன் ஒற்றையர் பிரிவில் தரவரிசையில் 10ஆவது இடத்திலுள்ள இந்தியாவின் செய்னா நேவல், தாய்லாந்தின் ரட்ச னோக்கை (4வது இடம்) எதிர்கொண்டார். முதல் செட்டில் 3-8 என பின்தங்கியிருந்த செய்னா 21-18 என போராடி கைப்பற்றினார்.

அடுத்த செட்டில் அசத்திய இவர் 21-16 என தனதாக்கினார். மொத்தம் 42 நிமிடம் நடந்த போட்டியின் முடிவில் சாய்னா 21-18, 21-16 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

இதன்மூலம் இவர், ரட்ச னோக்கிற்கு எதிராக விளையாடிய கடைசி 5 போட்டிகளில், 4ஆவது வெற்றியை பதிவு செய்தார்.

அரையிறுதியில் சாய்னா, சீன தைபேயின் டிசுயிங்கை எதிர்கொள்கிறார்.

### சிந்து அபாரம்

மற்றொரு காலிறுதியில் இந்திய வீராங்கனை சிந்து (நம்பர் 3) தாய் லாந்தின் ஜின்டோபோலை (11ஆவது இடம்) சந்தித்தார்.

முதல் செட்டை 21-11 என கைப்பற்றிய சிந்து, இரண்டாவது செட்டை 16-21 என பறிகொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3வது செட்டில் சுதாகரித்த இவர் 21-14 என தன் வசப்படுத்தினார் முடிவில், சிந்து 21-11, 16-21, 21-14 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள்நுழைந்தார்.

இதன்மூலம், பட்மிண்டனில் இம்முறை குறைந்தபட்சம் இரண்டு வெண்கலம் உறுதியானது.

தவிர ஆசிய விளையாட்டில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவுக்கு முதல் முறையாக பதக்கம் கிடைக்க உள்ளது.


இதுவரை ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சையது மோடி (1982, டில்லி) மட்டுமே வெண்கலம் வென்றிருந்தார்.

# வண.கலாநிதி குணாளன் அவர்களின் வாழ்வும் தென்னிந்திய திருச்சபையின் கல்மடு ஆலய திறப்பு விழாவும்



கடந்த 16.08.2018 அன்று வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள கல்மடு எனும் மிகவும் பின்தங்கிய கிராமத்தில் அந்த மக்களின் ஆன்மீக ஈடேற்றத்திற்காக புனித பவுல் தேவாலயம் கிட்டத்தட்ட 1.5 கோடி ரூபா செலவில் காலஞ்சென்ற வண.காலநிதி ''தேசமான்ய'' தேசபந்து குணாளன் தியாகராஜா அவர்களின் துணைவியார் திருமதி. வசந்தி குணாளன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த ஆலயத்திற்கான அடிக்கல் கடந்த 06.01.2016 வண.கலாநிதி குணாளன் தியாகராஜா அவர்களால் பிரதிஷ்டை பண்ணப்பட்டு ஆலய வேலைகள் முழுவதும் வண. குணாளன் அவர்களின் தனிப்பட்ட சொந்தச் செலவில் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் வண.குணாளன் தியாகராஜா அவர்கள் கடந்த 04.04.2018 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னாரது இழப்பு ஒட்டு




மொத்த கிறிஸ்தவ உலகிற்கும் பேரிழப்பு என்பதுடன் வன்னி, மலையகம் உட்பட பல பிரதேச ஏழை மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது.

காலஞ்சென்ற ''தேசமான்ய'' தேசபந்து வண.கலாநிதி குணாளன் தியாகராஜா அவர்கள் தென்னிந்திய திருச்சபையின் யாழ்.அத்தியட்சாதீனத்தின் உப தலைவராகவும் மத்திய குழுவின் சிரேஷ்ட அங்கத்தவராகவும் இருந்து இறைபணியாற்றியவர் ஆவார். தன்னுடைய வாழ்வை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்து இறைவனின் இரக்கத்தையும் அன்பையும் பாமரர் வரை கொண்டு சேர்ப் பதில் அரும்பணியாற்றியவர். இவர் தனது ஆரம்பக் கல் வியை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கற்றார். கல்வி கற்கும் காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கியதோடு விளையாட்டுத்துறை மற்றும் ஆங்கில, கிறிஸ்தவ மன்றங்கள் மற்றும் ஏனைய இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் தனது முத்திரையைப் பதித்த வர் ஆவார்.

தென்னிந்திய திருச்சபை பேராயர் அதி.வண.கலாநிதி டானியல் தியாகராஜா அவர்கள் இவரின் மூத்த சகோதரர் என்பதுடன் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் திரு.கிறிஷ்டி தயாளன் தியாகராஜா என்ற சகோதரரும் 4 சகோதரிகளும் இவருக்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

குருவானவர் தனது உயர் கல்வியை லண்டன் மாநகரில் தொடர்ந்து மேற்கொள்வதற்காக இலங்கையிலிருந்து புறப்பட்டார். அத்துடன் தனது தாய் நாட்டிற்கு மீண்டும் ஒரு பொறியியலாளராக கட்டடக்கலையில் சிறந்த ஒரு நிபுணனாக திரும்பினார்.

இல்லறவாழ்வில் இணைந்த வண.குணாளன் தியாகராஜா அவர்களின் அன்புக்கும் பாசத்திற்கும் உரிய மனைவியாக திருமதி.வசந்தி அவர்கள் திகழ்ந்ததுடன் லிதியா செல்லம் என்ற அன்பான, பண்பான ஒரு பெண்பிள்ளையும் இவர்களுக்கு உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு இறைபணியாளராகவும் அதே வேளை ஒரு பொறியியலாளராகவும் இருமுனை நகர்வை வெற்றிகரமாக மேற்கொண்ட வண.குணாளன் அவர்கள் ஒரு ஆளுமையின் சிகரம். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அரும்பெரும் பேறு என்றே குறிப்பிடலாம். இலங்கையில் எங்கெங்கு வறிய குழந்தைகள், வறிய மாணவர்கள் உள்ளனரோ அங்கெல்லாம் அவர்களின் துயர் துடைக்க வண. குணாளன் அவர்களின் பாதங்கள் பயணித்தது. அந்த வறிய மக்களின், மாணவர்களின் கண்ணீரை இறைவனின் ஏவுதலுடன் துடைப்பதில் அயராது பாடுபட்டார். குறிப்பாக மலைநாட்டிலும் தீவகப் பகுதியிலும் இவர் மேற்கொண்ட பல்வேறு வகையான செயற்றிட்டங்கள் ஏழை மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க உறுதுணையாக அமைந்தது. குறித்த உதவிகள் அனைத்தும் எதுவிதமான ஆர்ப்பாட்டங்களோ விளம்பரங்களோ இல்லாமல் மிகவும் அமைதியான முறையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவானவர் கட்டளையிட்டபடி அதாவது ''உனது வலது கை கொடுப்பதை உனது இடது கை அறியாதிருப்பதாக'' என்ற கட்டளைப்படி குறித்த மாணவர்களை, மக்களை சென்றடைந்தன.

தன்னை உருவாக்கிய, தான் கல்விகற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை என்றும் மறவாத வண.கலாநிதி குணாளன் தியாகராஜா அவர்கள் மத்திய கல்லூரிக்கு பல வழிகளில் உதவியுள்ளதுடன் வடக்கின் பெரும் போர் என்றழைக்கப்படும் ''சென்றல், சென் ஜோன்ஸ்'' கல்லூரிகள் மோதும் வருடாந்த துடுப்பாட்ட போட்டியில் மத்திய கல்லூரி வெற்றி பெறும் சந்தர்ப்பங்களில் பெருந்தொகைப் பணத்தை துடுப்பாட்ட வீரர்களுக்காக வழங்கியும் வந்துள்ளார். இது மத்திய கல்லூரி வீரர்களுக்கு பெரும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் வழங்கியதுடன் அந்த வீரர்கள் இலங்கை தேசிய அணியில் விளையாடும் பெரும் உத்வேகத்தை



யும் அளித்தது.

இறுதியாக நடந்த வடக்கின் பெரும்போர்-2018 மாபெரும் துடுப்பாட்டப் போட்டியின் போது இறை ஏவுதலுடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் அவர்களும் பழைய மாணவர் சங்கமும் கொழும்பில் இருந்த வண. கலாநிதி குணாளன் அவர்களை தமது சார்பில் கௌரவ விருந்தினராக கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்திருந்தது.

அத்துடன் பழைய மாணவர் சங்க ஒன்றுகூடலான சென்றல் நைட் (Central Nite) விருந்துக்கும் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கும்படி அன்போடு கேட்டுக்கொண்டது. இவற்றை ஏற்று கல்லூரியை, தன்னை உருவாக்கிய தாயை மதித்து வண.கலாநிதி குணாளன் அவர்கள் வீரர்களைத் தொட்டு ஆசீர் வழங்கியதுடன் விழாவிலும் கலந்து கொண்டார். அன்றையதினம் இறையருளால் மத்திய கல்லூரி வெற்றியைச் சுவைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தனது சொந்த ஊரான வேலணை மண் மீது அளவுகடந்த பாசமும் நேசமும் கொண்ட வண.கலாநிதி குணாளன் அவர்கள் வேலணை சரஸ்வதி வித்தியாலய மாணவர்களுக்கு பல உதவிகளை புரிந்துள்ளார். மாணவர்கள் கல்விச்சுற்றுலா சென்று வர பெரும் தொகைப்பணத்தை வழங்கி வைத்ததுடன் துவிச்சக்கர வண்டிகள் உட்பட பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

ஏழு பிள்ளைகள் கொண்ட திரு.திருமதி. தியாகராஜா தம்பதியருக்கு ஐந்தாவதாக பிறந்த ஆண்பிள்ளையான திரு.குணாளன் தியாகராஜா அவர்களின் பெற்றோர்கள் இருவரும் ஆசிரியர்கள் ஆவர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி கற்ற குணாளன் அவர்கள் படிப்பிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்கினார். இவரது பெற்றோர்கள் இவரை இறை பக்தியில் வளர்த்து வந்தனர். ஆனபடியால் சிறு வயது முதற்கொண்டே வண.குணாளன் அவர்கள் மிகவும் அன்பான, பண்பான அனைவருக்கும் உதவும் இதயம் கொண்ட பிள்ளையாக வளர்ந்தார். அயலவர்களும் நண்பர்களும் மிகவும் நேசிக்கக் கூடியவராக காணப்பட்டார். பாடசாலை காலத்தில் ஓய்வுநேரங்களில் புகைப்படம் எடுத்தல், தச்சு வேலைகளை செய்தல், சைக்கிள்களை திருத்துதல், உடைந்து போன விளையாட்டுப் பொருட்களை திருத்துதல் என ஒரு பல்துறை விற்பன்னராக காணப்பட்டார்.

சவால்களுக்கு முகம் கொடுக்கும் துணிச்சல் மிக்கவரான வண.குணாளன் அவர்கள் தனது 17 ஆவது வயதில் பிரான்ஸ் நாட்டுக்குச் செல்ல தீர்மானித்தார். பெற்றோர்களுக்கு அது பிரியமில்லாத பயணமாக காணப்பட்டபோதும் தனது சுய முயற்சியில் தன்னால் சேகரிக்கப்பட்ட பணத்தைக் கொண்டு வெளிநாடு செல்ல முடிவெடுத்தார்.

இது தொடர்பாக அவரிடம் கேட்டபோது தனது சகோதர, சகோதரிகள் தலைநிமிர்ந்து வாழ, அவர்களை நன்கு கல்வி கற்பிக்க வைக்க குடும்பப் பொறுப்பை ஏற்று தான் வெளிநாடு செல்லப் போவதாகக் கூறினார். அன்று அவர் புரிந்த தியாகத்தால் இன்று அவரது குடும்பம் மட்டுமல்லாது பலரையும் நல்ல நிலையில் வைக்க இறைவன் அவருக்கு ஆற்றலையும்சக்தியையும்வழங்கினார்.

பிரான்சில் சிலகாலம் பணி புரிந்த பின்னர் மாணவர் விசாவில் லண்டன் சென்றார். ஒரு சிறந்த கணக்காளராகவும் லண்டனில் பிரகாசித்தார். லண்டனில் அவரது வீடு மதகுருமார், அகதிகள், நண்பர்கள் எனப் பலரையும் ஏற்று உபசரிக்கும் ஒரு இடமாக விளங்கியது.

லண்டனில் வாழ்ந்த போதும் அவரது எண்ணம் முழுவதும் இலங்கையில் வாழும் ஏழை மக்களுக்கு உதவவேண்டும் என்பதிலும் இலங்கையில் இறைபணி ஆற்ற வேண்டும் என்பதிலுமே ஆவலாகக் காணப்பட்டது. ஆகவே இலங்கை திரும்பிய அவர் மத்திய மலை நாட்டின் ஹற்றன் நகரில் ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கான காப்பகம் ஒன்றை தனது சொந்த நிதியில் நிறுவினார். அத்தோடு நின்றுவிடாமல் இலங்கையில் உள்ள ஆதரவற்ற பல இல்லங்களுக்கு தான் இறக்கும்வரை பல உதவிகளை வழங்கினார்.

இறைவன் அவருக்கு வழங்கிய ஆற்றலில் தன்னுடைய சொந்த நிறுவனத்தை கொழும்புநகரில் நிறுவியதுடன் அதன் மூலம் கிடைத்த பணத்தை இவ்வாறான அறப்பணிக்களுக்காகச் செலவிட்டார். 2008 ஆம் ஆண்டு தென்னி ந்திய திருச்சபையின் ஊழியராக இணைந்து கொண்டதுடன் இறுதி மூச்சுவரை இறைவனின் அன்பை அனைத்து மக்களுக்கும் கொண்டு செல்லும் கருவியாக விளங்கினார்.

2009 ஆம் ஆண்டு ஹற்றன் நகரில் தனது சொந்தச் செலவில் கிறிஸ்தவ ஆலயம் ஒன்றை நிறுவினார்.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் தனது சகோதரன் கிறிஸ்டி தயாளன் அவர்களுடன் இணைந்து போரால் அழிவடைந்த யாழ். மத்திய கல்லூரியின் ஆலயமான புனித பேதுரு தேவாலயத்தின் கூரையில் அமைந்துள்ள கோபுரத்தை அமைத்துக் கொடுத்தார்.





இதன் தொடர்ச்சியாக தான் தனது இறுதிக் காலத்தில் ஊழியப்பணி புரிய கல்மடு தேவாலயத்தை சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில் அமைத்துக் கொண்டிருக்கும் வேளையில் இறைவனின் அழைப்பில் பிரவேசித்தார்.

குறித்த ஆலயத்தின் திறப்பு விழா ஆலயத்தின் குருவானவர் வண. G.C.றொபின்சன் அவர்கள் தலைமையில் 16.08.2018 அன்று வெகு விமர்சையாக நடைபெற்றது. அமைச்சர் றிசாத் பதியுதீன் அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

வண.கலாநிதி குணாளன் தியாகராஜா நம்மை விட்டு கடந்து சென்ற போதி லும் அவர் விட்டுச் சென்ற நற்காரியங்களை அவரது துணைவியார் திருமதி வசந்தி ஜோசப் குணாளன் அவர்களும் சகோதரர் பெருமதிப்பிற்குரிய ஆயர், மத்தியின் மைந்தன், அதி. வண. கலாநிதி டானியல் தியாகராஜா அவர்களும் முன்னெடுத்துச் செல்ல எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.




(க-3640)







**ஸ்.சுபேதர் பெர்னாண்டோ, ஆசிரியர்,**
**துணைச்செயலாளர், பழைய மாணவர் சங்கம்,**
**யாழ்.மத்திய கல்லூரி.**





அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.





தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய தேர்த்திருவிழா கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது திருமுறை வி.கே.நடராஜா, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஆகியோர் இசை ஆராதனை வழங்கினர்.







ஜனாதிபதி மக்கள் சேவை (நிலமெஹெவர) உத்தியோக பூர்வ பணி நடமாடும் சேவை கரவெட்டி பொன்னம்பலம் வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.
இதில் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.
(படங்கள்: மகாலிங்கம்)

## இராசி பலன்

**மீனம்** — வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, தூரதேசத்திலிருந்து வரும் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும்.

**மேடம்** — பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**இடபம்** — இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, அரசு வழிச்சலுகைகள் கிடைக்கும், அன்னியர்களின் உதவிகள் கிடைக்கும் போசன சுகமுண்டு.

**மிதுனம்** — பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், செய்தொழில் விருத்தியுண்டு, முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.

**கும்பம்** — ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை கூடும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**இராசி பலன்**
கிரகநிலை
சந்திராஷ்டமம்
ஆயிலியம், மகம்

சந் | ராகு. புத | கேது. செவ். | சூரி | சனி | குரு | சுக்

27.08.2018
ஆவணி 11, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
பிரதமை முன்னிரவு 7.11 மணிவரை
சதயம் பிற்பகல் 3.35 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை

வளவன்

**கடகம்** — உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டுவிலகலாம், உடல் நலனில் கவனம் தேவை, குடும்பத்தினிடையே கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும்.

**மகரம்** — கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்** — உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும் மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு** — மனதில் புதிய கற்பனைகள் தோன்றும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலை உயரும்.


**விருச்சிகம்** — பயணங்களால் பலனுண்டு, பாராட்டும் புகழும் கூடும் நாள், முன்னேற்றப் பாதையை நோக்கி நகர்வீர்கள், சுப காரியச் செலவுகள் ஏற்படலாம்.

**துலாம்** — எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** — கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், உடல் நலன் சீராகும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், நிலையான வருமானத்திற்கு வழியமைப்பீர்கள், ஆரோக்கியமான நாள்.

# மகிந்தவின் புகைப்படத்தை ரஜினி வைத்துக்கொள்ளட்டும்

## அ.தி.மு.க. ஆவேசம்



(சென்னை)

மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட இரங்கல் அஞ்சலிக் கூட்டத்தில் பேசிய நடிகர் ரஜினிகாந்த், அ.தி.மு.க. உருவாகக் காரணமாக இருந்த கருணாநிதியின் புகைப்படத்தை அ.தி.மு.க. அலுவலகத்தில் வைக்க வேண்டுமென பேசியிருந்தார்.

மேலும், மெரினாவில் இடம் கொடுத்திருக்காவிடில் தானே களத்தில் இறங்கி போராடியிருப்பேன் எனவும் அவர் பேசி சர்ச்சைகளைக் கிளப்பியிருந்தார்.

இந்நிலையில் அரசியல் அறிவு அற்ற நடிகர் ரஜினி என அமைச்சர் ஜெயக்குமார் கடுமையாக விமர்சித்துள்ளார். இதேவேளை நேற்று முன்தினம் தொலைக் காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த முன்னாள் அமைச்சர் வைகைச்செல்வன் "ஆட்சியைப் பிடிக்க பேருதவி புரிந்து, கருணாநிதியை முதல்வராக்கிய கட்சியின் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர். கணக்குக் கேட்டார் என்பதற்காக அவரைக் கட்சியை விட்டு நீக்கிய கருணாநிதியின் புகைப்படத்தை நாங்கள் அலுவலகத்தில் வைப்பதா?"

"ரஜினி வேண்டுமானால் ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்த மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்புடைய சினிமா தயாரிப்பு நிறுவனத்தில் நடிக்கிற காரணத்தினால் மகிந்தவின் புகைப்படத்தை தான் தொடங்கவுள்ள கட்சியில் வைத்துக்கொள்ளட்டும்" என காட்டமாக ரஜினியை விமர்சித்துள்ளார். (இ-7)

## பெறுகை அறிவித்தல்- 2018
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

01.தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02.பெறுகையானது பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03.தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

04.ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கில மொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 27.08.2018 தொடக்கம் 10.09.2018 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் 15.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.3000/-(NBT, VAT தவிர்ந்த) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05.பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து 10.09.2018 ஆம் திகதி 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

06.பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 04.09.2018 ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.

07.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்


| இல | வேலை விபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு ரூபா | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மயிலங்காடு உயிலை வீதி திருத்தம் - J/203 | சபை நிதி | 1.18 | 2 மாதம் | C9 | 12000 | 15.10.2018 |
| 2 | அருளகம் வீதி திருத்தம் - J/190 | சபை நிதி | 1.98 | 2 மாதம் | C9 | 20000 | 15.10.2018 |
| 3 | மயிலங்காடு கொலணி வீதி திருத்தம் - J/203 | சபை நிதி | 1.93 | 2 மாதம் | C9 | 20000 | 15.10.2018 |
| 4 | மயிலங்காடு 1ஆம் குறுக்கு வீதி திருத்தம் - J/203 | சபை நிதி | 0.75 | 2 மாதம் | C9 | 8000 | 15.10.2018 |
| 5 | அங்கலிப்பாய் வீதி திருத்தம் - J/190 | சபை நிதி | 3.1 | 3 மாதம் | C8 | 31000 | 29.10.2018 |
| 6 | மயிலங்காடு தெற்கு விவசாய வீதி திருத்தம் - J/203 | சபை நிதி | 0.89 | 2 மாதம் | C9 | 9000 | 15.10.2018 |
| 7 | கருணாகரப்பிள்ளையார் 2ஆம் வீதி திருத்தம்- J/190 | சபை நிதி | 1.05 | 2 மாதம் | C9 | 11000 | 15.10.2018 |
| 8 | காளிகோவில் வீதி தாவடி திருத்தம் - J/193 | சபை நிதி | 0.84 | 2 மாதம் | C9 | 9000 | 15.10.2018 |
| 9 | மண்டான் வீதி திருத்தம்- J/209 | சபை நிதி | 6.41 | 3 மாதம் | C7 | 65000 | 06.11.2018 |
| 10 | வன்னியசிங்கம் வீதி 1ம் , 5ஆம் குறுக்கு வீதி திருத்தம் - J/194 (தாவடி வடக்கு) | சபை நிதி | 1.09 | 2 மாதம் | C9 | 11000 | 15.10.2018 |
| 11 | களவியாவத்தை வீதி திருத்தம்- J/185 | சபை நிதி | 2.19 | 2 மாதம் | C8 | 22000 | 29.10.2018 |
| 12 | கொல்கள உள்ளக வீதி புனரமைத்தல் | சபை நிதி | 0.84 | 2 மாதம் | C9 | 9000 | 15.10.2018 |
| 13 | தண்ணீர்தாங்கி அமைத்தல் கொல்களம் | சபை நிதி | 0.53 | 2 மாதம் | C9 | 6000 | 15.10.2018 |
| 14 | ஏழாலை உப அலுவலகத்திற்கு வர்ணம் பூசுதல் மற்றும் சுற்றுமதில் பூச்சுவேலை | சபை நிதி | 0.94 | 2 மாதம் | C9 | 10000 | 15.10.2018 |
| 15 | வீதிகளுக்கான புயம் அமைத்தல் - இணுவில் - J/188 - J/190 | சபை நிதி | 0.47 | 2 மாதம் | C9 | 5000 | 15.10.2018 |
| 16 | விளையாட்டு மைதானம் புனரமைத்தல் சங்குவேலி - J/187 | சபை நிதி | 0.1 | 2 மாதம் | C9 | 1100 | 15.10.2018 |
| 17 | தெருவிளக்கு கொள்வனவு செய்தல் 50 W LED - Nos 223 | சபை நிதி | 1.3 | 1 மாதம் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 13000 | 15.10.2018 |
| 18 | ஆதன இலக்கத்தகடு கொள்வனவு செய்தல் Nos 10000 | சபை நிதி | 0.7 | 1 மாதம் | | 7000 | 15.10.2018 |
| 19 | சுன்னாகம் தபாலக புனரமைப்பு | அ.தி.நிதி | 0.41 | 2 மாதம் | C9 | 5000 | 15.10.2018 |

க.தர்ஷன், தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு வலிகாமம் தெற்கு,
பிரதேசசபை, சுன்னாகம்.

(சீ-3632)


பாராட்டி
வாழ்த்துகின்றோம்

திரு.
ம.கிறிஸ்ரி லெனாட் மனுவல்
(B.Com, PGDE, M.Ed)



23.11.2015 இல் இருந்து
அதிபர் தரம்-1 (SLPS-I) பெற்ற
எமது பாடசாலை அதிபர்
அவர்களை மேன் மேலும்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்கள்,
பாடசாலை சமூகத்தினர்,
கிளி/இராமநாதபுரம்
மகா வித்தியாலயம்,
கிளிநொச்சி.

(சீ-3641)

# நில அபகரிப்பைத் தடுத்திடுவோம் எதிர்காலத்தைக் காத்திடுவோம்

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

**நில அபகரிப்பைத் தடுத்திடுவோம், வாழ்வையும் வளத்தையும் எமது குழந்தைகளின் எதிர்காலத்தையும் காத்திடுவோம் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்துள்ளார். மண்ணையும் மொழியையும் நேசிக்கும் உணர்வாளர்களே நாளை 28ஆம் திகதி முல்லைத்தீவு PWD வீதியிலிருந்து மாவட்ட செயலகம் வரை ஜனநாயக ரீதியாக நடைபெறுகின்ற விழிப்புணர்வு பேரணியில் அனைவரும் அணிதிரள்வோம். எமது மக்களுக்கு எதிரான அநீதியை அம்பலப்படுத்துவோம் என அவர் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில்,

சிங்கள மக்களை குடியேற்றுவதற்கு சாத்தியமில்லாத பிரதேசங்களில் தமிழ் பேசும் காணி உரிமையாளர்களிடம் அவர்களின் சொந்த நிலங்களை இராணுவத்திடமிருந்து பெற்று கையளிப்பதாக பரப்புரை செய்கின்ற நல்லாட்சி அரசாங்கம், ஏனைய பிரதேசங்களில் மகாவலி அபிவிருத்தி, வனவளங்களின் பாதுகாப்பு, பறவைகள் சரணாலயம் என்கின்ற செயற்றிட்டங்களின் பேரால் அங்கு வாழ்ந்த, வாழுகின்ற தமிழ் பேசும் மக்களின் வாழ்விடங்களையும் விவசாய நிலங்களையும் வாழ்வாதாரத்துக்கான ஆதாரங்களாக உள்ள அடர்த்தியற்ற காட்டுப் பகுதிகளையும் களப்பு பிரதேசங்களையும் கடல் ஏரிகளையும் கரையோரங்களையும் சிங்கள மக்களின் குடியேற்றப் பிரதேசங்களாக திட்டமிட்டு உருவாக்கி வருகிறது.

முல்லைத்தீவின் தெற்கு வலயத்தில் எட்டுச் சிங்கள குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் சட்டங்களை எல்லாம் மீறி காணி வழங்கிய விடயம் தனக்கு தெரியாது. அதைத் தடுத்து நிறுத்துவேன். ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறிய பின்பும் தனது காணி வழங்கல் நடவடிக்கையை நியாயப்படுத்தி வருகின்றது ஜனாதிபதியின் பொறுப்பில் உள்ள மகாவலி அதிகாரசபை.

இனத்துக்கு இனம், இடத்துக்கு இடம் மாறி மாறி கருத்துரைத்து, வாக்குறுதிகளை வழங்கி வருகின்ற இன்னுமொரு சராசரி அரசியல் வாதியாகவே தமிழ்மக்கள் ஜனாதிபதியையும் நோக்குகின்ற வழக்கமான, மரத்துப்போன மன நிலைக்கு வந்துள்ளனர்.

இவை ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒழுங்குகளா? அல்லது ஜனாதிபதியின் நிலைப்பாடுகளையும் மீறிய பேரினவாத சக்திகளின் செயல்பாடா? என்பதை நாம் இனம் காண வேண்டியுள்ளது.

தெற்கில் ஆட்சியதிகாரத்திற்கு வரும் எந்த சிங்கள அரசியல்தலைவரும்பௌத்த, சிங்கள மேலாதிக்க சக்திகளின் எண்ணங்களை புறந்தள்ளி செயற்பட ஒருபோதும் துணிந்ததில்லை. மீறி செயற்பட்டாலும்கூட அதனை மூர்க்கத்தனமாக எதிர்ப்பதற்கு அந்த சக்திகள் தயங்கியதுமில்லை. எனவே மதம், கட்சி, வர்க்கம் என்ற பேதங்களை கடந்து ஓரணியாக செயற்படுவது அவசியம் என்பதே எமது முதன்மையான வேண்டுகோளாகும்.

இலங்கையின் அரசியலமைப்பு சட்டங்களையெல்லாம் மேவிய அதிகாரத்தை கொடுத்து வைத்துள்ள மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, தமிழர்களின் பூர்வீக பிரதேசங்களில், நீரைக் கொண்டுவர முடியாத இடங்களையெல்லாம் தனது அதிகாரத்திற்குள் கொண்டு வருவதையும் அந்த இடங்களில் சிங்கள மக்களை குடியேற்றுவதையுமே தனது பிரதான செயற்பாடாக கொண்டு காலகாலமாக இயங்கி வருகிறது.

இதனை தெளிவாக தெரிந்து கொண்டும்கூட நல்லாட்சியின் ஜனாதிபதி உள்ளிட்ட கடந்த காலத்தில் அனைத்து சிங்கள அரசியல் தலைவர்களும் அதற்கான அங்கீகாரத்தையும் அனுமதியையும் வழங்குவதற்கு என்றும் தயங்கியதில்லை.

எனவே எமது நிலங்களை, எமது வாழ்வாதாரங்களை, எமது களப்புகளையும் ஏரிகளையும் கரையோரங்களையும் நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

பேசுவதாலும் எழுதுவதாலும் புரியவைக்க முடியாத ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும் ஒத்துழையாச் செயற்பாடுகளையும் ஜனநாயக செயற்பாடுகள் மூலம் முன்னெடுப்பதே எமக்குள்ள ஒரே தெரிவாகியுள்ளது.

மண்ணையும் மொழியையும் நேசிக்கும் உணர்வாளர்களே, எதிர்வரும் 28.08.2018 அன்று முல்லைத்தீவு PWD வீதியிலிருந்து மாவட்ட செயலகம் வரை ஜனநாயக ரீதியாக நடைபெறுகின்ற விழிப்புணர்வு பேரணியில் அனைவரும் அணிதிரள்வோம்,

எமது மக்களுக்கெதிரான அநீதியை அம்பலப்படுத்துவோம். நில அபகரிப்பை தடுத்திடுவோம். வாழ்வையும் வளத்தையும் எமது குழந்தைகளின் எதிர்காலத்தையும் காத்திடுவோம். (2)

# முல்லைத்தீவில் இரு பாலங்களை புனரமைக்க அமைச்சரவை அங்கீகாரம்

## முல்லை.அரச அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல் பாலம் உள்ளிட்ட இரண்டு பாலங்களைப் புனரமைப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

அடுத்தாண்டில் அதற்கான நிதியைக் கோரியுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்திற்கான புனரமைப்பதற்கான நிதி எவையும் இதுவரை இடைக்கப் பெறவில்லை. முல்லைத்தீவு பரந்தன் ஏ -35 வீதியின் நீண்டகாலமாக சேதமடைந்து காணப்படும் வட்டுவாகல் பாலத்தை புனரமைக்குமாறு தொடர்ச்சியாக பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்து வருகின்றன.

ஏ-35 வீதியில் மிக நீண்ட ஒரு பாலமாக காணப்படும் மேற்படி பாலத்தின் பாதுகாப்பு தூண்கள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், பாலத்தின் உட்பகுதி மிக ஆபத்தானதாக காணப்படுவதுடன், கடந்தாண்டிலும் அதற்கு முன்னரும் சேதமடைந்து போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் குறித்த பகுதி தற்காலிகமாக சீர் செய்யப்பட்டு போக்குவரத்துக்கு விடப்பட்டுள்ளது.

இந்தப்பாலத்தின் புனரமைப்புப் பணிகள் தொடர்பில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் தொடர்பு கொண்டு வினவிய போது, இந்த ஆண்டிலும் இதனைப் புனரமைப்பதற்கான நிதி எதுவும் கிடைக்கவில்லை.

வட்டுவாகல் பாலமானது முன்னுரிமைப்படுத்தப்பட்டு புனரமைப்படவேண்டிய ஒரு பாலமாக காணப்படுகின்றது.

இதற்கான நிதியை கோரியிருக்கின்றோம். நிதி கிடைக்கும் பட்சத்தில் அதனைப் புனரமைக்க முடியும். முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல் பாலம் உள்ளிட்ட இரண்டு பாலங்ளை புனரமைப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

அடுத்தாண்டில் அதற்கான நிதியை கோரியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)




# இளைஞர், யுவதிகளின் மேம்பாட்டிற்கு மனோகணேசன் ஒருகோடி நிதியொதுக்கீடு

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட இளைஞர்.யுவதிகளின் மேம்பாடு கருதி தனது அமைச்சின் நிதியொதுக்கீட்டிலிருந்து ஒரு கோடி ரூபாவை வழங்குவதாக தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் இளைஞர்.யுவதிகளை நேற்றுக்காலை 9 மணியளவில்சந்தித்த போதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

தனது அமைச்சின் நிதி ஒதுக்கீடு மூலம் கிளிநொச்சி மாவட்ட இளைஞர்.யுவதிகளின் மேம்பாட்டிற்காக ஒரு கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்வதாகவும், இதற்கான திட்டமிடல்கள் மற்றும் முன்மொழிவுகளை அதிகாரிகள் ஊடாக அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (2-312)

# அரசியல் தீர்வை பெறுவதற்காக பொருளாதார தீர்வை ஒத்தி வைத்துள்ளனர்

## கிளிநொச்சியில் அமைச்சர் மனோகணேசன் தெரிவிப்பு



(பரந்தன்)

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கும் வரை பொருளாதாரத்தீர்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒத்திவைத்துள்ளனர் என தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலகத்தில் கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் இளைஞர், யுவதிகளை நேற்றுக்காலை 9 மணியளவில் சந்திந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு தேவை. அது அவசியம். ஆனால் அந்த அதிகாரப் பகிர்வு கிடைக்கும் வரை நாம் பொருளாதார நன்மைகளைப் பெறாது இருக்க முடியாது. கூட்டமைப்பு அதிகார பகிர்வை கோருகிறது. எமது கூட்டணியும் அதிகாரப் பகிர்வை கோருகிறது.

ஆனால்வேறுபாடு என்னவெனில் நாங்கள் மக்களுக்கு மிகவும் தேவையான பொருளாதார நன்மைகளையும் பெற்றுக்கொண்டு அதிகாரப் பகிர்வை கோருகின்றோம்.ஆனால் கூட்டமைப்பு அவ்வாறல்ல, எனவே தான் நான் வடக்கு-கிழக்கிற்கு அடிக்கடி வந்து செல்கின்றேன்.

நாட்டில் தற்போது யுத்தம் இல்லை ஆனால் யுத்தம் ஏற்பட்டதற்கான காரணங்கள்அப்படியே இருந்துகொண்டு தான் இருக்கின்றன. யுத்தம் இல்லை என்பதால் சமாதானம் ஏற்பட்டுவிடாது. சமாதானம் ஏற்படவேண்டும் என்றால்சமத்துவம்இருக்க வேண்டும். எனவே அந்தப் பணிகளைத்தான் தற்போது அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது .

தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் தலைவர்கள் அரசாங்கத்தை உருவாக்கி விட்டு வெளியிலிருந்து வேடிக்கை பார்க்கவில்லை. அவர்கள் உள்ளே வந்து பதவிகளைப் பெற்று தங்கள் மக்களுக்கு சேவையாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறே மலையகத்திலும் இடம்பெற்றுள்ளது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக வடக்கு- கிழக்கு மக்களின் பிரதிநிதிகள் அரசியல் தீர்வைப் பெறுவதற்காக அதுவரைக்கும் பொருளாதார தீர்வை பெறுவதனை ஒத்திவைத்துள்ளார்கள். அரசியல் தீர்வு வரும் போது வரும் அதனை வர வைப்போம் ஆனால் அதுவரை பொறுத்திருக்காது வாழ்வாதார உதவிகளை, உட்கட்டமைப்பு வசதிகளை, வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

நான் கிளிநொச்சியில் வந்து வாக்கு கேட்கப்போவதில்லை. ஆனாலும் இங்கே எனது உறவுகள், எனது இரத்தம், எனது இனம் இருக்கிறது. எனவே அந்த இரத்த உறவை எவரும் பிரிக்க முடியாது. பிரிக்க விடமாட்டேன். என்றும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட சம்மேளனத் தலைவர் செல்வகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கொழும்பு மாநாகர சபை உறுப்பினர் பாஸ்கரா, சுரேஸ் மற்றும் பூநகரி பிரதேச சபை உறுப்பினர் போசன், இளைஞர், யுவதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

# விழிப்புலனற்றோர் சங்க வீர,வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில்



(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் நிதி அனுசரணையில் வன்னி விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் தமிழ்ப் பரா நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்த மற்றும் வெற்றியீட்டிய வன்னி விழிப்புலனற்றோர் சங்க வீர, வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

. கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் வன்னி விழிப்புலனற்றோர் சங்க தலைவர் ஞானகுமாரின் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில்,

தமிழ்ப் பரா நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்த மற்றும் வெற்றியீட்டிய வன்னி விழிப்புலனற்றோர் சங்க வீர, வீராங்கனைகளுக்கு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பரிசுப் பொருட்கள், மூக்குக் கண்ணாடிகள், போசாக்கு உணவுப் பொதிகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் செயலாளர் சுரேஷ், விஜயராஜா, ஆனந்தி ஆகியோர் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கி வைத்தனர்.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் உறுப்பினர்கள், விழிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (2-312)

# தமிழர்களுக்கு என்றுமே பயன்படாத மகாவலித்திட்டத்தை நிராகரிக்கிறோம்

## செல்வம் எம்.பி.தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

தமிழர் தாயகத்தை துண்டாடவும் இனப் பரம்பலை மாற்றியமைத்து தமிழர்களை அரசியல் ரீதியாக பலவீனப்படுத்தவும் மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை வன்மையாகக் கண்டிக் கின்றோம். மகாவலி எதிர்ப்பு தமிழர் மர புரிமை பேரவை நாளை 28 ஆம் திகதி நடத் தவுள்ள அறவழிப் போராட்டத்திற்கு எமது பூரண ஆதரவை தெரிவிப்பதோடு போராட் டத்தில் கட்சி பேதமின்றி அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கலநாதன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மகாவலி வலயத்தினுள் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களின் ஊடாக 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டு தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டு 9 சிங்கள கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய வெலி ஓயா பிரதேச செயலாளர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.




மகாவலியில் இதுவரை காலமும் தமது செயற்பாடுகளை வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவுடன் மட்டுப்படுத்தியிருந்த நிலையில் அண்மையில் கருநாட்டுக்கேணி கடற்கரையில் எட்டு சிங்கள மீனவர்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கியதன் ஊடாக கரைதுன்றப்பற்று பிரதேச செயலாளர் பிரிவினுள் தனது காணி அதிகாரத்தை பிரயோகிக்க ஆரம்பித்து ள்ளது.

மேலும் மும்மொழியப்பட்ட மகாவலி "மு" மற்றும் "து" வலயமூடாக வடக்கின் பெரும் பகுதி காணி அதிகாரம் மகாவலி அதிகாரசபையின் கீழ் செல்லவுள்ள அபாயநிலை தோன்றியுள்ளது, எனவே காணி அதிகாரங்கள் பறிக்கப்பட்ட இனப்பிரச்சினைத் தீர்வானது உப்புச்சப்பற்றதாகவே இருக்கும். தமிழர்களுக்கு என்றுமே பயன்படாத சிங்கள குடியேற் றங்களை மட்டுமே இலக்கா கக்கொண்ட மகாவலி திட்டத்தை முழுமையாக நிராகரிக்கின்றோம்.

மேற்படி விடயம் தொடர்பாக மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை பேரவை நாளை 28 ஆம் திகதி நடத்தவுள்ள அறவழிப்போராட்டத்திற்கு எமது பூரண ஆதரவை தெரிவிப்பதோடு இப்போராட்டத்தில் கட்சிபேதமின்றி அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

# அபிவிருத்தி, புனரமைப்பு என்ற போர்வையில் தமிழர் தாயகப் பிரதேசங்கள் ஆக்கிரமிப்பு

## கிளி. மாவட்ட பிரஜைகள் குழு பேரணிக்கு ஆதரவு

திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், தமிழினத்தின் மரபுரிமைகளை திட்டமிட்டுச் சிதைத்தல், இனப்பரம்பலினை மாற்றியமைத்தல் என்பவற்றின் ஊடாக தமிழினத்தை அரசியலில் பலவீனப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக "மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை பேரவையினால்" முல்லைத்தீவு மாவட்டத்தில் நாளை 28 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் கண்டனப் பேரணிக்கு கிளிநொச்சி மாவட்டப் பிரஜைகள் குழு முழுமையான ஆதரவினை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

அபிவிருத்தி, புனரமைப்பு என்ற போர்வையில் தமிழர் தாயகப் பிரதேசங்கள் காலம் காலமாக சிங்கள பேரினவாத அரசினால் கபளீகரம் செய்யப்படுவது தொடர்ந்த வண்ணமுள்ளது. இதனால் தமிழரின் தாயகக் கோட்பாட்டை கூறுபோட்டு பிரித்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளின் மூலங்கள் அழிக்கப்படுகின்றது. தமிழர் தாயகப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டமை ஆயுதப்போரா ட்டம் தோற்றம் பெறுவதற் கான முதன்மைக் காரணியாக வரலாற்றில் அமைந்துள்ளதனை யாவரும் அறி வோம்.

எனவே சிங்கள பேரினவாத அரசின் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை பேரவையினால் முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் கண்டனப் பேரணியில் தமிழ் மக்கள் அனைவரும் உணர்வு பூர்வமாக பங்கேற்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# சவாரி மாட்டை வெட்டி இறைச்சியாக்கிய நபர் கைது

## மற்றொருவர் தப்பியோட்டம்

(கிளிநொச்சி)

சவாரி மாட்டை வெட்டி இறைச்சியாக்கிய நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மற்றொருவர் தப்பிச் சென்றுள்ளதாக தர்மபுரம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



வடக்கு மாகாணத்தில் மாட்டுவண்டி சவாரி பாரம்பரிய விளையாட்டாக பேணப்பட்டுவரும் நிலையில் இவ்வாறான செயற்பாடு மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் பகுதியில் குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

சவாரிக்குப் பயன்படுத்தப்பட்ட மாடு ஒன்றை திருட்டுத்தனமாக வீடொன்றில் வைத்து இறைச்சியாக்கியமை தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் தேடுதல் மேற்கொண்டனர். இதன்போது குறித்த மாட்டிறைச்சியும் எச்சங்களும் மீட்கப்பட்டதுடன் சம்பவத்துடன் தொடர்புடையவர் என தெரிவித்து ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் மற்றொருவர் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக இவ்வாறு பொதுமக்களின் மாடுகள் கடத்தப்படுவதும் சட்ட விரோதமான முறையில் இறைச்சியாக்கப்படுவதும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2)



கிளிநொச்சி மாயவனூர் மக்களின் குடிநீர்த்தேவைக்காக புலம்பெயர் உறவினர் ஒருவரால் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடாக திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் இடம் பெற்றது. 2இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட குறித்த திட்டம் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது. ஆறு குடும்பங்கள் உள்ள குறித்த பகுதியில் சுமார் 100 குடும்பங்கள் வரை குடிநீர்த்தேவையை குறித்த திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (2)

# இரண்டு மீன்பிடி இறங்குதுறைகள் ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்படும்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பகுதியில் இரண்டு மீன்பிடி இறங்கு துறைகள் ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்படவுள்ளதுடன் சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகிலான பொழுதுபோக்கு படகு சவாரித் திட்டம் இரண்டு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளதாக மாவட்ட செயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரிப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வளர்மதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழுள்ள இறங்கு துறை மற்றும் இரணை மாதா நகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் கீழுள்ள இறங்குதுறை என்பவற்றை ஆழமாக்கி புனரமைத்துத் தருமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இவ்வாண்டு தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சின்மூலம் வளர்மதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்திற்கு சொந்தமான இறங்குதுறை 2.5 மில்லியன் ரூபா செலவிலும் இரணைமாதா நகர் இறங்குதுறை 3.மில்லியன் ரூபா செலவிலும் ஆழமாக்கி புனரமைக்கப்படவுள்ளது.

இதேவேளை ஏ-32 பூநகரி-மன்னார் வீதியின் சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகில் சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்துக் காணப்படுவதனால் இப்பகுதியில் பொழுதுபோக்குப் படகு சவாரித்திட்டம் ஒன்றை இரண்டு மில்லியன் ரூபா செலவிலும் அமைக்கவுள்ளதாக மாவட்டச்செயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)



கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. அடியவர்களின் அரோகரா கோஷத்தின் மத்தியில் கந்தசுவாமி தேர் ஏறி அடியவர்களுக்கு அருள்பாலித்தார். அதிக எண்ணிக்கையான பக்தர்கள் தாங்களின் நேர்த் திக்கடனான பிற தட்டை செய்தல், தீ சட்டி ஏந்திச் செல்லுதல், பறவைக்காவடிகள் என தங்களின் நேர்த்திக்கடன்களை செலுத்தினார்கள்.

(படம்:- பரந்தன் செய்தியாளர்)



மன்னார் வட்டக்கண்டல் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. பல நூற்றுக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டு தங்களின் நேர்த்திக்கடன்களைச் செலுத்தினர்.

# கண்டாவளை பிரதேச செயலகத்திற்கு பிரதேச செயலாளர் விரைவில் நியமனம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்கான புதிய பிரதேச செயலர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் அமைச்சின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவிற்கான நிரந்தர பிரதேச செயலர் எவரும் இதுவரை நியமிக்கப்படாத நிலையில் கடந்த ஆறு மாதங்களாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பதில் கடமையாற்றி வருகின்றார்.

இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் வினவியபோது. தற்போது பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பதில் கடமையாற்றி வரும் நிலையில் பொதுமக்களிடமும்ஏனைய தரப்புக்களிடமிருந்தும் கண்டாவளை பிரதேச செயலாளரை நிரந்தரமாக நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் ஒரு நிரந்தர பிரதேச செயலரை நியமிக்க அமைப்பு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

## வவுனியா சிறைச்சாலைக்குள்

# போதைப்பொருள் கடத்த முற்பட்ட பெண்கள் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியா மத்திய சிறைச்சாலைக்குள் கஞ்சா, ஹெரோயின் ஆகிய போதைப்பொருளை கடத்த முற்பட்ட இரு பெண்களை நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் சிறைச்சாலை அதிகாரிகள் மடக்கிப் பிடித்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சிறைச்சாலைக்கு அருகே காணப்படும் வீதியில் நின்று சிறைச்சாலை வளாகத்தினுள் போதைப்பொருளை வீச முற்பட்ட சமயத்திலேயே இரு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேக்கவத்தை பகுதியைச் சேர்ந்த 27வயதுடைய பெண்ணிடமிருந்து 12 கிராம் கஞ்சாவும் சாம்பல் தோட்டம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய பெண்ணிடமிருந்து 140 கிராம் ஹெரோயினையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-281)

# மருத்துவத்துறையை மேம்படுத்துவதற்கு வேலைத்திட்டங்களுக்கு நிதியொதுக்கீடு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் மருத்துவத் துறையை விருத்தி செய்யும் வகையில் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சினூடாக உட்கட்டுமான வசதி,பொருட்கள்கொள்வனவுகள் போன்ற வேலைத் திட்டங்கள் 49.15 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட செயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மருத்துவத்துறையை மேம்படுத்தும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்கள் பலதரப்பட்ட நிதியொதுக்கீடுகளின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன


அந்த வகையில் மேற்படி அமைச்சின் கீழ் 49.15 மில்லியன் ரூபா செலவில் சுகாதாரத்துறை சார்ந்த வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்டச் செயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)





# யாழில் நேற்று இந்து இளைஞர் மாநாடு

சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஐந்தாவது இளைஞர் மாநாடு யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நேற்று நடைபெற்றது. வண்ணை சிவன் கோவில் முன்றலிலிருந்து ஆரம்பித்த ஆன்மீக ஊர்வலம் கலாசார நிகழ்வுகளுடன் மண்டபத்தை வந்தடைந்தது. இந்த நிகழ்வில் மாண வர்களின் கலை நிகழ்வுகள், யோகா, சிறப்புரைகள், கருத்தாடுகளம் என்பன இடம்பெற்றன. இந் நிகழ்வில் இந்து சமயத் தலைவர்கள், பேராசிரியர்கள், புத்திஜீவிகள், மாணவர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா, ஐ.சிவசாந்தன்)



# விபத்துக்களில் பத்துப்பேர் பலி!




(கொழும்பு)

நாடளாவிய ரீதியில்வாகன விபத்துக்களில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர். கல்குடா, மீரிகம, கொச்சிக்கடை, கெகிராவ, கொடகஹவெல, மஹவ, மின்னேரியா மற்றும் கொஸ்கம பிரதேசங்களில் இவ்வாறு விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

மின்னேரியா நகரில் காரர் ஒன்று மரம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு இளைஞர்கள் பலியாகினர்.

கண்டியிலிருந்து கதுருவளை நோக்கிப் பயணித்த காரே நேற்று அதிகாலை விபத்துக்குள்ளாகியது.

இதேவேளை, இரத்தினபுரி - எம்பிலிப்பிடிய வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் பேருந்து ஒன்றுடன் மோதுண்டு குறித்த விபத்து நேர்ந்துள்ளது.

இதன்போது அகுனுகொலபெலஸ்ஸ பிரதேசத்தினை சேர்ந்த 32 மற்றும் 19 வயதுடைய இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே , அநுராதபுரம் வீதி கெத்தபஹுவ பிரதேசத்தில் காரில் மோதி வீதியில் பயணித்துக் கொண்டிருந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

றாகமை-மகுல்பொகுண பிரதேசத்தினை சேர்ந்த நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மற்று மோர் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொஸ்கம - பூகொட வீதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், பாரவூர்தியின் சில்லில் சிக்கி இவர் உயிரிழந்துள்ளார்.

கொஸ்கம பிரதேசத்தினை சேர்ந்த 40 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கெகிராவ - கிதுல்ஹிடியாவ பிரதேசத்தில் ஆட்டோ மற்றும் ஜீப் ரக வாகனம் மோதுண்டதில் ஆட்டோ சாரதி உயிரிழந்துள்ளார்.

தம்புள்ளை பிரதேசத்தினை சேர்ந்த 62 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆட்டோ ஒன்று அதிவேகம் காரணமாக வேகத்தினை கட்டுப்படுத்த முடியாமல் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன் கொச்சிகடை பிரதேசத்தினை சேர்ந்த நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மீரிகம பிரதேசத்தில் ஜீப் ரக வாகனம் ஒன்று வீதியில் பயணித்துக் கொண்டிருந்த நபர் மீது மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மீரிகம பிரதேசத்தினை சேர்ந்த 59 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, கல்குடா - பாசிகுடா வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் மின்கம்பம் ஒன்றில் மோதுண்டு விபத்து நேர்ந்துள்ள நிலையில் மற்றும் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரியவருகிறது. (இ-7)

# தேசிய அரசாங்கத்தில் எந்த மாற்றமுமில்லை

## உறுதியான நிலைப்பாட்டில் ரணில்

(காலி)

இரண்டு பிரதான கட்சிகள் இணைந்து ஆட்சி நடத்தி வரும் தேசிய அரசாங்கத்தில் எந்த மாற்றங்களும் ஏற்படாது என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துலால் பண்டாரிகொட தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி தனித்து ஆட்சி அமைக்க வேண்டும் என கட்சி உறுப்பினர்கள்சிலர் கூறினாலும் அதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரும்பவில்லை.

இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் இணைந்து ஆட்சியமைக்க வேண்டும் என்று பொதுத் தேர்தலில் மக்களுக்கு வாக்குறுதி வழங்கப்பட்டது.

நாட்டின் தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டியுள்ளமை தொடர்பில் பிரதமர், இரண்டு பிரதான கட்சிகள் தொடர்ந்தும் இணைந்து ஆட்சி நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து வருகிறார் எனவும் பந்துலால் பண்டாரிகொட மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சு.க.இந்த அரசிலிருந்து வெளியேற வேண்டுமாம்

(ஹற்றன்)

நல்லாட்சி அரசாங்கத்திலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறி தனித்து ஆட்சி அமைக்க வேண்டும் என அந்தக் கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளரும், மஸ்கெலியா பிரதேச சபையின் உப தவிசாளருமான பெரியசாமி பிரதீபன் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



“மாகாண சபை தேர்தலை நடத்துவது தொடர்பிலான திருத்த சட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளார்.

எனினும் இது தொடர்பிலான பிரேரணையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி புறக்கணித்துள்ளது.

இதிலிருந்து என்ன தெரிகின்றது என்றால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஒரு போதும் நல்லாட்சியின் தலைவர் என்ற ரீதியில் கண்டு கொள்வதில்லையே என்பதாகும்.

எனவே ஜனாதிபதி இதை நன்கு புரிந்து மக்களுக்கு சேவை செய்யும் நோக்கில் நல்லாட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற ரீதியில் தனியான ஒரு அரசாங்கத்தை அமைக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகாவலி அபிவிருத்தித் திட்டப்போர்வையில்

# அரசு கபடநாடகம்

## ஈ.பி.ஆர்.எல்.எப். எம்.பி. ஆனந்தன் சுட்டிக்காட்டு



(பனிக்கன்குளம்)

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் மகாவலி நீரை வழங்குவதற்கான திட்டம் என்ற பெயரில் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகளை கபளீகரம் செய்வதற்கு எதிராக தொடர்ந்து போராடவுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மகாவலி திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மகாவலி எதிர்ப்புத் தமிழர் மரபுரிமை பேரவை நாளை 28 ஆம் திகதி நடத்தவுள்ள போராட்டத்திற்கு தாம் முழு ஆதரவை வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

வடக்கு-கிழக்கை நிரந்தரமாகப் பிரிப்பதற்கும் எமது பிரதேசத்தில் அரச அனுசரணையுடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி எம்மை எமது பிரதேசத்திலேயே சிறுபான்மையினராக்குவதற்கும் அரசினால் மேற்கொள்ளப்படும் முயற்சியை முறியடிக்க வேண்டியது எம் அனைவரதும் கடமையாகும். அந்த வகையில் மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை பேரவையின் கண்டனப் பேரணிக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் தனது ஆதரவினைத் தெரிவித்துள்ளது.

அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், தமிழினத்தின் மரபுரிமையை திட்டமிட்டு சிதைப்புதுடன் இனப்பரம்பலையும் மாற்றியமைத்து தமிழினத்தின் அரசியல் உரிமைகளை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளாகும்.

மகாவலி அபிவிருத்தி திட்டம் என்ற போர்வையில் கபடநாடகம் ஒன்றை அரசு மேற்கொண்டு வருகின்றது. இதன் வெளிப்பாடே நெடுங்கேணி பிரதேசசபைக்கு 14 சிங்கள உறுப்பினர்களும் 11 தமிழ் உறுப்பினர்களும் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட நிகழ்வாகும்.

வடக்கு மாகாணத்திற்கு காணி அதிகாரத்தை இல்லாதொழித்து இங்கும் சிங்கள பெரும்பான்மையை நிறுவி தமிழன் மரபுரிமையை வேரறுத்து அரசியல் பொருளாதார கலாசார ரீதியாக தமிழினத்தை ஒடுக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட இத்திட்டத்தை தடுத்திட தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என ஈ.பி. ஆர்.எல்.எப். விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-2-281)

# நல்லூர் ஆலயச் சூழலில் தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு நெல்லியடி துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.15 மணி வரை தெய்வீக இசையரங்கு நடைபெற்று வருகிறது.

இதில் இன்று வீணை இசை, வீணை- மீரா பேரின்பநாதன், மிருதங்கம்- வ.ரமணா, முகர்சிங்- நி.மோகன், கெஞ்சிரா- ஸ்ரீடிலுக்சன்.

இசைக்கச்சேரி:

பாட்டு-செ.குமாரசாமி, வயலின்-அ.ஜெயராமன், ஆர்மோனியம்-ந.செல்வச் சந்திரன், மிருதங்கம்- க.நந்தகுமார், தபேலா- பிரம்மஸ்ரீ.வே.பிரபாகரசர்மா, முகர்சிங்-ஸ்ரீ.டிலக்சன் ஆகியோர் வழங்குவர். (இ)

# கந்தபுராண எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய,கலாசார அலுவல்கள் திணைக்களம் "கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்" என்ற தொனிப்பொருளில் நல்லூர்க்கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் கந்தபுராண எழுச்சி அருள் நெறி விழா-2018 நிகழ்வுகளை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்மணிமண்டபத்திலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலும் சிறப்புற முன்னெடுத்து வருகிறது.

அந்தவகையில், பன்னிரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இடம் பெறும். இதில் கலாபூஷணம் செ.சொர்ணலிங்கம் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக்குருமுதல்வர்ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள் திருமுன்னிலையில் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் இ. கர்ஜின் தலைமையில் ஓய்வுநிலை அதிபர், கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க, சண்டிலிப்பாய் மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நுவரெலியா, ஸ்ரீபாத தேசியக் கல்லூரி விரிவுரையாளர், சைவப்புலவர் சி. கா. கமலநாதன் "மேலையின் விதியை யார் வெல்லும்" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் திருமதி. உமா வைகுந்தன் குழுவினர் வழங்கும் கதம்ப இசை சிறப்பு நிகழ்வாகவும் இடம் பெறும். (இ-7)

# தமிழரின் வாக்கு சிதறாமலிருக்க கிழக்கில் கூட்டுத் தேவையுள்ளதாம்

## துரைராசசிங்கம் கூறுகிறார்



(ஏறாவூர்)

எல்லோரும் ஒற்றுமைப்பட வேண்டும் என்பது எல்லோர் மனதிலும் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் அது எவ்வாறு செயற்படுத்தப்படப் போகின்றது என்ற விடயம் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் உடன்படிக்கையைப் பார்க்கும் போது தான் தெரியும் என கிழக்கு மாகாண முன்னாள் விவசாயத் துறை அமைச்சர் துரைராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

கூட்டு என்கின்ற முயற்சியிலே ஈடுபட்டு அதில் களமும் கண்டவர்கள் நாங்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்ற அனைத்துத் தமிழ் கட்சிகளும் ஓரிடத்தில் சந்தித்துக் கலந்துரையாடியமை தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் அழைப்பின் பேரில் நாங்கள் அங்கு கலந்து கொண்டோம். அங்கு பொதுச் சின்னம் தொடர்பில் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

எல்லாத் தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து கிழக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதன் மூலம் தமிழர்களின் வாக்குகள் சிதறடிக்கப்படாமல் இருப்பதற்குரிய வழிவகைகளை காண முடியும் என்றும் அதன் மூலம் அதி உச்ச தமிழ் பிரதிநிதிகளைப் பெற முடியும் என்றும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இதற்கான பொது வேலைத் திட்டம் ஒன்றை அமைத்துக் கொண்டு தொடர்ந்து இதற்காக வேலை செய்ய வேண்டும் என்றும் இதற்காக நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்திருக்கின்றோம்.

இதனடிப்படையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை வரைவதாகவும் அந்த ஒப்பந்தம் எல்லாக் கட்சிகளுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

அவ்வாறு புரிந்துணர்வு உடன்படிக்கை அனுப்பிவைக்கப்படுகின்ற போது எமது கட்சி மட்டத்திலே அதனைப் பரிசீலனை செய்து எமது அபிப்பிராயங்களைத் தெரிவிப்போம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ரீதியில் நாங்கள் ஏற்கனவே ஒரு கூட்டாகச் செயற்படுகின்றோம் என்ற அடிப்படையில் கூட்டு என்கின்ற முயற்சியிலே நாங்கள் ஈடுபட்டு அதில் களமும் கண்டிருக்கின்றோம்.

எமது இந்தக் கூட்டில் பலரும் சேர்ந்து கொள்வதை நாங்கள் வரவேற்கின்றோம். எனவே கூட்டு என்பது கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் தமிழர்களுக்குத் தேவை என்பதை நாங்கள் வலியுறுத்தியிருக்கின்றோம்.

எல்லோரும் ஒற்றுமைப்பட வேண்டும் என்பது எல்லோர் மனதிலும் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் அது எவ்வாறு செயற்படுத்தப்படப் போகின்றது என்ற விடயம் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் உடன்படிக்கையைப் பார்க்கும் போது தான் தெரியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




### கருணைக் கந்தா சரணம்

சிவனார் மைந்தனே<br>
சிவனின் குருவே<br>
ஐங்கரன் சோதரா<br>
பச்சை மயில் வாகனா<br>
பன்னிரு திண் தோளா<br>
அச்சம் அகற்ற வா<br>
சந்ததம் உன் பணி செய்ய<br>
வந்தனை செய்தேன்<br>
தந்தருள் உன் வரம்<br>
கருணைக் கந்தா சரணம்

கலாநிதி<br>
சண்முகயோகினி ரவீந்திரன்

### துஞ்சமையா உன் பாதம்


சிங்கார வேலா சிவசண்முகா - எம்<br>
பைங்குறை தீர்த்தருள்வாய் பாலமுருகா<br>
ஐங்கரன் சோதரா அரும்பொருளே குமரா<br>
வஞ்சகர் மத்தியில் நிலையிழந்து<br>
நிற்கின்றோம்- நீயே<br>
தஞ்சம் ஐயா உன்பாதம் தயை<br>
கூர்ந்தருவாய் குகனே

ம.தவமணி<br>
திருநெல்வேலி.

### நல்லைக் குமரப் "பா"

ஊமைக் குமர குருபரரும்<br>
உளத்தினி லுன்னைத் துதிசெய்யத்<br>
தாமே வந்துன் கருணையினால்<br>
தமிழார் கவிதைத் தரமோங்கத்<br>
தூமா மணியே துணைபோனாய்<br>
சொரியுஞ் சொல்வேற் கணையானாய்<br>
பூமா நிறைம் பொலிவுபெறப்<br>
புரிவாம் நல்லைக் குமரப்பா!

கலாபூஷணம்.<br>
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

# கர்நாடகாவில் கனமழை இருபது பேர் உயிரிழப்பு

கர்நாடக மாநிலம், குடகு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்த கனமழையினால் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளம் ஆகியவற்றில் சிக்கி உயிரிழந்தவர்கள் 20 ஆகும்.


அத்துடன் கனமழையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வேண்டிய உதவிகளை தொடர்ந்து செய்து வருவதாகவும் அரசு தெரிவித்துள்ளது.



மேலும் இப்பகுதியிலுள்ள பெருமளவான வீடுகள் மற்றும் ஏனைய கட்டடங்கள் நிலச்சரிவின் காரணமாக மண்ணுக்குள் புதைந்து காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன் குடகு மாவட்டத்தில் அதிகளவு பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று நேற்று முன்தினம் பார்வையிட்டதுடன், குறித்த விடயத்தில் முன்னெடுக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (7)

# சுற்றுலா வி 20 பேர் உயி



வடகிழக்கு சீனாவிலுள்ள சுற்றுலா விடுதியொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளனர். அத்தோடு, 18 பேர் தீக்காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் பரவிய தீ, 7.50 மணியளவில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

30 தீயணைப்பு வாகனங்கள் சகிதம் 105 தீயணைப்பு வீரர்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்து ஏற்பட்ட கட்டடத்திலிருந்து 70 பேர் வரை பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (7)

# நாடு முழுவதும் ஒரே சித்தாந்தத்தை பரப்புவதற்கு பா.ஜ.க. முயற்சி-ராகுல்



இந்தியா முழுவதும் ஒரே சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்த பா.ஜ.க மற்றும் ஆர்.எஸ்.எஸ் முயற்சித்து வருவதாக காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல்காந்தி குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜேர்மனி மற்றும் இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, லண்டனில் வெளிநாடு வாழ் காங்கிரஸ் உறுப்பினர்களின் நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போதே, இந்தியா முழுவதும் ஒரே சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்த பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ் ஆகியன முயற்சித்து வருவதாக ராகுல்காந்தி குற்றம் சுமத்தியுள்ளார். மேலும், இந்த முயற்சியானது நாக்பூரில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மோடி பிரதமராக வருவதற்கு முன்னர் இந்தியாவில் எந்தத் திட்டமும் செயற்படுத்தப்படவில்லையென கூறப்படுகிறது. ஆனால், அவர்கள் இவ்வாறான விடயங்களில் காங்கிரஸ் கட்சியை விமர்சிப்பதாக நினைத்து இந்தியாவைத் தான் அவமதித்து வருகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்தோடு, இந்தியாவில் தற்போது தலித் இன மக்கள், விவசாயிகள், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையின மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என்றும் தமது உரிமைக்காக மக்கள் குரல் எழுப்பினால் அவர்கள் மீது தாக்குதல் நடத்தும் போக்கையே மத்திய அரசாங்கம் கடைப்பிடித்து வருகின்றது என்றும் ராகுல்காந்தி குற்றம் சுமத்தினார்.

பா.ஜ.க.வின் ஆட்சிக்குப் பின்னர் சாதி, மதங்களை அடிப்படையாக வைத்து பாகுபாடு காட்டப்படுகிறது எனவும் அவர் சரமாரியாக விமர்சனங்களை முன்வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# ஈரானில் நிலநடுக்கம் இருவர் உயிரிழப்பு

## 241 பேர் படுகாயம்

ஈரானின் மேற்குப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட 5.9 ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி இருவர் உயிரிழந்துள்ளதுடன், 241 பேர் காயமடைந்துள்ளனர்.

ஈரானின் ஜாவான்ருட் (Javanrud) நகரின் மேற்குப் பகுதியிலிருந்து 31 கி.மீ. தொலைவில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், 3.0 அளவில் அடுத்து அடுத்து இரண்டு நிலநடுக்கங்கள் உணரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

கடந்த வருடம் ஈரான் ஈராக்கிய எல்லையுடனான பகுதியில் 7.3 ரிக்டரில் தாக்கிய நிலநடுக்கத்தில் குறைந்தது 530 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஈராக்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 6.1 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஒன்று உணரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (7)

# தாய்வானில் வெள்ளம் ஏழு பேர் உயிரிழப்பு

## 1000 பேர் இடப்பெயர்வு

தாய்வானின் தென் பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் சுமார் 1,000 இற்கும் மேற்பட்டவர்கள் தங்களின் இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து சென்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதன்போது ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக 7 பேர் வரை உயிரிழந்துள்ளதாக தாய்வான் அரசின் உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாட்களாக ஷியாயி கவுண்டியில் உள்ள




11 நகரங்களில் 47 இடங்களில் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள வீடுகள் மற்றும் பல வாகனங்கள் நீரில் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை விஜயம் செய்திருந்த போது, தங்களின் நிலை குறித்து சினமடைந்திருந்த குடியிருப்பாளர்கள் தங்கள் நிலைமையை உயர்த்துவதற்கு துரித நடவடிக்கைகளை கோரியிருந்தனர்.

இந்த நிலையில், மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் குறித்து அரசாங்கத்தின் சார்பில் மன்னிப்பு கோரிய தாய்வான் பிரதமர் வில்லியம் லாய், உட்கட்டமைப்பு பற்றிய சமீபத்திய சூழ்நிலைகளை பார்வையிடுவதற்கு அதிகாரிகள் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

கடந்த வாரம் வளிமண்டலத்தில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக தாய்வானின் தென் பிராந்தியத்தில் கன மழை பெய்தது. புயல் தாக்கம் அகன்ற போதிலும், பல இடங்களில் வெள்ள நீர் இன்னமும் வழிந்து செல்லாமல் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# மெக்சிக்கோவில் பழங்கால முகமூடி கண்டுபிடிப்பு!



மெக்சிக்கோவின் தெற்குப் பகுதியிலுள்ள பெலன்கே நகரில் தொல்பொருள் ஆய்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குழுவினர், ஏழாம் நூற்றாண்டினைச் சேர்ந்த முகமூடியொன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

மெக்சிக்கோவில் தேசிய மானிடவியல் மற்றும் வரலாற்று அமையத்தின் தொல்பொருள் நிபுணர்கள் கொண்ட குழுவொன்று பெலன்கே மாளிகையில் ஆய்வுகளை மேற்கொண்டபோதே இந்த முகமூடியை கண்டுபிடித்துள்ளனர்.

குறித்த முகமூடி, மாயா சமூகத்தினரின் பக்கல் என்ற பிரபல மன்னனுக்கு சொந்தமானதாக இருக்கலாமென ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். (7)

# வெளிநாடு

ருதியில் தீ

யிரிழப்பு !




## வெனிசுவெலா புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு மனிதாபிமானத்துடன் எல்லைத்தடை நீக்கம்

### ஈக்குவடோர் அரசாங்கம்

ஈக்குவடோர் ஆட்சி எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் நுழைந்த வெனிசுவெலா புகலிடக் கோரிக்கையாளர்கள், தமது நாட்டினூடாக பாதுகாப்பாக கடந்து செல்ல ஈக்குவடோர் அரசாங்கம் மனிதாபிமான எண்ணத்துடன் அனுமதியளித்துள்ளது.

பெரு நாட்டிற்குச் செல்லும் புகலிடக் கோரிக்கையாளர்கள், ஈக்குவடோர் வழியாகவே செல்கின்றனர். இந்நிலையில், அவர்கள் பாதுகாப்பாக பயணத்தை மேற்கொள்ளும் வகையில் மனிதாபிமானம் கருதி அனுமதிப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி ஜோஸ் வெலன்சியா தெரிவித்தார்.

வெனிசுவெலா நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் குழப்பங்களினால் இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு புகலிடம் கோரி நுழையும் மக்களின் தொகை இந்த வருடம் மாத்திரம் 600,000 ஆக காணப்படுகிறது.

இந்நிலையில் குறித்த தொகையினை கட்டுப்படுத்தும் முகமாக, செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது அடையாள அட்டையுடையவர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படுமென கடந்த சனிக்கிழமை பெரு மற்றும் ஈக்குவடோர் ஆகிய இரு நாடுகளும் சட்டமொன்றினை அமுல்படுத்தியிருந்தன.

இதனைத் தொடர்ந்து.



பல மைல் கடந்து வந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் திரும்பிச் சென்ற அவல நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், செல்லுபடியாகும் கடவுச்சீட்டு இல்லாத புகலிடக் கோரிக்கையாளர்களும் தமது நாட்டினூடாக கடந்துசெல்ல மனிதாபிமானம் கருதி அனுமதியளிப்பதாக ஈக்குவடோர் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, அதிகரித்துவரும் புகலிடக் கோரிக்கையாளர்களின் நலன் கருதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் பிராந்திய ரீதியிலான கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளவுள்ளதாக ஈக்குவடோர் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (7)

### இரு நாடுகளுக்கிடையிலான உறவில் விரிசல்

## பாலஸ்தீனத்திற்கான நிதியுதவியை இடைநிறுத்திய டொனால்ட் ட்ரம்ப்

ஜெருசலேம் விவகாரத்தில், பாலஸ்தீனத்திற்கான நிதியுதவியை அமெரிக்கா நிறுத்தியுள்ளது. பாலஸ்தீனத்துக்கு வழங்குவதாக அமெரிக்கா அறிவித்திருந்த 250 மில்லியன் டொலருக்கும் அதிகமான நிதியுதவியை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிறுத்தியுள்ளார்.

ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அமெரிக்கா அங்கீகரித்ததை தொடர்ந்து பாலஸ்தீனத்திற்கும் வெள்ளை மாளிகைக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையில் கருத்து மோதல் நிலவி வந்த நிலையில் பாலஸ்தீனத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவியை நிறுத்துவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் நடப்பாண்டு வரவு-செலவுத் திட்டத்தில், பாலஸ்தீனத்தின் வெஸ்ட் பேங் மற்றும் காசா நகரங்களின் நிர்வாகம், சுகாதாரம், கல்வி மேம்பாட்டுக்காக 251மில்லியன் டொலர் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

எனினும், அப்பகுதிகளில் ஹமாஸ் பயங்கரவாதிகளின் தாக்கம் அதிகமாக இருப்பதால் பாலஸ்தீனத்துக்கு ஒதுக்கியிருந்த உதவித் தொகையை நிறுத்துவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

மனித உரிமைகள் மற்றும் பொருளாதாரம் என்பன ஏற்கனவே மோசமாக பாதிக்கப்பட்டுள்ள காசா பகுதியில், பொதுமக்களின் உயிர்களுக்கும் பயங்கரவாதிகள் ஆபத்தை விளைவித்து வருகின்றனர். இதனால் அப்பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவி வருகின்றது. அதன் காரணமாக அந்நாட்டிற்கு உதவி செய்ய சர்வதேச நாடுகள் சவாலை எதிர்கொண்டுள்ளன என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

இந்நிலையில், பாலஸ்தீனத்திற்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்ட நிதி நிறுத்தப்படுவதோடு, அது வேறு திட்டங்களுக்காக பயன்படுத்தப்படும் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (7)

## ஈரானில் வெடிப்புச் சம்பவம் பத்துப்பேர் உடல் சிதறிப் பலி!



(டெஹ்ரான்)

ஈரான் நாட்டில் குடியிருப்புப் பகுதியில் கொதிகலன் ஒன்று வெடித்துச் சிதறியதில் 10 பேர் பரிதாபமாக இறந்தனர்.

ஈரான் நாட்டின் வடகிழக்கில் அமைந்துள்ளது மஷாத் நகரம். இங்குள்ள மக்கள் வசிக்கும் குடியிருப்பு ஒன்றின் அருகில் நேற்றுக் காலை திடீரென கொதிகலன் வெடித்துச் சிதறியது.

இந்த விபத்தில் அங்கிருந்த 10 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாகப் பலியாகினர். மேலும், கொதிகலன் வெடித்துச் சிதறியதில் அருகிலிருந்த மூன்றுக்கு மேற்பட்ட கட்டடங்கள் சேதமடைந்தன.

தகவலறிந்து அங்கு வந்த மீட்புப் படையினர் கட்டட இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பலியானவர்கள் உடல்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக உள்ளூர் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (7)

## பப்புவா நியூகினியாவில் எரிமலையின் சீற்றத்தால் 2 ஆயிரம் பேர் கிராமங்களிலிருந்து வெளியேற்றம்




பப்புவா நியூகினியாவில் எரிமலை சீற்றத்தால் 2 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கிராமங்களை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளதாக தேசிய பேரிடர் மீட்புப் பணியினர் தெரிவித்துள்ளனர்.

சுமார் 9 ஆயிரம் மக்களைக் கொண்ட பப்புவா நியூகினியாவின் மனம் தீவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை எரிமலை சீற்றம் அதிகமாகக் காணப்பட்டது.

இதன் காரணமாக ஏராளமான வீடுகளையும் மரங்களையும் சாம்பல் மூடியுள்ளது. இதனால் அப்பகுதியில் சுவாசிக்கப் பெரும் சிரமம் ஏற்பட்டது.

இந்நிலையில் சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.(7)

## ஹவாய் தீவில் சூறாவளி அவசர நிலை பிரகடனம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஹவாய் தீவில் அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாவுக்கு பிரசித்தி பெற்ற தீவான ஹவாயில் லேன் எனப் பெயரிடப்பட்ட சூறாவளி தாக்கியுள்ளது. மணிக்கு 200 கி.மீ வேகத்தில் காற்றுடன் கனமழை பெய்து வருகிறது.

தற்போது, அலோஹா பகுதியில் நிலை கொண்டுள்ள இந்த சூறாவளி காரணமாக அப்பகுதியிலுள்ள வீடுகளின் கூரைகள் காற்றில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.


அத்துடன், அங்கு கனமழையால் வெள்ளமும் ஏற்பட்டுள்ளது. இதனால், மீட்பு மற்றும் நிவாரணப்பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்போது, அங்கு அவசர நிலையை பிரகடனம் செய்ய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். (7)

# நாடாளுமன்றத்தில் உலக சாதனை அரசு மீது விமல் வீரவன்ச விமர்சனம்

(கொழும்பு)

**அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட பிரேரணையொன்று அந்த அரசாங்கத்தினாலேயே நாடாளுமன்றத்தில் தோல்வியடையச் செய்யப்பட்ட உலகசாதனை இலங்கையில் நிலை நாட்டப்பட்டதாக கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**



குருநாகல் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட சட்ட மூலம் ஒன்று பிரதமரினால் தோல்வியடையச் செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்கு ஆதரவில்லாத பிரதமரை ஏன் வைத்திருக்கின்றார்.

இவ்வாறு தன்னுடைய தீர்மானத்தை நிறைவேற்றாத அரசாங்கத்திலுள்ள பிரதமருக்கும் அமைச்சர்களுக்கும் எதிராக தன்னுடைய தூசிபடிந்துள்ள வாளைப் பயன்படுத்துமாறு ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்கின்றேன்.

தோல்வியடையச் செய்ய வேண்டுமாயின் அந்த எல்லை நிர்ணய அறிக்கையை ஏன் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வர வேண்டும். அந்தச் சட்ட மூலத்தைக் கொண்டு வந்த அமைச்சரே அதற்கு எதிராக வாக்களித்துள்ளார்.

இப்படியான ஒரு அரசாங்கத்தை நாட்டில் இனியும் நிலைக்க விட முடியாது. இதன் காலம் முடியும் வரை பொறுத்திருக்க முடியாது. ஜனாதிபதி உரிய தீர்மானத்தை எடுக்க வேண்டும் என விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாடாளுமன்றில் நடந்த வாக்கெடுப்பை வீட்டிலிருந்து அவதானித்த மகிந்த

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது வீட்டில் இருந்தவாறு பார்த்துள்ளார்.

எல்லை நிர்ணயக் குழு அறிக்கை தொடர்பான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்றது.



எனினும் மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர் காலமாகிய காரணத்தினால், அவரால் அந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ள முடியவில்லை.

இதன் காரணமாக தனது கையடக்க தொலைபேசி ஊடாக வீட்டில் இருந்தபடி அவர் வாக்கெடுப்பினை பார்த்துள்ளார்.


குறித்த சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்று இணையத்தில் வெளியாகியுள்ளது. (இ-7)

# பிரதமராகும் நோக்குடன்தான் ரணிலுடன் மைத்திரி இணைந்தார்

## திஸ்ஸ அத்தநாயக்க தகவல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மகிந்தவுக்கு எதிரான அணியுடன்இணைந்து கொண்டது ஜனாதிபதியாகும் தீர்மானத்தில் அல்லவெனவும் பிரதமராக வேண்டும் எனும் நோக்கிலாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.



சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


கடந்த 2015 ஆம் ஆண்டு தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகப் போட்டியிடுபவர்கள் குறித்து பல பெயர்கள் முன்மொழியப்பட்டன. கரு ஜெயசூரிய, சோபித தேரர், சிராணி பண்டாரநாயக்க போன்றோர் அதில் உள்ளடங்கியிருந்தனர்.

இருப்பினும், வந்தது மைத்திரிபால சிறிசேன. உண்மையில் அவர் ஜனாதிபதியாகப் போட்டியிட வந்தவர் அல்லர். பிரதமராக வந்தவர். பிரதமராக வந்தவரை ஜனாதிபதியாக மாற்றியது ரணில் விக்கிரமசிங்க. இது தான் உண்மையான சம்பவம்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் ஒருவர் போட்டியிடுவார். இருந்தாலும், எதிர்க்கட்சியில் வருபவர் தான் தீர்மானம் மிக்கது. அங்கிருந்து வருபவர்தான் பொது வேட்பாளராக வருவார்.

இந்த இருதரப்பிலும் போட்டியிடுபவர் யார் என்பதை வைத்து தான் எந்த அணியில் சேர்ந்து கொள்வது என்பது குறித்து தீர்மானம் எடுக்கவுள்ளேன்.

நாட்டுப் பற்றுள்ள, நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமான ஒருவருக்கு நான் ஆதரவு வழங்குவேன் எனவும் ஐ.தே.க.வின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தல் காலத்தில் மகிந்தவுடன் திஸ்ஸ இணைந்து அமைச்சராகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர் சந்திரா டியுடர் ராஜபக்ஷவுக்கு இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் எம்.எச்.டார் சேக் வீரக்கெட்டிய மெதமுலன இல்லத்துக்குச் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினார்.

இறுதி அஞ்சலி செலுத்தியதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

# இன்று ஒரு தகவல்

## எதிர்பாராததை எதிர்பாருங்கள்

நாம் வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருக்கிறோம் என்றால் பொதுவாக நம் எதிர்பார்ப்பு எப்படி இருக்கும்?

பொதுவாக, நல்ல படியான எதிர்பார்ப்புதான் இருக்கும்.

ஆனால் எல்லா நாட்களுமா அப்படி அமைந்து விடுகின்றன?

சில கடிதங்களோ அல்லது ஒரு தந்தியோ நமக்காகக் காத்திருந்து நம்மை மூட் அவுட் ஆக்கிவிடுகின்றன. அல்லது சோகமயமாக்கி விடுகின்றன.

வீட்டில் உடல்நலக் குறைவு; பையனின் ரிப்போர்ட்டில் சுமாரான மதிப்பெண்கள்; கரண்ட்கட்; தண்ணீர் வரவில்லை என்று பல விடயங்கள் நம்மைச் சோதித்து விடுவது உண்டு.

வீட்டிற்கோ அலுவலகத்திற்கோ பிற இடங்களுக்கோ செல்லும் போது வெறும் சாதகமான எதிர்பார்ப்புகளை மட்டும் எண்ணிக் கொண்டிராமல் நல்லதோ கெட்டதோ எதுவாக இருந்தாலும் நாம் அவற்றை சரிவரக் கையாள வேண்டும்; நன்கு எதிர்கொள்ள வேண்டும் என்கிற உணர்வை வெற்றால் நல்லது.

நல்லதே நடக்கும் என்பதெல்லாம் ஓர் ஆரோக்கியமான சிந்தனையாக இருக்கலாம். ஆனால் இது நடைமுறைக்கு சரிப்பட்டு வராத அணுகுமுறை. எதுவும் நடக்கும்; நாம் எதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்பதுதான் யதார்த்தமான அணுகுமுறை. நடக்கின்ற ஒரு விடயம் சரியில்லை. அது பெரிய பிரச்சினையாக ஆகப் போகிறது என்று நமக்கே தெரிய ஆரம்பித்து விட்டால், அதன் மோசமான விளைவு எதுவாக இருக்க முடியுமோ அதுவரைக்கும் சிந்தித்து வைக்கலாம். அப்படி நடந்தால் என்ன செய்வது என்பதைப் பற்றிக்கூட சிந்திக்கலாம்; தவறில்லை.

இப்படிச் சிந்திப்பது அந்தப் பிரச்சினையை நமக்குள் ஒரு பெரிய மனத் தயாரிப்பைக் கொடுத்து வருகிறது. எனவே அதன்பிறகு என்ன நடந்தாலும் நமக்கு அது அதிர்ச்சி தருவதாக இல்லை.


இந்த அணுகுமுறை, நிலைமையை மோசமாக்காமலிருக்க உதவுகிறது என்பதோடு, சமயங்களில் அதை வெற்றி கொள்ளவோ சமாளிக்கவோ கூடக் கற்றுத் தந்து விடுகிறது.

மாறாக, "இப்படி நடக்கும்னு நான் கனவுல கூட நினைக்கலங்க" என்று சொல்லிக்கொண்டிருந்தால்' எதிரியையும் சூழ்நிலைகளையும் பலப்படுத்தி விட்டு, நாம் மட்டும் நிராயுத பாணிகளாக நிற்கிறோம் என்றல்லவா பொருள்!

நாம் சூழ்நிலையின் கைதிகள். நம் திட்டப்படி நடப்பவை சரிபாதியே, மீதமுள்ள பாதி விடயங்களைப் பொறுத்த வரை உலக நாடகத்தில் நாமும் ஒரு சிறு கதாபாத்திரம் போலத்தான். கொடுக்கிற வேடத்தைப் போட்டுக் கொண்டு தந்த வசனத்தை ஒப்பித்துவிட்டுப் போக வேண்டிய நிலைமை.

**லேனா தமிழ்வாணன்**

# ஜனாதிபதிக்கு எதிராக செயற்படுகிறது ஐ.தே.க.



## டிலான் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சி பல சதித்திட்டங்களை தீட்டி வருவதாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டிலான் பெரேரா பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளார்.**

நேற்று முன்தினம் சனிக்கிழமை பதுளையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த வகையில் அதன் ஒரு அங்கமாகவே கடந்த நாடாளுமன்றத்தில் மாகாண சபை மீள் எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பான வாக்கெடுப்பு தோல்வியடைய செய்யப்பட்டமை ஆகுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு ஜனாதிபதிக்கு எதிராக தொடர்ந்து செயற்பட்டு வருகின்றமையினால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து நீக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மாகாண எல்லை நிர்ணயத்தில் சிறுபான்மை இனங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசனம், நீர்விநியோக அமைச்சர் ரவூப் ஹக்கீம் கடந்த நாடாளுமன்ற அமர்வில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மாகாண சபை மீள் எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பான வாக்கெடுப்பு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன் போது அவ் வாக்கெடுப்புக்கு ஆதரவாக வாக்குகள் ஏதும் பதிவாகாத நிலையில் அறிக்கைக்கு எதிராக 139 வாக்குகள் பதிவாகின.

இதனால் குறித்த அறிக்கை தோற்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (படங்கள்:-சுபேசன்)

# ஐரோ.ஒன்றியம், அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர்கள் நியமனம்



(கொழும்பு)

பிரஸ்ஸல்ஸில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான புதிய தூதுவராக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இராஜாங்க செயலாளர் கிரேஸ் ஆசிர்வாதம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொருளாதார அலுவல்கள் மற்றும் வர்த்தகப் பிரிவு, அரசியல் அலுவல்கள் (மேற்கு) மற்றும் மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க பிரிவுக்கான மேலதிக செயலாளராகவும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் அநேக சிரேஷ்ட பதவிகளையும் இவர் வகித்துள்ளார்.

இதற்கு முன்னதாக இவர் நெதர்லாந்து மற்றும் நேபாளத்திற்கான தூதுவராகச் சேவையாற்றியுள்ளார்.

மேலும் ஜேர்மனி மற்றும் பாகிஸ்தானிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலும் பதவி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான தூதுவராக பணியாற்றிய ரொட்னி பெரேரா அமெரிக்காவிற்கான இலங்கை தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நியூயோர்க்கிலுள்ள கொலம்பிய பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் தொடர்பான பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ள ரொட்னி பெரேரா, இத்தாலி, நோர்வே, சைப்பிரஸ், மோல்டா, அல்பேனியா ஆகிய நாடுகளில் தூதுவராக பணியாற்றியுள்ளார்.

அத்துடன் நியூயோர்க் மற்றும் ஜெனிவா ஆகிய நகரங்களிலுள்ள ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்திர வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகத்திலும் கென்யாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் தூதரக அதிகாரியாகவும் பெரேரா பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தமிழினத்தை அழிக்கும் மகாவலி எல் வலய திட்டம்

## முல்லையில் திரளுங்கள்-ரவிகரன் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் மகாவலி எல் வலயத்திட்டமானது தமிழினத்தை கட்டமைத்து அழிக்கவே செயற்படுத்தப்படுகின்றது என வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.



தமிழர் நிலத்தில் தமிழர் இருப்பை கேள்விக்குள்ளாக்கும் மகாவலி எல் வலயத் திட்டத்தை ஒன்றுசேர்ந்து எதிர்ப்பதற்கு முல்லைத்தீவில் நாளை 28ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு அனைவரும் ஒன்று திரளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஓர் இனத்திலுள்ள மக்களை அழிப்பது மட்டும் இன அழிப்பன்று. அம்மக்களை இனமாகக்காட்டும் கூறுகளை அழிப்பதும் இன அழிப்பே. தமிழர்களின் பூர்வீக நிலங்களை அபகரித்து சிங்களவர்களை குடியேற்றி தமிழர் பெரும்பான்மையை மெல்ல மெல்ல மகாவலி எல் வலயத்திட்டம் குலைத்து வருகின்றது.

தமிழர்கள் பெரும்பான்மையாகவுள்ள இடத்தில் தமிழர்களின் அடையாளங்களை அழித்து தமிழர்களை சிறுபான்மையாக்க முனைக்கும் இந்த மகாவலி எல் வலயத்திட்டம் தமிழர் மீது நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் வடிவமாகும். மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையானது 1970 மாசி 28ஆம் திகதி உருவாக்கப்பட்டது.

மகாவலி எல் வலயம் 1988 சித்திரை 15ஆம்திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலமும் 2007 பங்குனி 09ஆம் திகதி எல்லைகளை விஸ்தரித்து இரண்டாவது வர்த்தமானி அறிவித்தல் மூலமும் வெளியிடப்பட்டது.

இதனுடையஎல்லைகளை விரிவாக்கம் செய்து முல்லைத்தீவு மாவட்டச்செயலகம் மட்டுமல்லாமல் மாங்குளம் வரை வியாபித்துள்ளது. 1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இராணுவத்தினரால் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து, நாயாற்றுக்குத் தெற்கே எமது எல்லைக்கிராமங்களான கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத் தொடுவாய் தெற்கு, கொக்குத் தொடுவாய் மத்தி,கொக்குத் தொடுவாய் வடக்கு ஆகிய ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலும் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

போர்க்காலத்தின் பின்பு 2011 காலப்பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட தமிழ் மக்கள் தாம் இடம்பெயரும் வரை தமது வாழ்வாதாரத்துக்காக பயன்படுத்தி வந்த நிலங்கள் சிங்கள மக்களினால் விவசாயம் செய்யப்படுவதை கண்டு அதிர்ச்சியில் இருந்தார்கள்.

தமிழர்கள் தலைமுறை தலைமுறையாக பாவித்து வந்த நிலங்களை பறிகொடுத்த நிலையில் தமது மனக் குமுறல்களை பலருக்கும்தெரிவித்தார்கள். 1950,1960, 1970 காலப்பகுதிகளில் இதே காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் தமிழர்களின் கைகளில் இன்றும் உள்ளன.

ஆனாலும் அப்போதைய அரசுத்தலைவர் ஒப்பமிட்ட காணி அனுமதிப்பத்திரங்கள் அவரின் பிரதிநிதியால் மயில்குளம் (இப்போதைய பெயர் (மொனரவெள) பகுதியில் வைத்து சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டது.

இது தவிர சிங்களவர்கள் இல்லாத முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலிஓயா என ஒரு சிங்கள பிரதேச செயலர் பிரிவு உருவாக்கப்பட்டு 3ஆயிரத்து 336 குடும்பங்கள் 11 ஆயிரத்து 189 மக்களை கொண்டதாக நிர்வகிக்கப்படுகின்றது.

தமிழ் மக்களின் பாரம்பரிய பல நீர்ப்பாசனக்குளங்களான, இராமன் குளம், கொட்டோடைக்குளம், ஓயாமடுக்குளம், வெள்ளாங்குளம் ஆகிய குளங்களை உள்ளடக்கி பாரிய நீர்ப்பாசனத் திட்டமாக கிவுல் ஓயாத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

6000 ஏக்கர் நிலங்களுக்கு நீர்பாய்ச்சக்கூடிய இந்த நீர்ப்பாசனத்தின் மூலம் 3000 சிங்களக் குடும்பங்களுக்கு தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

எனவே மகாவலி அபிவிருத்தி அதிகார சபையானது ஒரு கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கையையே மேற்கொள்கின்றது. இதில் மக்களாகிய நாம் விழிப்படையாவிட்டால் எதிர்காலத்தில் நாம் எமது இடங்கள் கேள்விக்குறியே? அனைவரும் ஒன்று திரளுங்கள், பல ஆயிரக்கணக்கில் ஒன்று திரளுங்கள், முல்லைத்தீவின் குரலை எமது நில மீட்புக்கான குரலை அரசுக்கும், உலகுக்கும் எடுத்துக்காட்டுவோம் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (இ-281)

# ரந்தோலி பெரஹராவில் ஜனாதிபதி பங்கேற்பு



(கொழும்பு)

கண்டி எசலப் பெரஹராவின் ரந்தோலி பெரஹரா நிகழ்வு நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இந்த பெரஹராவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பாரியாருடன் கலந்து கொண்டு பார்வையிட்டார். (இ-7)

# கட்டணங்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க நடவடிக்கை

(கொழும்பு)

சத்திரசிகிச்சை இராசாயண பரிசோதனை மற்றும் மகப்பேற்று என்பனவற்றுக்காக தனியார் வைத்தியசாலைகளில் அறவிடப்படும் கட்டணங்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பான ஒழுங்கு விதிகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது.

இதற்கமைய, குறித்த விடயம் தொடர்பான அறிக்கை தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவை பணிப்பாளரான விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்கீழ், தனியார் வைத்தியசாலையில் அறவிடப்படும் 53 கட்டணங்களை வரையறைக் குட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

புதிய ஒழுங்கு விதிகளுக்கு அமைய, அதிகபட்ச விலை நிர்ணயிக்கப்படவுள்ளபோதும், வைத்தியசாலைகளின் நிலைமைகளுக்கு அமைய, சம்பந்தப்பட்ட தரப்பினரால் அதற்கு அதிகமான கட்டணத்தை அறிவிட முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மைத்திரி - மகிந்த வெளிநாடு பயணம்



(கொழும்பு)

வங்காள விரிகுடா பிராந்திய நாடுகளின் தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புகளைக் நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள பிம்ஸ்டெக் அமைப்பின் நான்காவது மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளவுள்ளார்.

நேபாளம் தலைநகர் காத்மண்டுவில் நடைபெறும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி நாளை செவ்வாய்க்கிழமை நேபாளம் புறப்பட்டுச் செல்லவுள்ளார்.

இதன்போது நேபாள ஜனாதிபதி வித்தியாதேவ் பண்டாரி, பிரதமர் கே.பி. ஒலி ஆகியோரை ஜனாதிபதி சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன் கௌதம புத்த பகவான் அவதரித்தலும் லும்பினி நகருக்கும் ஜனாதிபதி விஜயம் செய்ய உள்ளார்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்று உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அடுத்த மாதம் ஆரம்பத்தில் இந்தியாவுக்குச் செல்வுள்ளார்.

பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமியின் அழைப்பை ஏற்று டில்லியில் நடக்கும் ஹிந்துதுவா மாநாடு ஒன்றில் மகிந்த ராஜபக்ஷ கலந்துகொள்வுள்ளார். இந்த மாநாடு அடுத்த மாதம் 12 ஆம் திகதி டில்லியில் நடைபெறவுள்ளது. (இ-7)

# 1818 இலங்கையர்களுக்கு சவுதியில் பொதுமன்னிப்பு

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராச்சியத்தில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த இலங்கைப் பிரஜைகள் 1818 பேர் பொது மன்னிப்பின் அடிப்படையில் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளனர். சவுதியில் தங்கிருந்த இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு காலம் வழங்கப்பட்டது. இம்மாதம் முதலாம் திகதி முதல் 3 மாத காலத்திற்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே, அந்நாட்டில் த்ங்கியுள்ள இலங்கைப் பிரஜைகள் நாடு திரும்புவதற்குத் தயாராகியுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. விசா இன்றி நாட்டில் தங்கியுள்ள இலங்கை பிரஜைகள், அபுதாபியிலுள்ள தூதுவராலயத்தில் அல்லது துபாயிலுள்ள தூதரகத்திற்குச் சென்று தற்காலிக கடவுச் சீட்டை பெற்றுக் கொள்ள முடியும் என பணியகம் தெரிவித்துள்ளது.

சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் இலங்கைப் பிரஜைகள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் பணி புரிந்து வருவதோடு, வருடாந்தம் சுமார் 30,000 பேர் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு பணிக்காக செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆஸியில் நாடு கடத்தலை நிறுத்தக்கோரி ஈழ அகதிகள் குடும்பம் மேன்முறையீடு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிலிருந்து நாடுகடத்தல் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள இலங்கை அகதிகள் குடும்பம் ஒன்று அங்கு தொடர்ந்தும் வசிப்பதற்கான தமது போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறது.

நடேசலிங்கம் பிரியா தம்பதியினர் கடந்த 2012 ஆம், 2013 ஆம் ஆண்டுகளில் படகு மூலம் தனித்தனியாக அவுஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்தனர்.

இந்த நிலையில், தங்குமிட விசாவை புதுப்பிக்காதமை காரணமாக அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட அவர்கள், அந்நாட்டு குடிவரவு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கபட்டுள்ளனர்.

நடேசலிங்கம் மற்றும் பிரியா தம்பதியினரும், அவர்களின் இரண்டு பெண் குழந்தைகளுமே இந்த நாடு கடத்தல் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த நிலையில், தம்மை அவுஸ்திரேலியாவில் வாழ அனுமதிக்குமாறு கோரி அவர்கள் மீண்டும் மேன்முறையீட்டு மனுத் தாக்கல் செய்யவுள்ளதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

குறித்த மேன்முறையீட்டின் மூலம், தாம் மீண்டும் குயின்ஸ்லாந்துக்கு திரும்புவதற்கு வாய்ப்பு ஏற்படும் என அவர்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கை-தென்கொரியா இடையே வர்த்தக மேம்பாட்டு விசேட திட்டம்

(சியோல்)

இலங்கைக்கும் தென்கொரியாவுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக மேம்பாட்டுக்கான வேலைத் திட்டம் நடைமுறைப்படுததப்பட்டுள்ளது.

கொரிய முதலீட்டாளர்களின் சம்மேளனம் இந்தத் திட்டங்களில் ஒன்றிணைந்துள்ளது. வர்த்தக மேம்பாட்டுத்தரப் பினரைக் கொண்ட குழு ஒன்றும் இதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் ஆர்வம்கொண்டுள்ள கொரிய நாட்டு முதலீட்டாளர்களின் வலைப்பின்னல் ஒன்றையும் ஏற்படுத்துவது இதன் மற்றுமொரு நோக்கமாகும். சியோல் நகரிலுள்ள இலங்கை தூதரக அலுவலகம் இதற்கான திட்டங்களை முன்னெடுத்துள்ளது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 4 விதி எண் 8

இராகு சனி ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் தன்னம்பிக்கை மிக்கவர்கள். பூரணமான சுதந்திரப் பிரியர்கள். உடல்பலமும், மனபலமும் ஒருங்கே அமையப் பெற்றவர்கள். பேச்சு சுவையுடையதாக இருக்கும். யாரிடமும் அனுசரித்துப் போகக் கூடியவர்கள். அடிமைத் தனத்தை எதிர்த்துப் போராடக் கூடியவர்கள். எப்போதும் சுதந்திரமாகவே வாழ வேண்டும் என்று விரும்புவார்கள். எல்லா இடத்தையும் சுற்றிப் பார்க்க விரும்புவார்கள். பல அனுபவங்களைப் பெற்றவர்கள். நண்பூர்கள் இவர்களை எல்லா விடயமும் தெரிந்தவர்கள் என்று மதிப்பார்கள். தான் கண்டதை மற்றவர்கள் பிரமிக்கும் வண்ணம் எடுத்துரைப்பார்கள்.

இவர்கள் கம்பீரமான தோற்றத்துடனும் குறுகுறுப்பான முகத்துடனும் காட்சியளிப்பார்கள். முன் பற்கள் இரண்டும் பெரிதாக இருக்கும். ஒழுங்கற்ற பல்வரிசை இருக்கும். மனதில் தோன்றும் கருத்துக்களைத் துடுக்காக வெளியிடுவார்கள். மற்றவர்கள் தன்னைப் பற்றி அபிப்பிராயப் பேதப்படுவார்கள் என்றெல்லாம் கவலைப்பட மாட்டார்கள். சிலர் அனுபவத்தால் மற்றவர்களை அனுசரித்துப் போவார்கள். நிறைய நண்பர்கள் அமைவார்கள். விவாதத் திறன் உடையவர்கள். புரட்சிகரமான கருத்துக்களை உடையவர்கள். வாகனப் பிரியர்கள். பிராணிகள், பெரியவர்கள், குழந்தைகள் மீது பிரியமுடையவர்கள். அரசியல் அறிந்தவர்கள். வன்முறையை எதிர்த்துக் குரல் கொடுப்பார்கள். விஷ சக்தியை முறியடிக்கும் திறன் படைத்தவர்கள்.

மந்திரம், வசியம் போன்ற கலைகள் எளிதில் வசியமாகும். முன்னேற வேண்டுமென்ற ஆர்வம் இருக்கும். ஆரம்பம் தோல்வியடைந்தாலும், விடாமுயற்சியால் வெற்றி பெற்று விடுவார்கள். ஒரு சிலரையே நண்பர்களாக்கிக் கொள்வார்கள். எளிதில் இவர்கள் தவறுகள் செய்ய மாட்டார்கள். தவிர்க்க முடியாத சந்தர்ப்ப சூழ்நிலையால் சில தவறுகளைச் செய்வார்கள். தான் செய்த தவறுக்காகத் தனிமையில் வருத்தப்படுவார்கள். மற்றவர்கள் தவறை கடுமையாக விமர்சிப்பார்கள். எந்தக் காரியத்தையும் மிகவும் பொறுப்புடன் செய்யக் கூடியவர்கள். தன்னிடம் ஒப்படைத்த காரியத்தைக் கண்ணும் கருத்துமாக இருந்து நிறைவேற்றி விடுவார்கள். துன்பத்தில் இருப்பவர்களுக்கு வலியச் சென்று உதவிகள் செய்வார்கள். பெரியவர்கள் வார்த்தைக்கு மதிப்புக் கொடுப்பார்கள். எதையும் சீர்தூக்கிப் பார்ப்பார்கள்.

வாக்குப்பலம் வாய்ந்தவர்கள். எதிரியை எளிதில்




வீழ்த்துவார்கள். வாதாடும் திறனிருக்கும். பண விடயத்தில் கண்டிப்பிருக்கும். தோல்விகளைக் கண்டு பயப்பட மாட்டார்கள். நேர்மை, புத்திசாலித்தனம், உதவிகள் என்று கேட்டு வந்தவருக்கு இல்லை என்று சொல்லாமல் தன்னால் ஆன உதவிகளைச் செய்வார்கள். மன தைரியமும், காரிய சித்தியும், தனித்தன்மையும் இருக்கும். புதுமையைச் செய்வார்கள்.

எல்லோரிடமும் ஒத்துப் போவார்கள். எதிலும் முதலிடத்தைப் பிடிப்பார்கள். இவர்களை மறைமுகமாகப் பலபேர் திட்டுவார்கள். தேசபக்தியிருக்கும். இரண்டு நபர்களை இணைக்கும் பாலமாகச் செயற்படுவார்கள். மனதில் போராட்ட எண்ணங்கள் நெருப்புப் போன்று தோன்றும். வெற்றிக்குப் பின்னர் தைரியம் கூடும். வெளிதேசத் தொடர்பு மூலம் அதிகாரமிக்க பதவிகள் கிடைக்கும். கடினமான வேலைகளைச் சுலபமாக முடிப்பார்கள். துப்பறியும் சக்தியும் உடையவர்கள். ஆராய்ச்சி மனப்பான்மை உடையவர்கள். சிலர் இளமையில் காதல் வயப்பட்டு துண்டப்படுவார்கள்.

எல்லோரும் இவரை விரும்பும் அள வுக்கு நடந்து கொள்வார் கள். வாதங்களையும் பிடிவாத குணத்தையும் குறைத்துக் கொள்ள வேண் டும். அதிர்ஷ்டக் குறிப்பு களை முறையாகக் கையா ண்டு வந்தால் அதிர்ஷர்ட மான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
1, 10, 19, 28, 5, 14, 23, 6, 15, 24.

துரதிர்ஷ்ட திகதிகள்
8, 17, 26.

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர் நீலம், மஞ்சள், பொன்னிறம்.

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, சிவப்பு, இருண்ட நிறங்கள்.

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
கோமேதகம், நீலக்கல், அக்கோமரின், இந்திர நீலக்கல், ஒபல்


(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

28




மன்னன் தாதுசேனன்

> “இவர்கள் எல்லோரும் ஒன்றாகவோ அல்லது ஒருவர் பின் ஒருவராகவோ அநுராதபுரத்திற்கு வந்து இடைநடுவில் ஆட்சியைக் கைப் பற்றியிருக்க முடியும்? எவ்வாறு வன்னிச் சிற்றரசுகள் அந்திய ஆட்சியாளரை எதிர்க்காது அனுசரணையாக இருந்திருக்க முடியும்? எவ்வாறு இவர்களால் பௌத்த மதத்தை ஆதரித்து,அரசியல் நடத்தியிருக்க முடியும்? என்கின்ற வினா க்கள் நிச்சயமாக எழும்.”

## ஓர் இருண்ட வரலாற்றுக்காலம் (கி.மு. 300-கி.பி. 900)

இதிலுள்ள முக்கியமான விடயம் என்னவெனில், பாளி, சிங்கள நூல்கள் மட்டுமல்ல மத்திய காலத்தில் அல்லது பதினெட்டாம், பத்தென்பதாம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட தமிழர் வரலாற்று நிகழ்வுகளைக் கூறும் தமிழ் நூலாகிய வையாபாடல், கைலாய மாலை, யாழ்ப்பாண வைபவ மாலை, அதனைத் தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டின் முதற் பாகத்தில் எழுதப்பட்ட யாழ்ப் பாணச் சரித்திரம் போன்ற நூல்கள் யாவுமே பாளி, சிங்கள நூல்களின் வரலாற்று மரபையே இவ்விடயம் தொடர்பாகப் பின்பற்றுவதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறான நூல்கள் எல்லாமே நவீன விஞ்ஞான ரீதியான ஆய்வுகளும் ஆராய்ச்சிகளும் கண்டுபிடிப்புக்களும் நவீன சிந்தனைகளும் சித்தாந்தங்களும் வெளிவரும் முன்னர் எழுதப்பட்ட காரணத்தினால் முற்கூறப்பட்ட எல்லா வரலாற்று ஆசிரியர்களுமே ஒரே பாரம்பரிய வரலாற்று மரபை பின்பற்றுவதைத் தவிர வேறு வகையில் அவர்களால் சிந்திக்க முடியவில்லை என்று எண்ணுவதில் தவறில்லை.

இவ்வாறு ஒரு பின்னணியில் இருந்து நோக்கும்போது, பண்டு மன்னன் என்பவன் இலங்கைத் தமிழ் மன்னன் என்று ஒரு முடிவுக்கு வரமுடிகிறது. மேலும், பண்டு மன்னனின் அரச பரம்பரையினர் தொடர்ந்து கால் நூற்றாண்டு காலமாக சுமார் கி.பி. 429 தொடக்கம் கி.பி 455 வரை அநுராதபுரத்தை ஆண்டிருக்கின்றார்கள். குறிப்பாக, பண்டு மன்னன் ஆட்சிக்குப் பிறகு பரிதேவ, இளம் பாரிந்தன், திருதரன், தாடியன் என்போர் ஆட்சி செய்துள்ளனர். இத்தமிழ் மன்னர்களுக்கு பக்கபலமாக அநுராதபுரத்திலும் வன்னிப் பிரதேசங்களிலும் இருந்த சிற்றரசர்களினதும் தமிழ் மக்களினதும் ஆதரவு கிடைத்திருக்கின்றது என்பதை வரலாற்றுச் செய்திகளினூடாக அறிய முடிகிறது.

மேலும் இக் காலத்துக்குரிய அநேக தமிழ் மன்னர், பௌத்தத்தை ஆதரிப்போராகக் காணப்படுகின்றனர். சிலர் பௌத்தர்களாகவும் விளங்கியுள்ளனர். சிங்கள மொழியையும் தமது கல்வெட்டுகளில் பயன்படுத்தியும் உள்ளனர். பௌத்தமதம், இந்தியாவிலும் இலங்கையிலுள்ள வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலும் இக்காலத்தில் முக்கியத்துவம் அடைந்திருந்த நிலையில் இத் தமிழ் மன்னர்கள் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்களாகவும் ஆதரித்தவர்களாகவும் இருந்ததில் வியப்பில்லை.

அறிவியல் பூர்வமாகச் சிந்தித்தால் எவ்வாறு இத் தமிழ் மன்னர்கள் இந்தியாவிலிருந்து வந்து, தொடர்ச்சியாகப் பல ஆண்டு காலம் அநுராதபுரத்தில் மக்கள் ஆதரவு இன்றி ஆட்சி செய்திருக்க முடியும்? மேலும், எவ்வாறு இவர்கள் எல்லோரும் ஒன்றாகவோ அல்லது ஒருவர் பின் ஒருவராகவோ அநுராதபுரத்திற்கு வந்து இடைநடுவில் ஆட்சியைக் கைப் பற்றியிருக்க முடியும்? எவ்வாறு வன்னிச் சிற்றரசுகள் அந்திய ஆட்சியாளரை எதிர்க்காது அனுசரணையாக இருந்திருக்க முடியும்? எவ்வாறு இவர்களால் பௌத்த மதத்தை ஆதரித்து, அரசியல் நடத்தியிருக்க முடியும்? என்கின்ற வினாக்கள் நிச்சயமாக எழும்.

இவ்வாறு இருந்த தமிழ் மன்னர், பாளி நூல்கள் கூறும் சிங்கள மன்னர்களைப்போல அக் காலப்பகுதியில் வாழ்ந்த இலங்கைத் தமிழ் அரசவம்சத்தவர் என்ற முடிவுக்கு வருவதைத் தவிர வேறு காரணங்களை ஏற்க முடியாதுள்ளது. ஆக, பண்டு என்ற பெயரை மட்டும் வைத்துக் கொண்டு அவர்கள் பாண்டிய அரச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்ற முடிவுக்குப் பாளி நூலாசிரியர்கள் வருவது எந்த வகையிலும் வரலாற்று யதார்த்தமாகாது. மேலும் ஓர் ஆரம்பகால வரலாற்றுப் பல்லின சமூகத்தில் இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகள் அற்ற ஒரு சூழ்நிலையில் வலுவுள்ளவர்களும் செல்வாக்குள்ளவர்களும் அரசை ஆளுகின்ற நிலையினையே இலங்கையின் ஆரம்பகால வரலாற்று ஆதாரங்களும் மூலம் அறிய முடிகிறது. அங்கே மேற்கூறப்பட்ட வேறுபாடுகளுக்கு இடம் இருந்ததாகத் தெரிய எதுவித வரலாற்று ஆதாரங்களும் இல்லை.

அத்தோடு, இலங்கையின் ஆதிகால மக்கள் தென்னிந்திய திராவிட மக்கள் என்று முதலாவது அத்தியாயத்தில் ஆதாரங்களோடு நிறுவப் பட்டிருக்கின்றது. இந்து சமயம் அல்லது சைவமே அப்பூர்வீக மக்களுடைய சமயமாக இருந்திருக்கின்றது என்பதும் அதே அத்தியாயத்தில் ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மகாவம்ச நூலினை ஒரு வரலாற்று நூலாக இலங்கையில் உள்ள சிங்கள மக்கள் பெரும்பாலும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், அந்நூல் பௌத்த மதம் பற்றிய செய்திகளைக் கூறும் ஒரு நூலாகவே அறிவியல் பூர்வமாகச் சிந்திக்கும் வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பௌத்தமதம் பற்றிக் கூறும் போது பல அரசியல் நிகழ்வுகளையும் அந்நூல் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது.

அந் நூலின்படி, அல்லது அதற்கு முந்திய நூலாகிய தீபவம்ச நூலின் படி, சிங்கள மக்கள் வட இந்தியாவிலிருந்து வந்த விஜயமன்னன் வழித் தோன்றல்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது. அவ்வாறாயின் ஏன் பாளி, சிங்கள நூலாசிரியர்கள் விஜயன்வழி வந்த சிங்கள மக்களையும் சிங்கள அரசர்களையும் ஆட்சியாளர்களையும் ஓர் அந்நிய தேசத்தவர்கள் என்றும் இலங்கையின் பூர்வீகத் திராவிட மக்களின் நாட்டை ஆக்கிரமித்த அந்நிய படையெடுப்பாளர் என்றும் கருதவில்லை என்ற கேள்வியை, விஞ்ஞான ரீதியாக வரலாற்றைக் கற்கும் மாணவர்கள் கேட்கலாம்.

மேலும், கி.பி.455 இல் ஆட்சிக்கு வந்த தாதுசேனன் ஆட்சி கி.பி.473 வரை நீடித்தது. தாதுசேனன் அவனது மகன் காசியப்பன் என்பவனால் கொல்லப்பட்டான். காசியப்ப மன்னன் தொடர்ந்து 18 ஆண்டுகள் ஆட்சி செய்தான். காசியப்ப மன்னனின் தம்பி முகலன் என்பவன் தமையனுக்குப் பயந்து தென்னிந்தியாவுக்கு ஓடி அங்கு பதினெட்டு ஆண்டுகள் தங்கியிருந்து, படைதிரட்டி வந்து காசியப்ப மன்னனை வென்று ஆட்சியைக் கைப்பற்றினான். இந் நிகழ்வுகள் எதனைக் காட்டுகின்றன? இலங்கைச் சிங்கள மன்னர் அரசைக் கைப்பற்றத் தென்னிந்திய அரசுகளின் உதவியை நாடுவதும், அங்கிருந்து படை உதவி பெற்று இலங்கை வந்து போர் புரிந்து அரசைக் கைப்பற்றுவதும் கி.பி. 5 ஆம் நூற்றாண்டுகளின் பின் முக்கியத்துவம் பெறுகின்றது.

மேலும், கி.பி.300 இற்கும் கி.பி. 600 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதி அநுராதபுர அரசியல் வரலாற்றில் பல குளறுபடிகளும் குழப்பங்களும் நிறைந்த காலப் பகுதியாக இடம்பெற்றமையே அதற்குக் காரணமாகும். மேலும், அநுராதபுர அரச வாரிசுகள் தென்னிந்தியாவிலிருந்து படை திரட்டி வந்து அநுராதபுர அரசுரிமை பெறுவது கி.பி.ஏழாம் நூற்றாண்டிலிருந்து உச்சக் கட்டத்தை அடைந்திருக்கின்றன.

உதாரணமாக கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஆட்சியைக் கைப்பற்ற விரும்பிய சிங்களத் தலைவர்கள் சுமார் எட்டுத் தடவைகள் தென்னிந்தியாவிலிருந்து படை திரட்டி வந்து அநுராதபுர அரசர்களுடன் போர் புரிந்தமையை வரலாற்று ஆதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. கி.பி.முதலாம் நூற்றாண்டுகளிலிருந்தே இவ்வாறான ஒரு நிலைமை சிறிது சிறிதாக ஆரம்பித்து, கி.பி. ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளில் மிக உச்சக் கட்டத்திற்குச் செல்வதைக் காண முடிகிறது.

இதன் விளைவாக இக்காலகட்டத்தில் அநுராதபுர இராச்சியத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளில் ஒன்று தமிழ் நாட்டிலிருந்து சிங்கள மன்னர்களால் வருவிக்கப்பட்ட படைகளின் எண்ணிக்கை காலத்துக் காலம் அதிகரித்து, அவர்கள் பலமுள்ளவர்களாகவும் அதிக செல்வாக்குப் பெற்றவர்களாகவும் திகழ்ந்தனர் என்பதாகும்.

(தொடரும்)

## தென்னங்கன்றுகள் வழங்கல்



(கரணவாய்)


வடமராட்சி பொலிகை மக்கள் முன்னேற்றக் கழகத்தினரால் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தென்னங் கன்றுகள் நேற்று வழங்கப்பட்டன. (இ-60)

# விசேட நீதிமன்றுக்கு அரசியல் முகத்திரை

## மைத்திரியிடம் மகிந்த சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**பாரிய நிதிமோசடி தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க அமைக்கப்பட்டுள்ள விசேட நீதிமன்றத்திற்கு அரசியல் முகத்திரை உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.**



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் நேரில் சந்தித்து உரையாடினார்.

மகிந்த ராஜபக்ஷவின் தம்பியான சந்திர ராஜபக்ஷவுக்கு மைத்திரி இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக சென்ற போதே இந்த சந்திப்பு இடம்பெற்றது.

மெதமுலனையிலுள்ள மகிந்தவின் வீட்டிற்கு நேற்று முன்தினம் காலை சென்ற ஜனாதிபதி, மைத்திரி, மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின் போதே புதிதாக ஆரம்பிக்கப்பட்ட விசேட நீதிமன்றம், அரசியல் முகத்திரையைக் கொண்டுள்ளதாகக் கருத்துக்கள் உள்ளதாக மகிந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

தங்கள் கைகள் கட்டப்பட்டுள்ளதாக அதன் தலைமை நீதிபதி கூறிய கருத்தினால் இந்த விடயம் மேலும் உறுதியாகியுள்ளதாக மகிந்த தெரிவித்தார். இது தொடர்பில் தான் ஆராய்ந்து பார்ப்பதாக ஜனாதிபதி மைத்திரி தெரிவித்தார்.

இதேவேளை சமகால மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் நேற்று முன்தினம் காலை உணவும் பரிமாறிக் கொண்டதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (இ-7)

## பொலிஸ் நிலையத்தில் கைகலப்பு மட்டக்களப்பில் எட்டுப்பேர் கைது!

(கரடியனாறு)

மட்டக்களப்பு-கரடியனாறு பொலிஸ் நிலையம் மற்றும் இலுப்படிச்சேனை கிராம உத்தியோகத்தர் அலுவலகம் ஆகிய இடங்களில் கைகலப்பில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குடும்பத்தகராறு ஒன்றின் காரணமாக குடும்ப உறவினர்கள் முதலில் இலுப்படிச்சேனை கிராம உத்தியோகத்தரிடம் சென்றுள்ளனர்.

முறைப்பாடு செய்யச்சென்றவர்கள் முன்னதாக கிராம உத்தியோகத்தரின் முன்னிலையில் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கைகலப்பில் ஈடுபட்டவர்களை சமரசம் செய்து கொள்ள முடியாமற்போன கிராம உத்தியோகத்தர் சம்பந்தப்பட்ட நபர்களை பொலிஸ் நிலையம் செல்லுமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன்படி கரடியனாறு பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற இரு சாராரும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்து கொண்டிருக்கும்போது மீண்டும் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் இது தொடர்பில் 3 பெண்களும் 5 ஆண்களும் என 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டமும் உறுப்பினர்கள் தெரிவும்

(குருமன்காடு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டமும் உறுப்பினர்கள் தெரிவும் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் ஹொறவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் வடக்கு மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தலைவராக கே.காதர் மஸ்தான், உப தலைவர்களாக நியூட்டன் சில்வா, டி.யே.பெனடிக், வெள்ளைச்சாமி மகேந்திரன், கனகராஜ், எஸ்.ஏ. தாஜீன் செயலாளராக குமாரசாமி மற்றும் உப செயலாளர்களாக லோகேஸ்வரன், ராகினி, விமலசிறி, சரத் வீரவர்த்தன, நிஸார்தீன், சுரேஸ், பொருளாளராக குமாரி தர்மதாஸ ஆகியோர் வவுனியா தொகுதிக்காக தெரிவு செய்யப்பட்டனர். (2-250)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1494

### சிந்து

மாமியார் மருமகள் சண்டையில் மனைவி பக்கமும் இல்லாமல் அம்மா பக்கமும் இல்லாமல்



பீரோ பக்கத்தில் நிற்பவனே சிறந்த குடும்பஸ்தன்

### தர்மினி

உழைக்கத் தெரிஞ்சவன் வாழ்கிறான்



உழைக்கிற மாதிரி நடிக்கத் தெரிஞ்சவன் இன்னும் நல்லா வாழ்கிறான்

### சுயா

மனைவியிடம் செல்லுபடியாகும் ஆணாதிக்கம்



மகளிடம் செல்லுபடியாவதில்லை...!

### யானு

காந்தியின் சிரிப்பு எல்லாப் பணத்தாள்களிலும் ஒரே மாதிரித்தான் இருக்கிறது...!



நம்முடைய சிரிப்புத்தான் பணத்தைப் பொறுத்து மாறுகிறது

### அபி

பூமியை ஆளப்பிறந்தவன் மனிதன் அல்ல...



பூமியை அழிக்கப் பிறந்தவனே மனிதன்...!

### மீரா

வாழ்க்கையில் தோற்கக்கூடாதுன்னு ஒரு கூட்டம் ஓடுது



வயிற்றில் தொப்பை கூடாதுன்னு இன்னொரு கூட்டம் ஓடுது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தேர்தலை நடத்தக்கோரி அரசிற்கு எதிராக வழக்கு

## கூட்டு எதிரணி எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்தும் பிற்போடுமாயின், அதுதொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள தயார் என கூட்டு எதிர்க்கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.



கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

மாகாண சபைகள் எல்லை நிர்ணயம் தொடர்பான அறிக்கை நாடாளுமன்றத்தில் தோல்வியடைந்ததையடுத்து, அமைச்சர் பைசர் முஸ்தபா பதவி விலகியிருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தலை விருப்பு வாக்கு முறைமையில் நடத்த வேண்டுமாயின் நடைமுறையில் உள்ள சட்டம் மீள திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றப்பட வேண்டும் என மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைசர் முஸ்தபா இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்.ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு அதிகாரம் பிரச்சினை-ஐ.நா.அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் ஜனாதிபதியால் வழங்கப்படும் பொது மன்னிப்பு தொடர்பில் சட்ட ஒழுங்கொன்றை உருவாக்கும் வகையிலான சட்ட மூலம் ஒன்றை தயாரிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மூவர் அடங்கிய விசேட பிரதிநிதிகள் குழு இலங்கை அரசாங்கத்தைக் கோரியுள்ளது.



இந்த கோரிக்கை உட்பட 60 விடயங்களை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என அக்குழு தனது பரிந்துரையை இம்முறை ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழு விடம் ஒப்படைத்துள்ளது.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பு தொடர்பில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது இதுவே முதல் தடவையாகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது இலங்கை ஜனாதிபதியின் அதிகாரத்தில் கை வைக்கும் நடவடிக்கை எனவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அரச சார்பற்ற அமைப்புக்களினால் இவ்விடயம் ஐ.நா. விசேட பிரதிநிதிகள் குழுவிடம் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# 5000 ரூபா போலி நாணயத்தாள்களுடன் ஐவர் கைது

(கொழும்பு)

மொரட்டுவ, லுனாவ பகுதியில் போலி நாணயத்தாள்களை அச்சிட்ட அச்சகம் ஒன்றை சுற்றிவளைத்த பொலிஸார் அங்கிருந்த 5 பேரை கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற இந்த சோதனை நடவடிக்கையின் போது, 5000 ரூபா போலி நாணயத்தாள்கள் 15 பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ஒரு மடிக்கணனி, ஒரு ஸ்கானர், ஒரு அச்சுப்பொறி, ஒரு தட்டச்சுப் பொறி மற்றும் போலி முத்திரைகள் சிலவும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் 33, 37, 39 மற்றும் 41 வயதுடையவர்கள் எனவும் இவர்கள் லுனாவ, கோரலவெல்ல, எகொடஉயன மற்றும் அங்குலான பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மிரிஹான விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பொன்சேகாவின் அறிவிப்பு குறித்து விசாரணை

## மத்தும பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்திருந்த கருத்துத் தொடர்பில் விசாரணை நடத்தப் போவதாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். பொலிஸ் துறை பலமான அமைப்பில் இல்லையெனவும், பொலிஸ் பாதாளஉலகக்குழுவொன்றுரு வாகியுள்ளதாகவும் அமைச்சர் சரத் பொன்சேகா அண்மையில் நாடாளுமன்றில் கருத்துத் தெரிவித்திருந்தார்.



இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மத்தும பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் சரத் பொன்சேகா கூறிய கருத்தில் உண்மை இருக்கின்றதா? என்பது விசாரணையின் பின்னர் தெரியவரும் எனவும் அமைச்சர் மத்தும பண்டார தெரிவித்தார்.

சிங்கள மொழி தனியார் வானொலிச் சேவையொன்றுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# நெடுஞ்சாலைகளால் 24 மணி நேரத்தில் முப்பது மில்லியன் ரூபாய் வருமானம்

(கொழும்பு)

அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணித்த வாகனங்கள் மூலம் நேற்றுக் காலை 6 மணிக்கு முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 30 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று முந்தினம் அதிகாலை 6 மணி முதல் நேற்று அதிகாலை 6 மணி வரை சுமார் 75 ஆயிரம் வாகனங்கள் பயணித்துள்ளதாக நெடுஞ்சாலையின் பராமரிப்பு மற்றும் நடவடிக்கை பிரிவின் பணிப்பாளர் எஸ்.ஓபநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த காலப்பகுதியில் கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் 35 ஆயிரம் வாகனங்கள் பயணித்துள்ளன.

அதிவேக நெடுஞ்சாலைகளில் நேற்று முன்தினம் அதிகளவான வாகனங்கள் பயணித்ததன் காரணமாக, நெடுஞ்சாலைக்கான நுழைவு வீதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## 'ஆலய வழிபாடும் விஞ்ஞானமும்' யாழ்.சின்மயா மிஷனில் அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தாவால் "ஆலய வழிபாடும் விஞ்ஞானமும்" என்ற தலைப்பில் இன்று இரவு 7.15 மணி முதல் 8.00 மணி வரை இல. 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் அருளுரை நடைபெறும். (இ-7)

## விபத்தில் 9 வயது சிறுவன் மரணம்

(கிண்ணியா)

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின், கிண்ணியா பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் சிறுவனொருவன் உயிரிழந்துள்ளான்.

மோட்டார் சைக்கிளொன்று குறித்த சிறுவனை மோதியதாலேயே விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கிண்ணியா 03, மதீனா நகரைச் சேர்ந்த புர்க்கான் றிசாட் என்னும் ஒன்பது வயது சிறுவனே உயிரிழந்துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## 240 பேர் டெங்கால் பாதிப்பு

இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் வரை திருகோணமலை நகர சபை எல்லைக்குள் 240 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

இதேவேளை திருகோணமலை மாவட்ட ரீதியாக இவ்வாண்டு ஓகஸ்ட் மாத காலம் வரை 830 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நாடாளவிய ரீதியில் 36 ஆயிரத்து 7 பேர் டெங்கு நோயால் இவ்வருடம் மாத்திரம் பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நீரில் மூழ்கி சிறுவன் பலி!

(கொழும்பு)

திஸ்ஸமஹாராம-யோத கங்கையில் நீரில் மூழ்கி 9 வயது சிறுவன் நேற்று நண்பகல் உயிரிழந்துள்ளான்.

தியதலாவ- அலுத்கம்மானய பிரதேசத்தில் இருந்து கதிர்காம யாத்திரைக்குச் சென்றவர்களுடன் குறித்த சிறுவனும் சென்றுள்ள நிலையில் இவ்வாறு அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீரில் மூழ்கிய சிறுவனை பிரதேச மக்களின் உதவியுடன் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் உயிரிழந்துள்ளான். (இ-7)

## அரச தகவல் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நியமனம்



(கொழும்பு)

இலங்கை அரச சேவையில் விசேட தர அதிகாரியான திருமதி யு.பி.எல்.டி. பத்திரண அரச தகவல் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தகவல் திணைக்களத்தில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (இ-7)

## ரூ.12 இலட்சம் கொள்ளை சந்தேகத்தில் மூவர் கைது

### இராணுவ உடைகளும் மீட்பு

(மாத்தறை)

மாத்தறை - வெலிகம - தெனிபிடியவில் வர்த்தகர் ஒருவரிடமிருந்து 12 இலட்சம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் தெனிபிடிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் சந்தேக நபர்களை கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து 3 தொலைபேசிகள் உட்பட 40 ஆயிரம் ரூபாய் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது அவர்களிடமிருந்து இராணுவ உடைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-7)




# மழை என்னும் விருந்தாளி



மன்னர் திம்மவாணன் அரண்மனையில் தீவிரச் சிந்தனையுடன் உலாவிக்கொண்டிருந்தார். தலைமை அமைச்சரும் தலைமை பண்டிதரும் அமைதியாக நின்றிருந்தனர்.

"நிலைமை இப்படிச் சிக்கலாகும் என நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. மக்கள் தண்ணீருக்காக அங்குமிங்கும் அலைவதையும் பயிர்கள் தண்ணீரில்லாமல் கருகிப் போவதையும் பார்க்கும்போது ஒன்றும் சொல்வதற்கில்லை. இன்னும் மூன்று மாதங்களுக்கான உணவு தானியங்களே சேமிப்புக் கிடங்குகளில் இருப்பதாக உணவு அமைச்சர் கூறுகிறார்." "ஆம் அரசே! ஒரு வருடமாக மழை பெய்யவில்லை. ஏரி, குளம், கிணறு, ஆறுகளெல்லாம் வறண்டு விட்டன" என்றார் தலைமை அமைச்சர்.

"கிராமங்களை இணைக்க வீதிகள் அமைக்கும் போது வெட்டப்பட்ட மரங்களுக்குப் பதிலாகப் புதிய மரக்கன்றுகளை நட்டிருந்தால் இவ்வளவு வறட்சி ஏற்பட்டிருக்காது. மழை பொய்த்திருக்காது!" என்றார் பண்டிதர்.

"உண்மைதான்! இப்போது அதை நினைத்து என்ன பயன்?" மன்னர் முகத்தில் கவலை சூழ்ந்தது.

"கவலை வேண்டாம் அரசே! நம் ஆய்வகத்தில் பெருமுயற்சிக்குப் பிறகு 'சிறப்பு விதை' ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறோம். அதை நம் எல்லைக்குள் உள்ள ஆயிரம் கிராமங்களில் பூமியில் விதைக்க உத்தரவிடுங்கள் அரசே!"

பண்டிதர் கூறியதைக் கேட்ட அரசருக்குக் கோபம் வந்தது. "பண்டிதரே! நான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் இக்கட்டான நிலைக்கு என்ன தீர்வு என யோசித்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இரண்டு வருடங்களுக்குப் பிறகு வளர்ந்து மரமாகி, மழை கொண்டு வரப் போகும் திட்டத்தைப் பற்றி சொல்கிறீர்கள்!" என்றார்.

"அரசே! என்மீது நம்பிக்கை வையுங்கள். விதைகளைக் குழி தோண்டி புதைக்க உத்தரவிடுங்கள். அப்புறம் நடப்பதைப் பாருங்கள்!" என்றார் பண்டிதர். மன்னர் திம்மவாணன் சில நொடிகள் யோசனையில் ஆழ்ந்தார். பண்டிதர் மேல் அவருக்கு நிறைய நம்பிக்கை உண்டு. எனவே, பண்டிதர் சொல்படி ஏற்பாடு செய்வதாக அரசர் சொன்னார்.

"மன்னா! ஆனால் ஒரு நிபந்தனை! விதையைப் பூமியில் புதைத்த பிறகு மழை நீரைச் சிறிதாவது ஊற்ற வேண்டும். அதுதான் அந்த விதைகளை நன்றாக முளைக்க வைக்கும்" என்றார் பண்டிதர்.

"இப்போது நாட்டில்தான் மழை பெய்யவில்லையே, மழை நீரை எப்படிக் கொண்டு வருவது?" என்றார்.

அப்போது மன்னர் மகன் வீரவாணனும் அமைச்சர் மகன் அஞ்சுகனும் அங்கே வந்தனர்! "தந்தையே, பண்டிதர் சொன்னபடி மழை நீரைச் சேகரித்து வருகிறோம்" என்றான் வீரவாணன்.

"நாங்கள் நாளையே புறப்படுகிறோம். இன்றே ஏரி, குளம், ஆறுகளைத் தூர்வாரித் தயாராக வைத்திருக்க மக்களுக்கு உத்தரவிடுங்கள்!" என்றான் அஞ்சுகன். மன்னர் உடனே அதைச் செயற்படுத்த, அனைவரும் ஏரி, குளம், ஆறுகளைத் தூர்வாரும்படி உத்தரவு பிறப்பித்தார்.

மறுநாள் வீரவாணனும் அஞ்சுகனும் அண்டாக்களைக் கயிற்றில் கட்டிக் கொண்டு குதிரைகளில் கிளம்பினர். வீரவாணனுடைய குதிரை சிறப்புத் தன்மை வாய்ந்தது. பூமியிலும் ஓடும், வானிலும் பறக்கும்! இறக்கைகள் முளைத்த குதிரை அது!

வானத்தைப் பார்த்துக்கொண்டே 'வானம் மேகமில்லாமல் காட்சியளிக்கிறது. எப்படி நாம் மழை பெய்யும் பகுதியைக் கண்டுபிடிப்பது?' என யோசித்துக்கொண்டே இருவரும் சென்றனர். திடீரென மூளைக்குள் மின்னல் வெட்ட, குதிரையை விட்டு இறங்கிய அஞ்சுகன், காய்ந்து கருகிப் போன புற்களுக்கிடையில் எதையோ தேடினான். வீரவாணனும் பின்தொடர்ந்தான்.

"அதோ இருக்கிறது!" எனச் சுட்டுவிரலால் காண்பித்த இடத்தில் பச்சைநிற மழை விட்டில் ஒன்று நின்றிருந்தது. "விட்டிலே" என அஞ்சுகன் அழைத்ததும் திரும்பிப் பார்த்தது. அதன் முகம் சிறியதாக இருந்தாலும் வேற்றுக்கிரகவாசியின் முகத்தைப் போலிருந்தது.

விட்டிலிடம் "மழை எங்கே பெய்கிறது?" எனக் கேட்டான் அஞ்சுகன். தன் உடம்பை வடகிழக்கு நோக்கித் திருப்பி மழை பெய்யும் திசையைக் காட்டி ஏதோ ஒன்றைச் சொன்னது. அதைக் கேட்டதும் அஞ்சுகன், தன்னுடைய குதிரையை அங்கே இருந்த ஒரு மரத்தில் கட்டிப்போட்டு விட்டு வீரவாணனின் குதிரையின் பின்புறத்தில் ஏறி அமர்ந்தான். "இளவரசே! வட கிழக்கு நோக்கிக் குதிரையைப் பறக்க விடுங்கள்! நூறு மைல் தூரத்திலுள்ள அந்தப் பகுதியில் தான் மழை பெய்கிறதாம். அதுவும், இன்னும் முக்கால் மணி நேரத்துக்குத்தான் மழை பெய்யுமாம்!" என்றான்.

வீரவாணன் குதிரையைக் கிளப்பினான். அது தன் இறக்கைகளை விரித்து வானத்தில் பறக்க ஆரம்பித்தது. காடுகள், மலைகள் தாண்டி கால் மணி நேரத்தில் மழை பெய்யும் பகுதிக்கு வந்துவிட்டது. மூவரும் மழையில் நனைந்துவிட்டார்கள். பெருமழை பெய்து காடுகளிலும் மண் சாலைகளிலும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

"இளவரசே! நாம் இப்போது கண்ணபுரி நாட்டின் எல்லையில் இருக்கிறோம். அரண்மனைக்குச் சென்று அரசரைச் சந்தித்து மழை நீரைப் பிடிக்க அனுமதி கேட்கலாமா?" எனக் கேட்டான் அஞ்சுகன்.

"வேண்டாம்! கண்ணபுரி நமக்கு நட்பு நாடு. நேரம் குறைவாக இருப்பதால் கீழே இறங்குவோம்" எனக் கூறிய வீரவாணன் குதிரையைத் தாழ்வாகப் பறக்க விட்டான். வயல்களுக்கு நடுவில் தனியாக இருந்த ஓட்டு வீட்டின் முன் இறங்கினர். கதவைத் தட்டியதும் விவசாயி கதவைத் திறந்தார். அவரிடம் விபரத்தைக் கூறி மழை நீரைப் பிடித்துக் கொள்ள அனுமதி கேட்டார்.

"தாராளமாக மழை நீர் உலகம் முழுவதற்கும் பொதுவானது. யார் வேண்டுமானாலும் பிடித்துப் பயன்படுத்திக் கொள்ளலாம்" என அனுமதி அளித்தார்.

முற்றத்தின் நான்கு மூலைகளில் ஓடுகளில் விழுந்த நீர் அருவி போல் கொட்டிக் கொண்டிருந்தது. இரண்டு மூலைகளில் இரண்டு அண்டாக்களை வைத்தனர். மழையின் வேகத்தால் பத்து நிமிடத்தில் அண்டா நிறைந்தது. விவசாயிக்கு நன்றி கூறி அண்டாக்களை மூடி போட்டு மூடி கயிற்றால் கட்டி குதிரையில் புறப்பட்டனர்.

அதற்குள் நாட்டு மக்கள் அனைவரும் ஒரே நாளில் ஏரி, குளம், ஆறு, கிணறுகள் முழுவதையும் சுத்தப்படுத்தி விட்டார்கள். மன்னர் தன் படை வீரர்களிடம் ஆயிரம் சிறப்பு விதைகளையும் மழை நீரையும் கொடுத்து ஆயிரம் கிராமங்களுக்கு அனுப்பினார். அவர்கள் குதிரையில் வேகமாகச் சென்று ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு அடி ஆழக் குழி தோண்டி விதையைப் புதைத்து மழைநீரை ஊற்றினர்.

அரண்மனைக்கு எதிரிலும் ஒரு விதை விதைக்கப்பட்டு மழை நீர் ஊற்றப்பட்டது. விதைத்த ஓரிரு மணி நேரத்தில் அது பூமியைப் பிளந்து கொண்டு மரமாக வளர ஆரம்பித்தது. மன்னருக்கும் சுற்றியிருந்தவர்களுக்கும் ஆச்சரியம். பண்டிதர் பெருமிதத்துடன் மரம் வளர்வதைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

இரவுக்குள் இரண்டு பனைமர உயரத்துக்கு அந்த மரம் வளர்ந்துவிட்டது. இரவு கழிந்து விடியும் போது மூன்று பனைமர உயரத்துக்கு வளர்ந்திருந்தது. அதன் உச்சியில் பனை மரத்தைப் போலவே பசுமை நிறக் கிளைகளும் இலைகளும் வளர்ந்திருந்தன. ஒவ்வொரு கிராமத்திலும் நடப்பட்ட விதைகள் அனைத்தும் இது போலவே வளர்ந்திருந்தன. உச்சியில் வளர்ந்திருந்த பசுமையான இலைகள் மழை மேகங்களை ஈர்த்தன. கருமேகக் கூட்டங்கள் ஒன்று கூடி இடிமின்னலுடன் மழை பொழிய ஆரம்பித்தது. அன்று முழுவதும் பெய்த மழை மறுநாள்தான் நின்றது. ஏரி, குளம், கிணறு, ஆறுகளெல்லாம் நிரம்பியது. கண்மாய்களில் நீரோட்டம் கண்கொள்ளாக்காட்சியாக இருந்தன.

பண்டிதரை அழைத்துப் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார் மன்னர்.

"மன்னா! அந்த மரங்கள் அனைத்தும் நாளையே பட்டுப் போய் உதிர ஆரம்பித்துவிடும். இது தற்காலிகமான ஏற்பாடுதான். சாலையோரங்களிலும் வீடுகளிலும் கோயில்களிலும் காடுகளிலும் மரக் கன்றுகளை நட்டு, அதை நல்ல முறையில் பேணி காப்பதே நிரந்தரமான தீர்வு! மீதமுள்ள விதைகளைப் பத்திரமாகப் பெட்டகத்தில் பூட்டி வையுங்கள். மீண்டும் தேவைப்பட்டால் பயன்படுத்திக் கொள்ளலாம்!" என்றார் பண்டிதர்.




❖1893-ஐக்கிய அமெரிக்காவில் கடல் தீவுகளில் இடம் பெற்ற சூறாவளியில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

❖1896-ஆங்கிலோ-சன்சிபார் போர்: ஐக்கிய இராச்சியத்துக்கும் சன்சிபாருக்கும் இடையில் இடம் பெற்ற போர் உலகின் மிககுறைந்த நேரத்தில் (09:02 - 09:40) நிகழ்ந்து முடிந்த போராகும்.

❖1916-முதலாம் உலகப் போர்: ருமேனியா ஆஸ்திரியா-ஹங்கேரியுடன் போரை அறிவித்தது. இது பின்னர் ஜேர்மனி, பல்கேரியப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டது.

❖1962-நாசா மரைனர் 2 விண்கலத்தை வீனஸ் நோக்கி செலுத்தியது.

❖1991-சோவியத் ஒன்றியத்தில் இருந்து மால்டோவா பிரிந்தது.

❖2000-மொஸ்கோவின் ஒஸ்டான்கினோ கோபுரம் தீப்பற்றியதில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

❖2003 - செவ்வாய்க் கோள் பூமிக்கு மிகக் கிட்டவாக 55,758,006 கிலோமீற்றர் தூரத்துக்கு 60,000 ஆண்டுகளுக்குப் பின்னர் வந்தது.

**பிறப்புகள்**

❖1916-ந.சுப்பு ரெட்டியார், தமிழறிஞர்; எழுத்தாளர் (இ. 2006)

❖1939-டி.ஏ.கே.இலக்குமணன், தமிழக அரசியல்வாதி

❖1963-சுமலதா, இந்தியத் திரைப்பட நடிகை

❖1972-தி க்ரேட் காளீ, இந்தியத் தொழில்முறை மற்போர் வீரர், நடிகர்

**இறப்புகள்**

❖1879-ரோலண்ட் ஹில், நவீன அஞ்சல் சேவையைக் கண்டுபிடித்தவர் (பி. 1795)

❖1963-என்.ஆர்.இராசவரோதயம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி. 1908)

❖1976-முக்கேஷ், இந்தியப் பின்னணிப் பாடகர் (பி. 1923)

❖1979-மவுண்ட்பேட்டன் பிரபு, இந்தியாவின் 44 ஆவது தலைமை ஆளுநர் (பி. 1900)

❖1980-தெ.பொ.மீனாட்சிசுந்தரம், பன்மொழிப்புலவர், தமிழறிஞர் (பி. 1901)

❖2002-அ.ச.ஞானசம்பந்தன், தமிழறிஞர், எழுத்தாளர், இலக்கிய விமர்சகர் (பி. 1916)

❖2006-இருசிகேசு முகர்ச்சி, இந்தியத் திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர் (பி. 1922)

❖2015-சாந்தி சச்சிதானந்தம், இலங்கைத் தமிழ் சமூக ஆர்வலர், மனித உரிமைச் செயற்பாட்டாளர் (பி. 1958)

**சிறப்பு நாள்**

❖ விடுதலை நாள்-(மல்தோவா, சோவியத் ஒன்றியத்திடம் இருந்து 1991)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 120 | 110 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 100 | 95 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 140 | 140 | 110 | 300 |
| தக்காளி | 60 | 70 | 80 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 | 40 | 60 |
| கோவா | 80 | 140 | 130 | 100 | 200 |
| கரட் | 200 | 600 | 370 | 280 | 400 |
| பூசணி | 80 | 60 | 80 | 55 | 100 |
| புடோல் | 70 | 70 | 60 | 40 | 80 |
| வாழைக்காய் | 120 | 110 | 100 | 75 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 90 | 110 | 80 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 | 90 | 120 |
| பாகற்காய் | 200 | 120 | 120 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 160 | 40 | 40 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 110 | 80 | 60 | 120 |
| பயற்றங்காய் | 100 | 120 | 80 | 70 | 120 |
| லீக்ஸ் | 150 | 100 | 110 | 90 | 200 |
| பீற்றூட் | 70 | 90 | 80 | 60 | 100 |
| கறிமிளகாய் | 150 | 150 | 140 | 150 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 70 | 100 | 70 | 120 |
| போஞ்சி | 250 | 220 | 200 | 120 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | — | 70 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 25 | 50 | 30 | 40 |
| தேசிக்காய் | 50 | 70 | 40 | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 160 | 160 | 150 | 120 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 140 | 120 | 80 | 200 |
| முள்ளங்கி | 40 | 60 | 70 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 40 | 30 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 60 | 60 | 110 | 60 |

> ஒருவன் பிழை செய்துவிட்டு அதைத் திருத்திக் கொள்ளாமல் போனால் அவன் மீண்டும் பிழை செய்தவனாகிறான். ~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இனவாதத்தை விதைக்கும் முஸ்லிம் அமைச்சர்கள்

## வியாழேந்திரன் காட்டம்

புல்லுமலை தண்ணீர் தொழிற்சாலை குறித்து இனவாதக் கருத்துக்களை முஸ்லிம் அமைச்சர்கள் விதைத்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

புல்லுமலையில்அண்மையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட போது தெரிவித்த கருத்துக்கள் தற்போது சூடுபிடித்துள்ளன.

எதிர்வரும் 3ஆம் திகதி புல்லுமலை தொழிற் சாலைக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் ஏட்டிக்குப் போட்டியான இனவாதக் கருத்துக்கள் வெளிவந்தவண்ணம் உள்ளன.

இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் வாழைச் சேனை கோயிலை இடித்து அதில் சந்தை அமைத்தது இனவாதமா? அல்லது பாரிசவாதமா? என பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் கேள்வி எழுப்பி யுள்ளார்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது சமூகத்தின் காணிகள் வாழ்வாதார வளங்களைப் பாதுகாப்பதற்காக போராட்டங்களை நடத்தும்போது அதனை இனவாதமாக சித்திரித்து எங்களை முடக்குகின்ற செயற்பாடுகளை முஸ்லிம் தலைவர்கள் முன்னெடுக்கின்றனர். எங்களை இனவாதியாக சித்திரித்துக் காட்டி பிரச்சினைகளை திசை திருப்பப் பார்க்கின்றனர். அதற்கு எமது சில தமிழ் தலைமைகளும் துணை போகின்றன.

ஆனால் ஹிஸ்புல்லாஹ் போன்ற அமைச்சர்கள் இனவாதமாகப் பேசியது மட்டுமல்லாது வாழைச்சேனை கோயிலை இடித்து அதில் சந்தையும் அமைத்துக் காட்டியதுடன் அதனை வெளிப்படையாக ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

அப்படியானால் எது இனவாதம்? நாங்கள் செய்வது இனவாதம் என்றால் ஹிஸ்புல்லாஹ் செய்தது என்ன பாரிசவாதமா? எனக் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

# அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் வெடுக்குநாரி ஆலயத்துக்கு விஜயம்

(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேசத்தின் ஒலுமடு கிராமத்தில் இருந்து மூன்று கிலோ மீற்றர் தொலைவில் தமிழரின் பூர்விக பிரதேசமான (300 மீற்றர் உயரமுடைய) வெடுக்குநாரி மலை அமைந்துள்ளது.

குறித்த மலைப்பகுதியில் ஆதிலிங்கேஸ்வரர் என்ற சிவனுடைய லிங்கம் காணப்படுவதுடன் தமிழ் மக்களுடைய நாகர்களின் புராதன பிராமிய எழுத்துக்களும் காணப்படுகின்றன. கடந்த ஐந்து தலைமுறையாக அப்பகுதி மக்கள் குறித்த ஆலயத்திற்கு சென்று பூஜை வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த வாரமளவில் தொல்பொருள் திணைக்களத்தால் குறித்த மலைக்கு பொதுமக்கள் செனறு வழிபடுவதற்கு தடை விதிக்கப்பட்டது.

பினனர் இத்தடையினை தற்காலிகமாக தொல்பொருள திணைக்களத்தின் அனுமதியுடன் நெடுங்கேணி பொலிஸார் நீக்கி வழிபாடுகளை மாத்திரம் மேற்கொள்வதற்கு அனுமதியளித்துள்ளதுடன் ஆலயத்தினை புனரமைப்பு செய்வதற்கும் புதிய கட்டிட நிர்மாணப் பணிகள் செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் ஆலயத்தினை முழுமையாக மீட்டுத் தருமாறு கோரி வெடுக்குநாரி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாக சபையினர், கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையிலேயே நேற்று மாலை 4.00 மணியளவில் நெடுங்கேணி வெடுக்குநாரி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் நிலைமைகளை தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், பாராளுமன்ற உறுப்பினர் சிறிஸ்கந்தராஜா, வட மாகாண சபை உறுப்பினர் ஜீ.ரி. லிங்கநாதன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டதுடன் வழிபாடுகளிலும் ஈடுபட்டனர்.

இதன்போது வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன், வவுனியா வடக்கு கிராம சேவையாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியா மாவட்ட உண்மை மற்றும் நல்லிணக்க மன்றத்தினரும் ஆலய நிர்வாக சபையினரும் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசனிடம் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்தனர். (மு-281)

# ஜனாதிபதி வேட்பாளரை ஐ.தே.கட்சி தீர்மானிக்கும்

## அமைச்சர் ஜோன் அமரதுங்க

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை கட்சியின் செயற்குழு தீர்மானிக்கும் என அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கோட்டை பிரதேசத்தில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், சட்டத்தில் வாய்ப்பிருந்தால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், விசேட மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகளில் சாட்சியங்கள் இருந்தால், நீதிபதிகள் சட்டத்திற்கு அமைய தண்டனை வழங்குவார்கள் எனவும் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார். (மு-1)

# சாபம் ஒன்று தண்டனை இரண்டு

வேட்டைக்குச் சென்ற தசரத மன்னன் முனி புங்கவரின் மகனைக் கொன்று விடுகின்றார்.

ஆற்றங்கரையில் தண்ணீர்ச் சத்தம் கேட்க, மான் தண்ணீர் குடிப்பதாகக் கருதிய தசரத மன்னன் அம்பை எய்ய அது முனிபுங்கவரின் புதல்வனைப் பதம் பார்த்து அவன் உயிரைக் குடித்து விடுகிறது.

தம் பிள்ளை இறந்து விட்டான் என்ற செய்தியை தசரதன் வாயிலாகக் கேள்வியுற்ற முனி புங்கவரும் அவர் மனைவியும் புத்திர சோகத்தால் அழுது புரண்டு; கண் பார்வையில்லாத எங்களை இனி யார் பார்ப்பார்கள் என நிலத்தில் விழுந்து விம்மி அந்தோ! புத்திரசோகத்தால் நாம் உயிர் துறக்கப் போகின்றோம். அதுபோல நீயும் புத்திர சோகத்தால் உயிர் துறக்கக் கடவாய் எனத் தசரத மன்னனுக்குச் சாபமிட்டு உயிர் நீத்தான்.

ஒரு கணப்பொழுதில் எதிர்பாராமல் நடந்த அந்தத் துயரம் தசரத மன்னனுக்குச் சாபத்தைத் தந்து போனது.

இவை நடந்து வருடங்கழிய தசரத மன்னன் தன் புதல்வன் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யத் தயார் செய்கின்றான்.

இராமருக்குப் பட்டாபிஷேகம் என்பதால் அயோத்தி மாநகர் விழாக்கோலம் பூண்டிருந்தது.

என்ன செய்வது, விழாக்கோலம் பட்டாபிஷேகம் காணாமலே நின்று விடுகிறது.

முனிபுங்கவரின் சாபம் கைகேயி வாயிலாக தசரதனை வந்தடைவதாயிற்று. இராமன் காடு செல்ல வேண்டும். பரதன் நாடாள வேண்டும் என்ற இரு வரங்களை கைகேயி கேட்டு நிற்க,

அதனைத் தடுக்க முடியாத தசரத மன்னன் உடன்பட்டுப்போக, இராமன் காடு செல்கின்றான்.

தன் மூத்த மைந்தன் இராமன் காடு செல்கிறான் என்ற செய்தி அறிந்ததும் புத்திரனை இழந்த பெருந்துயரில் தசரதனின் இதயம் அடைத்து உயிர் பிரிந்து போகிறது.

அன்று காட்டில் நடந்த முனிபுங்கவரின் சாபம் நிறைவேறிற்று. இப்போ தசரத மன்னனுக்கு இறுதிச் சடங்கு செய்தாக வேண்டும்.

தந்தையின் இறுதிச் சடங்கை செய்கின்ற கடமை இராமனுக்கே உரியது.

ஆனால் இராமன் காடு சென்றுவிட்டான். தந்தையின் இறுதிச்சடங்கை நிறைவேற்றுவதற்கு மூத்த மகன் இல்லை என்றாயிற்று.

இங்குதான் ஒரு கேள்வி எழுகிறது. அதாவது "... எங்களைப் போல் புத்திர சோகத்தால் நீயும் மரணிப்பாய்..." என்பதுதான் முனிபுங்கவர் இட்ட சாபம். அந்தச் சாபம் நிறைவேறிவிட்டது.

ஆனால் தசரதனின் இறுதிச் சடங்கை செய்வதற்கு இராமன் இல்லாமல் போனமை முனி புங்கவரின் சாபத்துக்கு உட்பட்டதன்று.

அவ்வாறாயின் தந்தையின் இறுதிச் சடங்கைச் செய்கின்ற பலனை இராமரும் தன் மூத்த மகனின் கையால் தன் உடல் தகனமாகின்ற பாக்கியத்தை தசரதரும் இழந்தது ஏன்? என்பதுதான் இங்கு முன்னிற்கும் வினா.

இந்த வினா எழும்போதுதான் ஒரு சாபம் இரண்டு தண்டனை என்பதாக நிலைமை மாறுகிறது.

ஆக, அபிவிருத்திச் செயலணியில் பங்கேற்று அபிவிருத்தியும் இல்லை; பிரச்சினைக்குத் தீர்வும் இல்லை என்ற தண்டனையைப் பெறுவதுதான் தமிழர்களின் தலைவிதி என்றால், அதைத் தடுக்க முதலமைச்சர் விக்னேஸ்வரனாலும் முடியாது என்பதைத்தான் சமகால நிலைமை காட்டி நிற்கிறது.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## தவமும் அறமும்



தவத்தையும் அறத்தையும் நீங்கள் மிகச் சுபமாகப் பற்றிச் செல்லும் முறையினை இப்போது உங்களுக்குச் சொல்லுகின்றேன். தவம் எதற்காக என்றால் இறையுணர்வு பெற்று இறைவனோடு உறைவதற்காக. அறம் எதற்காக என்றால் இதுவரையில் செய்த கர்மங்களின் அழுத்தத்தினால் எண்ணமும் செயலும் தோன்றிக் கொண்டே இருக்கின்றனவே. அதிலிருந்து செய்து செய்து நல்லனவே செய்யக்கூடிய அளவுக்குத் தீயன செய்யாது இருக்கக் கூடிய ஒரு தூய்மைக்கு வரவேண்டும்.

மனத் தூய்மை தவத்தினால் வரும் வினைத்தூய்மை செயலினால் வரும் நல்ல செயல் அறத்தினால் வரும். அதனால் இது வேண்டும். இந்த இரண்டையும் ஒருங்கே பார்ப்பதற்கு என்ன வேண்டும்? இந்தக் காலத்திற்கு வேண்டியது அதுதான். அந்த அறம், தவம் இவற்றை வைத்துத் தான் இதுவரையில் இந்த உலகத்திலே ஏற்பட்ட மதங்களெல்லாம் அமைந்துள்ளன.

எந்த மதத்தை எடுத்துக் கொண்டாலும் இறை-உணர்வைக்காட்டி அற-உணர்வை காட்டுவதாகவே இருக்கும். இந்த இரண்டும் தான் எல்லா மதங்களிலும் உள்ளன. இறை உணர்வுக்கு இறைவழிபாடு. உலக மக்களோடு தொடர்பு கொண்டு இனிமையாக - அதாவது ஆங்கிலத்தில் "ஈசஅமுலை" என்று சொல்கின்றோமோ அவ்வாறு - வாழ்வதற்கு என்ன வேண்டும்? ஒழுக்கம், கடமை, ஈகை என்ற அறம் வேண்டும். இந்த அறநெறி உலக வாழ்க்கைக்கு அவசியம்.

தவநெறி, உளப்பயிற்சி, அறிவு மேன்மை இறைவனை அடைய இவை வேண்டும். இதுவரையில் மதங்களிலெல்லாம் அந்த உணர்வை ஏற்படுத்துவதற்காக இதெல்லாம் சொன்னார்கள். இப்பொழுது அதை விட இன்னும் இந்த விஞ்ஞான யுகத்திலே மிகவும் சுருக்கமாகத் தெரிய வேண்டுமானால் என்ன - அந்தச் செயலிலேயே சிவனைக் காணலாம்.

# வடக்கு-கிழக்கை ஒன்றிணைத்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி யாழில்



யாழ்.மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் மற்றும் பிரித்தானிய தமிழ் கிரிக்கெட் லீக் இணைந்து, வடக்கு - கிழக்குப் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் கிரிக்கெட் தாக்குதல் - 2018 (Cricket Bash - 2018) இருபது - 20 துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியை இரண்டாவது ஆண்டாக நடத்தவுள்ளது.

தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக நடைபெறும் இந்தச் சுற்றுப் போட்டியின் போட்டிகள், எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகி செப்டெம்பர் முதலாம் திகதி சனிக்கிழமை வரையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளது.

இம்முறை சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 10 அணிகள், மட்டக்களப்பு மாவட்ட 5 அணிகள், கிளிநொச்சி மாவட்ட 3 அணிகள், மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலிருந்து தலா 1 அணி என மொத்தம் 20 அணிகள் பங்குபற்றுகின்றன.

அணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு பிரிவிலும் முதலிரு இடங்களைப் பெறும் அணிகள் காலிறுதிப்போட்டிக்குத் தெரிவு செய்யப்படும். அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டிகள் செப்டெம்பர் மாதம்முதலாம்திகதி சென்.ஜோன்ஸ் கல்லூரி மற்றும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ளது.

முதற்சுற்று ஆட்டங்கள் தொடக்கம் இறுதிப்போட்டி வரையில் மொத்தமாக 47 போட்டிகள் நடைபெறவுள்ளன. ஒவ்வொரு போட்டியிலும் ஆட்டநாயகன் தெரிவு செய்யப்படுவார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள துடுப்பாட்ட வீரர்களின் திறனை வளர்ச்சியடையச் செய்யவும், இந்த மாகாணங்களிலிருந்து தேசிய அணிக்கு வீரர்கள் உள்வாங்கப்படவேண்டும் என்ற நோக்குடன் பிரித்தானிய தமிழ் கிரிக்கெட் லீக் இந்தச் சுற்றுப்போட்டியை நடத்துகின்றது.

கடந்த 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சுற்றுப் போட்டியில்முதல் ஆண்டில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சம்பியனாகியிருந்தது.

ஏ பிரிவில், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் மற்றும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன. ஏ பிரிவு அணிகளுக்கிடையிலான முதற்சுற்று ஆட்டங்கள் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பி பிரிவில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மற்றும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன. இந்த பிரிவு அணிகளுக்கிடையிலான முதற்சுற்று ஆட்டங்கள் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சி பிரிவில் மட்டக்களப்பு சென்.மைக்கல் கல்லூரி, மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன. இந்தப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதற்சுற்றுஆட்டங்கள்சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

டி பிரிவில் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய கல்லூரி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மட்டக்களப்பு களுதாவளை மகா வித்தியாலயம், சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகிய அணிகள் இடம் பெற்றுள்ளன.

இந்தப்பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (க-26)



அகில இலங்கை மக்கள் மயப்படுத்தப்பட்ட அரச திணைக்களங்களுக்கிடையேயான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டி கடந்த 23 ஆம் திகதி சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் இ.போ.ச தலைமைக் காரியாலய அணி சார்பில் பங்குபற்றிய வடபிராந்திய காரைநகர் சாலையை பிரதிநிதித்துவப்படுத்தும் தி.ஜெயரூபன் உயரம் பாய்தல், நீளம் பாய்தல், மும்பாய்ச்சல் என 3 போட்டிகளிலும் முதலாம் இடம்பெற்று 3தங்கப்பதக்கங்களை சுவிகரித்துக் கொண்டார். (க)



அகில இலங்கை மக்கள் மயப்படுத்தப்பட்ட அரச திணைக்களங்களுக்கிடையேயான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டி கடந்த 23 ஆம் திகதி சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் இ.போ.ச தலைமைக் காரியாலய அணி சார்பில் பங்குபற்றிய வடபிராந்திய சாலையை பிரதிநிதித் துவப்படுத்தும் சுஜிந்தன் novices பிரிவில் வேக நடைப் போட்டியில் முதலாம் இடம்பெற்று தங்கப்பதக்கத்தை சுவிகரித்துக் கொண்டார். (க)

# ஆறு பந்துகளில் முப்பது ஓட்டங்கள்

## பொலார்ட் அதிரடி

கரீபியன் பிரீமியர் லீக் தொடரில் அமேசான் வாரியர்ஸ் அணிக்கு எதிராக செயிண்ட் லூஸியா ஸ்டார்ஸ் அணியின் தலைவர் பொலார்ட் ஒரு ஓவரில் 30 ஓட்டங்கள் குவித்து வானவேடிக்கை காட்டியுள்ளார்.

கரீபியன் பிரீமியர் லீக் தொடரில் வாழ்வா சாவா ஆட்டம் ஒன்றில் செயிண்ட் லூயிஸ் அணித் தலைவர் பொலார்ட் ஒரு ஓவரில் 30 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய அமேசான் வாரியர்ஸ் அணி 20 ஓவர்களில் 140 ஓட்டங்கள் குவித்தது.

எளிதாக வெற்றி பெறலாம் என களமிறங்கிய செயிண்ட் லூஸியா ஸ்டார்ஸ் அணிக்கு துவக்கமே பேரிடியாக அமைந்தது.

கடைசியில் 3 ஓவர்களில் 31 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் அணித்தலைவர் பொலார்ட் களமிறங்கினார்.

தேவேந்திர பிஷு வீசிய 18-வது ஓவரில் மூன்று சிக்ஸர்களை பறக்க விட்ட பொலார்ட் 3 பவுண்டரிகளையும் அள்ளினார்.

18 பந்தில் 41 ஓட்டங்கள் குவித்த பொலார்டும், அவருக்கு உறுதுணையாக நின்ற ஆந்த்ரே பிளெச்சரும் செயிண்ட் லூஸியா ஸ்டார்ஸ் அணியை வெற்றிக்கு இட்டுச்சென்றனர். (க)

# அவருடன் இவரை ஒப்பிடாதீர்கள்-சேவாக்



இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் ஹோலியை, முன்னாள் ஜாம்பவான் சச்சினுடன் ஒப்பிடுவது சரியாக இருக்காது என வீரேந்தர் சேவாக் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் ஹோலி டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபது-20 என அனைத்து விதமான போட்டிகளிலும் பல சாதனைகளை படைத்து வருகிறார்.

குறிப்பாக, ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக சதங்கள் அடித்த வீரர்களின் பட்டியலில் 35 சதங்களுடன் முன்னாள் ஜாம்பவான் சச்சினுக்கு (49 சதங்கள்) அடுத்த இடத்தில் உள்ளார்.

இதன் காரணமாக, விராட் ஹோலி விரைவில் சச்சினின் அதிக ஓட்டங்கள், அதிக சதங்கள் உள்ளிட்ட சாதனைகளை முறியடித்து விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஹோலி, சச்சினுடன் ஒப்பிடப்படுகிறார்.

இந்நிலையில், ஹோலியை சச்சினுடன் ஒப்பிடுவது குறித்து இந்திய அணியின் முன்னாள் வீரர் சேவாக் கருத்து தெரிவித்துள்ளார்.

'சச்சினுடன் ஹோலியை ஒப்பிடுவது சரியல்ல என்று நினைக்கிறேன். ஒருநாள் கிரிக்கெட்டில் இரட்டை சதம், சர்வதேச கிரிக்கெட்டில் 30,000 ஓட்டங்கள் போன்ற சச்சின் டெண்டுல்கரின் சாதனைகளை ஹோலி முறியடித்தால், சச்சினுடன் அவரை ஒப்பிடுவதில் நியாயம் இருக்கிறது.

விராட் ஹோலி உட்பட ஒவ்வொரு வீரரும், சச்சினின் 100 சர்வதேச சதங்கள் என்ற சாதனையை முறியடிக்க முயல்கின்றனர். இந்த மைல்கல்லை அடைய தேவையான திறமை மற்றும் வேட்கை ஹோலியிடம் உள்ளது.

அவர் தயாராகும் வழியைப் பார்த்தவுடன் அது தெளிவாகிறது. ஒவ்வொரு போட்டியிலும் முன்னர் நடந்ததைப் பொருட்படுத்தாமல் அவர் கவனம் செலுத்துகிறார் என தெரிவித்துள்ளார்.

தற்போது 29 வயதாகும்ஹோலி, இன்னும் 7 ஆண்டுகள் வரை கிரிக்கெட் விளையாட வாய்ப்புள்ளதாக சேவாக் மேலும் தெரிவித்தார். (க)

## மைத்திரி-ரணில்...

அவர் மேலும் தெரிவிக்கையில்

கடந்த 13ஆம் திகதி இந்த அரசாங்கம் 3ஆம் ஆண்டு பூர்த்தி நிறைவினை கொண்டாடியிருந்தது. இந்த காலப்பகுதியில் வழங்கிய எந்தவிதமான வாக்குறுதிகளையும் நிறைவேற்றாமல் எந்த ஒரு மக்களின் எதிர்பார்ப்புக்களும் பூர்த்தி செய்யப்படாமல் தோல்வியடைந்த அராஜகமான ஆட்சியாகவே இந்த ஆட்சியை நாம் பார்க்கின்றோம்.

இதனால் அரசு தொடர்பில் விரக்தி நிலை ஏற்பட்டுள்ளது. ஆட்சியை கவிழ்க்க வேண்டும் என்று எண்ணுகின்றார்கள். இதனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி மீது மக்களின் கவனம் திரும்பியுள்ளது.

ஆனால் மகிந்தவின் ஆட்சியை நாங்கள் விரும்பவில்லை. அவருடைய குடும்பத்தில் இருந்து எவர் ஆட்சிக்கு வந்தாலும் அதனை ஏற்க முடியாது. ஜனாதிபதி தேர்தல் நடக்குமாக இருந்தால் அதற்கு பொருத்தமான வேட்பாளர் இல்லாத இக்கட்டான நிலையில் மகிந்த அணி உள்ளது.

கடந்த நாட்களில் ஜனாதிபதி வேட்பாளர் பெயராக கோத்தபாய ராஜபக்ஷவின் பெயர் சொல்லப்பட்டாலும் கட்சிக்குள் வந்த எதிர்ப்பு காரணமாக மறுபடியும் அவருடைய பெயரை வெளியிடாமல் பின்வாங்கும் நிலைமை உருவாகியுள்ளது.

மகிந்த கூறுகின்றார் 3ஆவது முறையாகவும் தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடலாம் என்று. ஆனால் அரசியல் திருத்தத்தின் படி அவர் போட்டியிட முடியாது என்று அனைவருக்கும் தெரியும். கட்சிக்குள் உள்ள விரிசல் நிலையை சமாளித்துக் கொள்ளவே தான் போட்டியிடப் போவதாக அவர் கூறி வருகின்றார்.

தற்போதைய அரசாங்கத்தின் பலவீனத்தினால் மகிந்த அணி சிறப்பான அரசியல் முன்னகர்வுகளை செய்வதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. புதிய ஒரு ஆட்சியை பற்றி சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் நாங்கள் உள்ளோம்.

தற்போது சகல இன மக்களும் அடக்குமுறைக்குள் வாழ்ந்து வருகின்றார்கள். வரி அதிகரிப்பால் வாழ்வாதார ரீதியில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இளம் சமூகம் தொழில்வாய்ப்பற்று உள்ளது. கல்விக்கு ஒதுக்கிய நிதி போதாதுள்ளதால் அத்துறை சீரழிந்துள்ளது. சுகாதார துறைக்கும் இதே நிலையே காணப்படுகின்றது.

பாலியல் வன்புணர்வு குற்றங்கள் மற்றும் போதைபொருள் அதிகரிப்பினால் மக்கள் நிம்மதியாக வாழ முடியாது உள்ளது. நாட்டு மக்கள் இனவாதத்தினாலும் போரினாலும் பாதிக்கப்பட்டார்கள். இந்த பாதிப்புக்களில் இருந்து இன்னும் மீளமுடியாது உள்ளது.

இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு புதிய பாதையை சிந்திக்க வேண்டும். இந்த அரசாங்கங்களில் கொள்கைகள் பொருத்த மற்றதாக உள்ளதாலேயே இந்த நிலை உள்ளது. நாட்டிற்கு நிரந்தர வருமானம் தரும் வழிகள் இல்லை. தேயிலை, தெங்கு, றப்பர் செய்கைகளும் சீரில்லாத நிலை காணப்படுகின்றது. இதுதவிர அதிகமான தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன.

கடந்த காலங்களில் கடன் பெற்றே அரசாங்கங்கள் ஆட்சி செய்து வந்தன. 20 ஆயிரம மில்லியன் டொலர் ஒவ்வொரு வருடமும் அரசுக்கு தேவையாக உள்ளது. அபிவிருத்தி திட்டாங்களும் கடன் ஊடாகவே செய்யப்பட்டன.

போரின் அழிவுகளை கட்டியெழுப்புவதில் அரசு தவறியுள்ளது. அவ்வாறான கொள்கைகள் எவையும் அரசிடம் இல்லை. தேர்தல் நெருங்கும் போது மக்களை ஏமாற்றும் தந்திரத்தை செய்ய அரசு காத்திருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தில் வடக்கிற்கு வந்து ஜனாதிபதியும் பிரதமரும் ஏதாவது வாக்குறுதியை கொடுத்துவிட்டு செல்வார்கள். இதுமட்டு மல்லாமல் மகிந்த அணியும் ஏமாற்றும் செயற்பாடுகளை வடக்கில் செய்யும்.

கடந்த 70 ஆண்டுகாலம் நடந்த இந்த ஏமாற்று வேலைக்கு முடிவு கட்டும் காலம் வருகின்றது என்று நாங்கள் நம்புகின்றோம்.

மீளெழ முடியாத நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது. கடனை மீளசெலுத்த முடியாத நிலையில் இங்குள்ள வெளிநாடுகளுக்கு விற்கும் நடவடிக்கையில் அரசு இறங்கியுள்ளது. குறிப்பாக அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நாட்டிற்கு அரசு தாரைவார்க்கின்றது. இதுபோன்று மாத்தறை பலாலி விமான நிலையங்களையும் தாரை வாக்கின்றது.

இந்த பிரச்சினைகளுக்கு முடிவாக புதிய அரசியலை உருவாக்க வேண்டும். ஆசிரியர்கள், புத்திஜீவிகள், பொது அமைப்புக்கள் சமூக அமைப்புக்களை கொண்ட புதிய வெகுஜன இயக்கத்தை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இருந்து ஆரம்பிக்க உள்ளோம். இம் முயற்சியில் இடதுசாரிகள் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். வடக்கு மக்களும் ஆதரவு தர வேண்டும்.

இனவாதம் ஆட்சியாளர்களுக்கே நன்மை கொடுக்கும். வடக்கில் உள்ளவர்களின் எதிரி சிங்களவர்கள் இல்லை. தென்னிலங்கையில் உள்ளவர்களின் எதிரி தமிழ் மக்கள் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (மு-9)

## முல்லைத்தீவு மீட்பு போராட்டம்...

மக்கள் அத்துமீறிக் குடியேறுகின்றனர்.

ஒரு புறம் கடலில் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பாவித்து ஆழ்கடல் வரை மீன் வளங்கள் கொள்ளையிடப்படுகின்றன. மீன் வளம் அழிகின்றது. தமிழ் மீனவர் வாழ்வாதாரம், வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது. தென்னிலங்கை மீனவர் செல்வம் கொழிக்கிறது. தமிழ் மீனவர் வறுமையில் வாடுகின்றனர்.

அதேபோல தமிழ் மக்களின் வளமான வேளாண் நிலங்களும் குடியிருப்பு நிலங்களும் இராணுவத்தினாலும் தென்னிலங்கைச் சிங்களவர் ஆக்கிரமிப்பினாலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால் தமிழர் நிலம் சிங்களவர் நிலமாகின்றது.

தற்போது மகாவலி நீர் பாய்ச்சல் திட்டத்தினுல் தமிழர் நிலங்களில் தென்னிலங்கைச் சிங்கள மக்கள் குடியேற்றப்படும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. மகாவலி வலயப் பிரகடனங்கள் நீர்ப்பாசனத்திற்கே மட்டுப்படுத்தப்பட வேண்டும். சிங்கள குடிப்பரம்பலை, குடியேற்றத்தை கட்டியெழுப்புவதற்கு அல்ல. இத்தகைய அபாயத்தை தடுத்து நிறுத்தவும் தமிழ் மக்களையும், தமிழர் நிலங்களையும் பாதுகாக்கவும் திட்டமிட்ட நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. காணி அதிகாரம், மகாவலி நீர்ப்பாய்ச்சல் திட்டம் மற்றும் குடியேற்ற அதிகாரம் தமிழர் பிரதேசத்தில் தமிழ் மக்களிடம் இருக்க வேண்டும். அல்லது தமிழர் அரசியல் பலமும் அதிகாரமும் சிதைக்கப்பட்டுவிடும்.

அத்தோடு தமிழர் பிரதேசங்களில் 1.வனப் பிரதேசம் 2.வன விலங்கு வாழ் பிரதேசம் 3.தொல்லியல் பாதுகாப்புப் பிரதேசம் 4.இராணுவ உயர் பாதுகாப்புப் பிரதேசம், 5.கடலோரப் பாதுகாப்புப் பிரதேசம் அதைவிட புதிய பௌத்த சிலைகள், விகாரைகள் வளாகங்கள் புனித பிரதேசங்கள் எனும் பிரகடனங்களால் தமிழர் பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்படுவதால் தமிழர் இனம், தமிழர் நிலம், தமிழர் குடியிருப்புக்கள், சமூக பொருளாதார கட்டமைப்புக்கள் அடக்குமுறைக்கும், ஆக்கிரமிப்புக்கும், ஒழிப்புக்கும் ஆளாகின்றன.

இத்தகைய தமிழ் இன அடக்குமுறை ஒடுக்குமுறை அழிப்பு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தி தமிழினத்தையும், தமிழ் நிலத்தையும், தமிழர் சமூக பொருளாதார கட்டமைப்பையும், தமிழர் வாழ்வுரிமையையும் பாதுகாத்துப் பேண வேண்டும். எனும் அவசிய தேவையை உணர்த்தியது இத்தகைய அமைதிவழிப் போராட்டங்கள், விழிப்புணர்வுப் பேரணிகள் நடத்தப்படுவது காலத்தேவையாகும்.

இந் நோக்கில் அணி திரளும் மக்கள் எவ்வகையிலும் வன்முறைகளுக்கு இடமளிக்காமல் கண்ணும் கருத்துமாய் தமிழர் இலட்சிய தாகத்தை மேம்படுத்தி நிற்கவேண்டும் எனவும் கேட்டு நிற்கின்றோம் என பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். (மு)

## மகாவலி அபிவிருத்தி...

நேற்று பிற்பகல் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் வடமாகாணம் துண்டாடப்படுகின்றது.

இன்று இலங்கை அரசானது பல்வேறு முறைகளில் திட்டமிட்டு வடகிழக்கின் நிலப்பரப்பை ஆட்கொண்டு துண்டாடி அங்கே சிங்களக்குடியேற்றங்களை கொண்டுவந்து தமிழ்மக்களின் இனப்பரம்பல் வீதாசாரம் அனைத்துவிடயங்களையும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

நீண்ட கால வரலாறாக மகாவலி அபிவிருத்தி தமிழ்மக்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இதற்கான ஆதாரங்கள் பல எங்களிடம் உண்டு.

சிங்கள மக்களை பொறுத்தவகையில் மகாவலி அபிவிருத்தி அடையாளமாக பயன்படுத்தப்பட்டாலும் தமிழ்மக்களை பொறுத்த வரையில் இது ஒரு ஆக்கிரமிப்பின் குறியீடாகவே காணப்படுகின்றது.

1984ஆம் ஆண்டு அரசபடைகள் போரின மூலம் தமிழ்மக்களை இடம்பெயரச் செய்த பின்னர் 1988ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மகாவலி அரசாணையின் கீழ் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவு மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவினுடைய பலபகுதிகள் மகாவலியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து 2007ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்ட மகாவலி அரசாணை வலயத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் மத்தியாக இருக்கக்கூடிய அரசபணிமனையை தொடர்ந்து சின்னாறு தொடக்கம் கொக்குளாய் கடல் நீர் ஏரிவரையிலான 34 கிலோ மீற்றருக்கு உட்பட்ட பல கிராமங்கள் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இதனால் 1984ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த மக்களுடைய விளைநிலங்கள் உட்பட பல ஆயிரம் வாழ்வாதார நிலப்பரப்புகள் சிங்கள குடியேற்றத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

வெலியோயா என்ற பெயரிலே உருவாக்கப்பட்ட வெலியோயா என்ற சிங்கள பிரதேச செயலாளர் பிரிவிலே 6000க்கு மேற்பட்ட மக்கள் குடியேற்றப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

அதுமட்டுமல்லாமல் கொக்குளாய் பகுதியில் உள்ள விகாரை மற்றும் நாயாற்று பகுதியில் அமைக்க எத்தனிக்கப்பட்டுவருகின்ற விகாரை என்பனவற்றினூடாக தமிழர்களின் வரலாறு திட்டமிட்டமுறையிலே திரிக்கப்பட்டு சிங்கள குடியேற்றத்திற்காகவே மாகாவலி அபிவிருத்தி பயன்படுத்தப்படுகின்றது.

ஆகவே வடமாகாணத்திலே மகாவலி என்பது காணிகளை அபகரித்து கொள்வதற்கும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்வற்குமான கருவியாக பயன்படுத்தப்படுகின்றது.

இதனால் தமிழ் மக்களிற்கு மகாவலி எந்தப்பயனையும் பெற்றுத்தரவில்லை

இதன் அடிப்படையில் ஆக்கிரமிப்பின் குறியீடான மகாவலி அபிவிருத்தி திட்ட த்தை வடமாகாணத்தில் நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மகாவலி அபிவிருத்தி திட்டத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட குடியேற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் மாபெரும் போராட்டம் நடைபெறவுள்ளதாக மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை பேரவை அறிவித்துள்ளதுடன் அனைவரையும் அணிதிரளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர். (மு-281)

## தொடர்ந்தும் தேசிய...

மன்ற உறுப்பினர் பந்துலால் பண்டாரிகொட தெரிவித்துள்ளார்.

காலியில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி தனித்து ஆட்சி அமைக்க வேண்டும் என கட்சியில் உள்ள சில உறுப்பினர்கள் கூறினாலும், அதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விருப்பமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டியுள்ளமையால், இரண்டு பிரதான கட்சிகளும் தொடர்ந்தும் இணைந்தே ஆட்சி நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பிரதமர் இருந்து வருகிறார் எனவும் பந்துலால் பண்டாரிகொட மேலும் சுட்டிக்காட்டினார். (மு)

## வீடுகளை கூட்டமைப்பின்...

ஆகியோரின் கருத்துக்களுக்கு பதிலளித்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று பகல் 11மணிக்கு முல்லைத்தீவு வள்ளிபுனம் கனிஸ்ர உயர்தர வித்தியாலயத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையின் போது கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மனோ கணேசன்,

இங்கு வீடுகள், கழிப்பறைகள் இல்லையென எனக்கு முன் பேசிய பா.உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண விவசாய அமைச்சர் சிவநேசன் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

வீடு கட்டுவதென்பது ஒரு பாரிய பணி, இந்தப்பணி எனது அமைச்சுக்கு சில மாதங்களுக்கு முன்பு தான் தரப்பட்டது.

மூன்றுவருடங்கள் இப்படிக்கட்டவில்லை என்பதற்காக அரசாங்கத்தின் பங்காளிக்கட்சி என்றகட்சி என்ற வகையில் நான் கூட்டுப்பொறுப்பை எடுத்துக்கொள்கின்றேன்.

ஆனால் வீடு கட்டும் பொறுப்பு எனது பொறுப்பிலிருக்கவில்லை.அதை எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும். கடந்த இரண்டு மாதங்களாகத்தான் என்னிடம் வந்துள்ளது.

நான் வீடு கட்டத்தயாராக இருக்கின் றேன் அதற்கான வேலைகளை எனது அமைச்சின் செயலாளர் உட்பட அனைவரும் ஏற்கெனவே விட்டஇடத்திலிருந்து ஆரம்பித்திருக்கின்றோம்,

ஆனால், என்னைப்பார்த்து வீடு கட்டித்தாருங்கள் கழிப்பறை கட்டித்தாருங்கள் என்று செல்வம் அடைக்கலநாதன் சிவநேசன் ஆகியோர் என்னிடம் கேட்பதை விட தங்கள் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களிடம் சென்று கேட்கவேண்டும்.

சகல பா.உறுப்பினர்களும் சுமந்திரன் அவர்களும் சேர்ந்து கடிதம் மூலம் ஒரு கோரிக்கையை பிரதமரிடம் வைத்தீர்களா? எனக்கேளுங்கள், அவர்கள் வைத்த கோரிக்கையை ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கூறியிருக்கின்றார்.

இந்த வீடு கட்டும்பொறுப்பை மனோ கணேசன் அமைச்சரிடம் இருந்து பறித்தெடுத்துபழைய அமைச்சர் மூன்று வருடங்களாக வீடு கட்டிக்கொண்டிருக்கும் அமைச்சர் சுவாமி நாதனிடம் வழங்கி விடுங்கள் என்று சொன்னீர்களா? என்று கேளுங்கள், கடந்த காலங்களில் வீடு கட்டவில்லை. பொருத்து வீடு பொருந்தா வீடு என்று சொல்லித்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தலைவர் சம்பந்தன் பேச்சாளர் சுமந்திரன், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் கதைத்துக் கொட்டினார்கள், வெளிநாடுகளிலும் குறை சொன்னார்கள், இப்போது பார்த்தால் வீடு கட்ட வருகின்றேன். தயாராக இருக்கின்றேன். இங்குள்ள மக்கள் எனது உறவுகள், எனது இடம், உறவுகள் இரத்தங்கள் என்று தேடிப்பிடித்து வீடுகளை கட்ட வரும் மனோ கணேசன் வீடு கட்ட வேண்டாம்,

நாங்கள் பேசி ஏசித்திட்டி விமர்சனம் செய்த அமைச்சர் சுவாமி நாதனுடன்வீடுகளை கட்டக்கொடுங்கள் என்று சொல்லுபவர்களால் என்னையா முரண்பாடு? இந்த முரண்பாடு என்னிடம் கேள்விகள் கேட்பதை விட, உங்கள் தலைவர்களிடமும் பேச்சாளரிடமும் கேட்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். (மு-315,881)


தன நிதானய
திகதி 2018-08-26
சீட்டிழுப்பு இலக்கம் 41
F 04 12 37 54

நீரோகா
திகதி 2018/08/26
சீட்டிழுப்பு இலக்கம் 438
லக்கினம்: விருச்சிகம்; வெற்றி இலக்கங்கள்: 17 27 43 51; போனஸ் இலக்கம்: 58

கொவிசெத
திகதி 2018.08.26
சீட்டிழுப்பு இலக்கம் 1863
W 02 08 22 32

மஹஜன சம்பத
திகதி 2018/08/26
சீட்டிழுப்பு இலக்கம் 3732
M 2 7 2 9 2 0

தேசிய லொத்தர் சபை

## டிசம்பருக்குள்...

துறை அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக ஆரம்பித்து, பின்னர் சர்வதேச விமான நிலையமாக தரமுயர்த்தி வெளிநாடுகளுக்கான விமான சேவைகளை நடத்துவது எனத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அலுவலகம் மற்றும் சுங்கத் திணைக்களம் என்பவற்றை நிறுவுவது தொடர்பான திட்டத்தை சிவில் விமான சேவைகள் அதிகார சபை வரைகின்றது.

விமான நிலையத்தை புதுப்பிக்கும் பணிகளுக்காக 1.2 பில்லியன் ரூபாய் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. விமான நிலையத்தின் மறுசீரமைப்புப் பணிகள் இலங்கை விமானப் படையிடம் கையளிக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

வலி.வடக்கில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பலாலி விமான நிலையம் அமைந்துள்ளது. எனினும், 750 ஏக்கர் நிலமே அதன் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படவுள்ளது. எஞ்சியுள்ள 250 ஏக்கர் காணி விடுவிக்கப்படலாம் என்று யாழ். மாவட்ட செயலக காணிக்குப் பொறுப்பான மேலதிக அரச அதிபர் எஸ்.முரளிதரன் தெரிவித்தார்.

விமானப் படையின் உள்ளீடுகளுடன் பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தால் முதலீட்டுக்கு ஏற்ப குறைந்தபட்ச வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆரம்பத்தில் விமான நிலையமானது ஏ320, ஏ321, பி737 வகை விமானம் போன்ற குறைந்தபட்ச இரண்டு நடுத்தர வர்த்தக ஜெட் விமானங்களைக் கையாள மேம்படுத்த முடியும். இந்த வகை விமானங்களில் 150 தொடக்கம் 180 பயணிகள் பயணிக்க முடியும் என்று சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் முன்மொழிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக தரமுயர்த்துவதற்கான பணிகளை ஆரம்பிப்பது தொடர்பில் இந்திய அதிகாரிகள் மூவர் கடந்த வாரம் ஆய்வு செய்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (மு)

## ஜனாதிபதி செய...

வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் இரண்டாவது கூட்டம் இன்று கொழும்பில் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி செயலணியின் கூட்டத்தில் பங்கேற்பது குறித்து வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் வினவியது போது,

அதற்கு பதில் வழங்கிய அவர் இந்த கூட்டத்தில் பங்கேற்க போவதில்லை என்பதை மீண்டும் உறுதிபட தெரிவித்தார்.

அத்துடன் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் தனக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 7-ம் திகதி இடம்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.(மு)

## துப்பாக்கி சூட்டி...

ன்றி உயிரிழந்துள்ளார்.

இதன்போது 34 வயதுடைய பெண் ஒருவரே உயிரிழந்துள்ளதாக மாளிகாவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாளிகாவத்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை கடந்த சில காலமாக கொழும்பின் புறநகர் பகுதியில் தொடர்ந்து இவ்வாறான கொலைச்சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு)

## எரிவா...

வெளியிடப்பட்டது. எனினும் அவ்வாறான விலை மாற்றத்துக்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை அனுமதியளிக்கவில்லை என அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் விலையை 158 ரூபாயால் அதிகரிக்குமாறு விநியோக நிறுவனங்கள் கோரியிருந்தன. எனினும் விலை ஏற்றத்துக்கான அனுமதி வழங்கப்படவில்லை என்று வர்த்தக மற்றும் கைத் தொழில் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோக மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 12.5 கிலோ கிராம் எடையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றுக்கு 154 ரூபாய் இழப்பு ஏற்படுவதாக விநியோக நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (மு)


வேலைவாய்ப்பு

A/L பரீட்சைக்கு தோற்றி விட்டீர்களா?
முகாமைத்துவத்துறையில் சாதனை படைக்க விரும்புகிறீர்களா?

ஆண், பெண் இருபாலாருக்கும் எமது நிறுவனத்தில் இணைய புதிய வேலைவாய்ப்புக்கள் உள்ளன. யாழ்ப்பாணம், வவுனியா கிளைக்கு 40க்கு மேற்பட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- பதவி : விற்பனை மேற்பார்வையாளர்
- பதவி : நிர்வாக உதவியாளர்கள்
- பதவி : விற்பனை பிரதிநிதி
- பதவி : உதவி முகாமையாளர்கள்

Earning 45,000/=

நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளவும். 076 770 7759, 077 999 4807
இறுதித்திகதி 31.08.2018

- முன்னனுபவம் தேவையில்லை.
- 18 - 30 வயதிற்குட்பட்டவர்கள்.

தொடர்பு : ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்



வீடு வாடகைக்கு

K.K.S வீதி பண்டிக்குட்டி பிள்ளையார் கோவில் ஒழுங்கையில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.

077 605 9613



விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

V2 TRAVELS



New Science World

NEW SCIENCE WORLD VICTORY MUST Brown Road, Jaffna.

Navalar Road Junction, Brown Road, Jaffna.

2019 A/L DAY CLASSES

2018 August பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது.

**Physics**
திரு. R.குகன், திரு. R.குமரன் — 11.30 am - 1.30 pm

**Chemistry**
திரு.டயஸ், திரு.K.T.சிவகுமார் — 9.30 am - 11.30 am

**Biology**
திரு.N.T.கஜேந்திரன் - 7.30 am - 9.30 am

**Com. Maths**
திரு.S.கிருஷ்ணா (முன்னாள் முன்னணி ஆசிரியர்) - 7.30 am - 9.30 am
திரு.S.S.செந்தில்ராஜ் — செவ்வாய், புதன், வெள்ளி - 4.30 pm - 6.00 pm
திரு.T.சஞ்ஜீவன் (English Medium) — சனி, ஞாயிறு - 10.00 am - 12.00 pm


(C-3644)

ஆரம்பம் : 05.09.2018 புதன் காலை 7.30

தொடர்பு: 0773364055, 0212216690

www.newscienceworld.net





அதி உயர்தரம் மிக்க செவன் ஸ்டார் ஓடுகள் விற்பனை முகவரும் ஏக விநியோகஸ்தரும்

தொடர்புகளுக்கு:
1075, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
077 651 3299



சுன்னாகத்தில் கடை வாடகைக்கு உண்டு

சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு முன்னால் டாக்டர் சுப்பிரமணியம் வீதியில், 1500 சதுர அடி விஸ்தீரணமுள்ள கடை இரண்டாம் மாடியில் வாடகைக்கு உண்டு. NGO'S/ தனியார் நிறுவனங்களின் பாவனைக்குகந்தது. போதுமான வாகனத்தரிப்பிடமுள்ளது.

தொடர்பு: 0767490219

(C-3641)



உங்கள் பிள்ளைகளின் கனவிற்கு துணை நில்லுங்கள்

Aspirations Education (pvt) LTD

15 வருடங்களிற்கு மேல் வெளிநாட்டு உயர் கல்வி வாய்ப்புக்களை வழங்கி வரும் நிறுவனத்தின் யாழ். கிளையில் Student Advisor ஆக பணிபுரிய இரண்டு யுவதிகளுக்கு உடனடி வேலைவாய்ப்பு.

க.பொ.த உயர்தரம் அல்லது அதற்கு மேல் கல்வி பயின்றவர்கள் மின்னஞ்சல் மூலம் 30-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

E.Mail: jaffna@aspirations.edu.lk

Avnor Complex,
269, A9 Palaly Road, Kandarmadam, Jaffna.
T.P: 077 768 7821
www.aspirations.edu.lk

(C-3641)



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

(சி-3633)

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.